றீமகள்
வெளியீடு

புதிர் மனைவி



சத்தியவான்

மர்ம
50 காசு
நாவல்

COMICS
PDF
TIMES
HSC

புதிர் மனைவி!

COMICS PDF TIMES
HSC

சத்தியவான் M.A.

NOT FOR SALE
FAN MADE

ஸ்ரீமகள் கம்பெனி
௨௨. வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1

வெளியீடு 448
முதற்பதிப்பு பிப்ரவரி 1969
உரிமையுடையது.

கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

விலை 50 காசு
இலங்கையில் 60 சதம்

COMICS PDF TIMES

மொத்த கிளை நிலையங்கள்

150, நேதாஜி ரோடு,
மதுரை-1

14, சின்னக்கடைத் தெரு,
திருச்சி-2

202, வெரைட்டி ஹால் ரோடு.
கோயமுத்தூர்-1

4, சிவாஜி ரோடு,
பெங்களூர்–1A

எம். எஸ். ராமுலு & கம்பெனி
286; சைனா பஜார், சென்னை-1

முதல் பலி

இரவு மணி ஒன்பது. விழுப்புரம்-திருச்சி பாசஞ்சர் ரயில் ஒன்றரை மணிநேரம் தாமதமாக திருச்சி ஜங்ஷனில் வந்து நின்றது. பெண்கள் கம்பார்ட்மெண்டிலிருந்து இறங்கி பிளாட்பாரத்தில் நின்ற அந்தப் பெண் சுற்று முற்றும் பார்த்தாள். அவளை அழைத்துச் செல்ல யாரையோ எதிர் பார்ப்பதாகக் காட்டின அவள் பார்வையும், பாவமும். ஐந்தே நிமிடங்களில் பிளாட்பாரம் வெறிச் சோடியது. பிளாட்பாரத்திலிருந்த பெஞ்சில் அமர்ந்தாள் அந்தப் பெண்.

இருபது வயதின் இளமைப் பூரிப்பை எடுத்துக் காட்டியது அவளுடைய தோற்றம். ஒற்றை நாடியாய்த் துவண்டு விழும் வண்ணம் இருந்த அவள் உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. சிவந்த அவள் முகம் இலேசாக வெளிறத் தொடங்கியது. அவள் பயத்தின் பிடியில் இருப்பதை அவளையும் மீறி அவள் சிறுகச் சிறுக வெளிக் காட்டிக் கொண்டிருந்தாள். மாடிப்படியில் ஏறிவந்து நின்று சுற்று முற்றும் பார்த்து விட்டு தன்னை நோக்கி விரைந்து வந்த அந்த மனிதனைப் பார்த்ததும் அவள் பயம் இன்னும் அதிகமாயிற்று. பெஞ்சியிலிருந்து எழுந்து நின்று கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினாள்.

"நீங்கதானே நீலவேணி? வண்டி ஒன்றரை மணி லேட் என்று தெரிஞ்சு கொஞ்சம் மிதமா இருந்திட்டேன். எட்டரைக் கெல்லாம் டவுனை விட்டுப் புறப்பட்டுட்டேன்... வர்ர வழியிலே ஒரு

ஸாரி ஆக்ஸிடெண்ட்... நான் வந்த டவுன் பஸ்ஸை வேறே வழியாத் திருப்பி விட்டாங்க... ஜங்ஷன் வர நேரமாயிடுச்சு...சரி... புறப்படுங்க!'' எதிரே வந்து நின்றவன் நிறுத்தாமல் பேசிக் கொண்டே போனான்...

''நீங்க யாரு? உங்களை இங்கே யார் அனுப்பி னாங்க? —நடுங்கும் குரலில் கேட்ட நீலவேணியைப் பார்த்து அவன் சிரித்தான்.

''நல்லதும்மா! நீங்க முன் ஜாக்கிரதையா இருக்கிறதை அறிஞ்சு சந்தோஷம்! முன்பின் தெரியாத ஒருவன் வந்து கூப்பிட்ட உடனே அவ னோட புறப்பட்டுடக் கூடாது என்கிறதுலே ரொம்பஜாக்கிரதையா இருக்கீங்க....என்னை டானி யல்தான் அனுப்பினான்... அவன் அவசர வேலை யாக வெளியே ஒரு இடத்துக்குப் போயிருக்கான் உங்களை அழைச்சுக்கிட்டு வரச் சொன்னான்... நீங்க நம்ப மாட்டீங்கன்னு தெரிஞ்சு நீங்க அவ னுக்கு எழுதின லெட்டரையும் என்கிட்டே கொடுத்தனுப்பி யிருக்கான்... இதோ பாருங்க!'' அவன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீலவேணியிடம் காட்டினான்.... கடிதத் தைப் பார்த்ததும் அவனைத் தொடர்ந்தாள் அந் தப் பெண்!

''உறையூருக்குத் தானே போகிறோம்?''— டாக்ஸி மேம்பாலத்தைக் கடந்து ஜன சந்தடி யற்ற பகுதியில் செல்வதைக் கண்டு பதறியவாறு கேட்டாள் நீலவேணி!

''உறையூருக்கா? என்ன அண்ணே இது?.... அந்தப் பெண் உறையூருங்குது.... நீங்க என்ன டான்னா...கீரனூருக்குப் போகச். சொல்றீங்க...'' டாக்ஸி டிரைவர் அதிர்ந்து கேட்டான்.

COMICSPDF TIMES

"நீ நேரே விடு..." முன் சீட்டில் இருந்த அவன் கூறினன். திடீரென்று டாக்ஸி நின்றது.

"அண்ணே... முடியாது! கீழே இறங்குங்க அந்த பெண்ணோடே! வேறே டாக்ஸியைப் பிடிச்சுப் போயிக்குங்க... இல்லாட்டி நான் திரும்ப ஜங்ஷனில் உங்களைக் கொண்டுபோய் சேத்திடறேன். நீங்க இந்த நாலு மைல் வந்ததுக்குக்கூடப் பணம் தரவேண்டாம்!" டாக்ஸி டிரைவர் சற்று மிரண்டு போய்க் கூறினன்.

"என்னப்பா இது? ஏன் இப்படிப் பயப் படறே?"

"எனக்குப்பிடிக்கல்லே... அந்தப் பெண்ணை ஏமாத்தி நீங்க எங்கோ கூட்டிக்கிட்டுப் போறதாத் தெரியுது! இந்த மாதிரி வம்பு வேலைக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் என் டாக்ஸி வராது!"

"அப்போ! நீ டாக்ஸி ஓட்டமாட்டே! உன்னை அனுப்பினலும் நேரே போலீஸிலே போய்ச் சொல்லுவே இல்லே?" பேசிக்கொண்டே சற்றும் எதிர்பாராத நிலையில் டிரைவரின் விலாவில் பிச்சுவாயினல் ஓங்கிக் குத்தினன் அவன்....... டிரைவர் அலறியவாரே சீட்டில் சாய்ந்தான்... நீலவேணி மயங்கிப் பின் சீட்டில் சாய்ந்தாள்.... அந்த மூடன் வெளியே எட்டிப் பார்த்தான். திருச்சி புதுக்கோட்டை சாலையில், திருச்சியிலிருந்து நான்கு மைல் தூரத்தில் இருந்த அந்த இடத்தில், அந்த இரவு நேரத்தில் அதிக நடமாட்டம் இல்லை.... டிரைவரின் உடலை இழுத்து சாலையோரத்தில் மரத்தின் பின்னல் தள்ளிவிட்டு டாக்ஸியில் அமர்ந்தான்.

இரண்டாவது பலி!

"ஸார்! உங்களைப் பார்க்க ஒரு பெண்மணி வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள். சுமார் நாற்பது வயது இருக்கும். பெயர் மேரியாம்!"— கண்களை மூடிய நிலையில் கோழித் தூக்கத்தில் இருந்த சந்திரன் விழியை விரித்துப் பார்த்தான் தன் காரியதரிசி குமாரி கிரேஸியை!

"மாலை 4 மணிக்கு வரச்சொல்! குறித்துக் கொள்!" மீண்டும் கண்களை மூடிய சந்திரனின் அருகில் வந்து நின்றாள் கிரேஸி.

"மாலை வரையில் அவள் உயிருடன் இருப்பாள் என்று சொல்ல முடியாதாம்!"

"சரி! வரச் சொல்!"

"உட்காருங்கள் மேரியம்மாள்!" நீங்கள் சொல்ல விரும்புவதை எங்களிடம் சொல்வதற்கு முன்பு எங்கள் நிபந்தனைகளையும், விதிமுறைகளையும் என் காரியதரிசி உங்களிடம் சொல்லியிருப்பாள் என நினைக்கிறேன்"

"ஆமாம்! எல்லாம் சொன்னார்கள்...! நான் சொல்வதையெல்லாம் கேட்பதால் நீங்கள் எனக்காக வேலை செய்யச் சம்மதித்து விட்டதாக ஆகாது...நான் சொல்வதையெல்லாம் கேட்ட பிறகு என்னை உங்கள் கட்சிக்காரியாக ஏற்றுக் கொள்வது உங்கள் விருப்பம்...அப்படி என்னை உங்கள் கட்சிக்காரியாக ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டீர்களானால், பின்னால் போலீஸ், வழக்கு

COMICS PDF TIMES

என்று ஏதாவது ஏற்பட்டு உங்களைச் சாட்சியாகப் போலீஸ் நீதிமன்றத்துக்கு அழைத்தால், இப்போது நான் உங்களிடம் கூறிய தகவல்களைத் தேவை ஏற்பட்டால் நீங்கள் நீதிமன்றத்தில் சொல்ல நேரலாம்... அதனால் யோசித்து என் பக்கத்தில் நீதி, நியாயம் இருக்கிறதா என்பதைத் தீர்மானித்து, அதன் பிறகு சொல்வதானால் சொல்லுங்கள் என்று குமாரி கிரேஸி கூறினார்கள்''

"அதன் பிறகும் இப்போது நீங்கள் சொல்ல நினைக்கிறீர்கள்....இல்லையா?''

"ஆமாம்!''

"சரி! சாதாரணமாக இங்கு வருபவர்களிடம் இந்த விபரங்களைக் கிரேஸி மட்டுமே கூறுவது வழக்கம்...உங்களைப் பார்த்ததும் நானும் கூற வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.... ஏனென்றால் போலீஸில் சி. ஐ. டி. யாக வேலை பார்த்துவிட்டு விலகித் தனியாகத் தொழில் பார்ப்பவன் நான்! இருந்தாலும் போலீஸ் இலாகாவுக்கு அனுசரணையாக, அதே சமயத்தில் நீதிக்காக என்னால் இயன்றதைச் செய்யவேண்டும் என்பது என் குறிக்கோள்....ஆக என்னிடம் வருவதற்குப் பதில் போலீஸுக்குப் போவதால் பயன் உண்டு என்று உங்களுக்குத் தோன்றினால் நீங்கள் அப்படியே செய்யலாம்...என்னிடம் வரும் சிக்கல்கள் சற்று ரகசியமானவையாக ஆனால், நேர்மையை விட்டுப் பிறழாதவையாக இருக்க வேண்டும்! என்மீது ஏற்கெனவே போலீஸ் இலாகாவிற்கு ஒரு வெறுப்பு! ஆகவே என்னை யார் யார் வந்து சந்திக்கிறார்கள் என்பதையும் போலீஸ் கண்காணித்து வருகிறது... அதோ!

அந்த ஜன்னல் வழியே பாருங்கள். எதிர்க் கடையில் ஒரு ஆள் நின்று பேப்பர் படித்துக்கொண்டிருப்பதுபோல் பாவித்துக் கொண்டிருக்கிறானே அவன் ஒரு மப்டி கான்ஸ்டபிள்....நீங்கள் இங்கே வந்ததை மோப்பம் பிடித்து நின்றுகொண்டிருக்கிறான்!"

"எனக்கு எல்லாம் தெரியும் மிஸ்டர் சந்திரன்! உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள்....நான் மேரி ..வக்கீல் ஜார்ஜின் மனைவி...."

"இருங்கள்..." — சந்திரன் கிரேஸியைப் பார்த்தான்....அவள் நோட்டுப் புத்தகத்தையும், பென்சிலையும் எடுத்து வைத்துக் கொண்டதும், சந்திரன் தலையசைத்தான்.

"நான் ஒரு சிக்கலில் பல வருடங்களாக மாட்டிக் கொண்டிருக்கிறேன்....எனக்குத் திருமணமாகி இருபது வருடங்கள் ஆகின்றன. திருமணத்திற்கு முன் நான் செங்கற்பட்டில் இருந்தபோது, பராங்குசம் என்பவருக்கும், எனக்கும் காதல் ஏற்பட்டது! அவர் செங்கற்பட்டில் பெரிய நகைக்கடை வைத்திருக்கிறார். நான் என் பெற்றோருக்கு ஒரே மகள்....சொத்து வசதிக்குக் குறைவில்லை. எனக்கும், பராங்குசத்திற்கும் இருந்த காதல் கடிதத் தொடர்புடன் மட்டும் முடிந்துவிட்டது! என் பெற்றோரின் வற்புறுத்தலுக்குப் பணிந்து அப்போது நான் ஜார்ஜைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதித்தேன். நான் கன்னியாக இருந்தபோது பராங்குசத்திற்கு எழுதிய கடிதங்களை வைத்துக்கொண்டு இந்த இருபது வருடங்களாக என்னைப் பயமுறுத்தி

COMICS PDF TIMES

வருகிறார் பராங்குசம்! என்னை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும்...."

"கொஞ்சம் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்! நீங்கள் பராங்குசத்தைக் காதலித்தபோது அவருக்குக் கலியாணம் ஆகவில்லையா?"

"இல்லை! என் கலியாணத்திற்கு ஒரு வருஷத்திற்குப் பிறகுதான் அவர் மணம் புரிந்து கொண்டார்!"

"அவர் கலியாணம் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அந்தப் பாவி எனக்கு ஓர் அழைப்பிதழ் அனுப்பியிருந்தான்!"

"திருச்சியில் உங்கள் முகவரி அவனுக்குத் தெரியும்! அப்படித்தானே?"

"ஆமாம்! அதனால்தான் என்னைத் தொடர்ந்து பயமுறுத்தி வருகிறான்!"

"சரி! பராங்குசத்திற்கும் உங்களுக்கும் கடிதத் தொடர்பு மட்டும்தான் என்பது உறுதிதானே?"

"சத்தியமாக!"

"இருபது வருடங்களாகப் பராங்குசம் உங்களை எப்படிப் பயமுறுத்தி வருகிறான்?"

"அந்தக் கடிதங்களை என் கணவரிடம் கொடுக்கப் போவதாகச் சொல்லி வருகிறான்!"

"எப்படி? நேரிலா, கடிதமூலமா அல்லது வேறு ஆள்மூலமா?"

"நேரில்! இந்த இருபது வருஷங்களாக வருஷத்திற்கு இரண்டு முறைகள் என் கணவர்

கோர்ட்டுக்குப் போயிருக்கும் சமயத்தில் என் வீட்டில் என்னைச் சந்தித்து என்னைப் பயமுறுத்தி வருகிறான்...”

“ஏன் பயமுறுத்துகிறான்? உங்களிடமிருந்து அவன் என்ன எதிர் பார்க்கிறான்? பணமா? அல்லது?”

“எதுவும் வேண்டாமாம்! நான் அவனை ஏமாற்றி விட்டதால் என் கணவருடன் என்னை நிம்மதியாக இருக்க அவன் விடமாட்டானாம். கடிதங்களை என் கணவரிடம் அவன் கொடுத்து விட்டால், சிக்கல் எப்படியாவது ஒரு வழியாய்த் தீர்ந்து விடும். எனக்கு ஏதாவது ஒன்று இப்படியோ அப்படியோ ஏற்பட்டு விடும் என்பதால் எதுவும் தெரியாத நிலையில் மனத் தவிப்பிலேயே நான் துடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவன் விருப்பமாம்!”

“ஏன்....நீங்களே உங்கள் கணவரிடம் முழு விவரத்தையும் மறைக்காமல் கூறிவிடலாமே?”

“அப்படித்தான் நான் பல முறைகள் தீர்மானித்தேன். ஆனால் இரண்டு காரணங்களுக்காகத் தயங்கி ஒவ்வொரு முறையும் பின் வாங்கி விட்டேன்! ஒன்று, திருமணத்திற்கு முன்பாக எனக்கு ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக ஒரு ஆபரேஷன் நடந்து எனக்குக் குழந்தைப் பேறு கிடையாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது! அது தெரிந்தும் என் சொத்துக்காக என்னை மணந்து கொள்ள என் கணவர் முன்வந்தார். இப்போது இந்த விஷயம் அவருக்குத் தெரிந்தால், இதற்கும் என் மலட்டுத் தன்மைக்கும் முடிபோட்டு, திருமணத்திற்கு முன்பாகவே ஏதோ நடைபெற்று,

COMICS PDF TIMES

என் பெற்றோர்கள் கலியாணமாகாமல் நான் தாயாகி விட்ட நிலையை மறைக்க இப்படிச் செய்து விட்டார்கள் என்று என் கணவர் நினைப்பார்! நான் சொல்வதை நம்ப மாட்டார். அது இயற்கை. இரண்டாவதாக டானியல் என்னும் இளைஞனை வளர்ப்புமகனாகச் சென்ற பத்து ஆண்டுகளாக நாங்கள் வளர்த்து வருகிறோம்! அவன் என்னைப் பெற்ற தாயை விடப் பெரிதாக மதித்து வருகிறான்... அவனுக்கு இந்த விஷயம் தெரிவதில் எனக்குச் சம்மதமில்லை.... என் கணவர் என்னை மன்னித்து விட்டாலும் அவனிடம் இதைக் கூறாமல் இருக்க மாட் டார். அவர் எதையும் அவனிடம் . மறைக்க மாட்டார்!"

"உங்கள் நிலை எனக்குப் புரிகிறது! இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?"

"பராங்குசத்திடம் இருக்கும் என் கடிதங்கள் பன்னிரண்டு என்னிடம் திரும்பி வரவேண்டும்!"

"அப்படியென்றால் செங்கற்பட்டில் அவன் வீட்டிலிருந்து கடிதங்களைத் திருடி உங்களிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்கிறீர்களா?"

"எப்படிச் செய்ய வேண்டும் என்று எதுவும் நான் உங்களுக்குக் கூறவில்லை. என்ன செய்ய வேண்டும் என்பதைத்தான் சொல்கிறேன். நீங்கள் மறுக்கக் கூடாது என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்!"

"அது இருக்கட்டும்! மாலை வரையில் நீங்கள் உயிருடன் இருப்பதே சந்தேகம் என்று கிரேஸியிடம் கூறினீர்களாமே? ஏன்?"

மேரியம்மாள் மேஜையையே சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்தாள்!

"சொல்கிறேன்! இன்று பராங்குசம் என்னிடம் வந்தால் அவனைச் சுட்டுக் கொன்று விட்டு நானும் இறந்து விடுவது என்ற திட்டத்தில் இருந்தேன்!"

"இன்று பராங்குசம் உங்கள் வீட்டுக்கு வருவார் என்று எதிர் பார்க்கிறீர்களா?"

"ஆமாம்! இன்று தேதி இருபத்தைந்து! அவன் வருவது அநேகமாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அந்தத் தேதியில்தான் வருவான்! என் கணவர் கோர்ட்டுக்குச் சென்றதும் நான் இங்கு புறப்பட்டு வருகிறேன், நான் வீட்டுக்குப் போனதும் அவன் வந்து விடுவான் என நினைக்கிறேன். நீங்கள் என் கடிதங்களை என்னிடம் சேர்த்து விட்டீர்களானல் நான் ஏன் சாகிறேன்? பராங்குசம் ஏன் சாகிறான்? உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானலும் கொடுக்கிறேன்."

அவள் ஒரு நூறு ரூபாய் நோட்டுக் கற்றையை நீட்டினாள்.

சரி! ஐநூறு ரூபாய் என் செக்ரட்டரியிடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளுங்கள்....இன்னும் ஒரு மாதத்தில் உங்கள் கடிதங்களை உங்களிடம் சேர்ப்பிக்கிறேன்...மேலும் ஆகும் செலவுக்குப் பின்னால் நீங்கள் கொடுக்கலாம!"

-மேரி வெளியேறினாள்.

"ஸார்!"

"யெஸ்! கிரேஸி! ஏஏ ஏபி இரண்டு பேரையும் உடனே ஜார்ஜ் வீட்டைக் கண்காணிக்க அனுப்பு...பராங்குசம் அதாவது ஓர் அந்நியர் ஜார்ஜ் வீட்டுக்குள் இன்று மாலைக்குள் நுழைவ

வதைக் கண்டால் உடனே ஒருவன் எனக்குப் போன் செய்து, அவனை ஒருவன் தொடரவேண்டும்!''

வெளியே சென்ற கிரேஸி திரும்பி வந்தாள் ஏஸி என்ற சந்திரனின் ஆளுடன். ஏஸி கூறிய தகவலைக் கேட்டதும் சந்திரன் விழிகளை மூடிய நிலையில் ஒரு நிமிடம் இருந்தான். நகரில் எங்காவது கொலை நடந்ததாகக் கேள்விப்பட்டால் அது பற்றிய விவரங்களை உடனடியாகச் சந்திரனுக்கு அவனுடைய ஆட்கள் தெரிவிப்பது வழக்கம். அந்த வழக்கப்படி அப்போது ஏஸி ஒரு கொலைச் செய்தியுடன் வந்தான். அவன் கூறிய செய்தி—அன்று காலை எட்டு மணி சுமாருக்குப் பிரேமா லாட்ஜில் எட்டாம் நம்பர் அறையில் பராங்குசம் என்ற செங்கற்பட்டு வியாபாரி கட்டிலில் பிணமாகக் கிடப்பது கண்டு பிடிக்கப் பட்டதாம். அவர் விலாவில் கத்தியால் குத்தப் பட்டுக் கொல்லப் பட்டிருக்கிறாராம்! போலீஸ் அங்கு சென்றிருக்கிறதாம்! அன்று காலை 5-மணி சுமாருக்கு பராங்குசம் அறையிலிருந்து நடுத்தரவயதுப்பெண்மணி ஒருத்தி வெளியேறியதைப் பார்த்ததாக லாட்ஜின் வேலையாள் போலீஸிடம் கூறினனும்.

அத்தியாயம் 3

மேரி எங்கே?

"சரி கிரேஸி! ஏஏமை ஜார்ஜ் வீட்டுக்கும் ஏபியை பிரேமா லாட்ஜுக்கும் அனுப்பி முக்கிய தகவல்களை அனுப்பச் சொல்'' சந்திரன் கண்களை மூடிக் கொண்டான்.

"சார்! ஓவல்!" பேசாது ரசித்து ஓவலை உறிஞ்சிக் கொண்டிருந்த சந்திரனை எப்படியோ பார்த்தவாறு எதிரே அமர்ந்தாள் கிரேஸி.

சந்திரன் மேஜை மேலிருந்த பைலைப் புரட்டினான். "ஸார்! மேரியைச் சந்தேகிக்கிறீர்களா சார்!"

"கிரேஸி! ஜாக்கிரதை! இதைப் பற்றி நாம் இப்போது பேசக் கூடாது. எந்த நிமிடத்திலும் இன்ஸ்பெக்டர் தாமோதரன் இங்கு வரலாம்."

"ஹலோ மிஸ்டர் சந்திரன்! என் வரவை நீங்களே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் போல் இருக்கிறது!"

"உட்காருங்கள் மிஸ்டர் தாமோதரன்! உங்கள் வரவை மட்டுமில்லை, என் ஆபீஸுக்கு யார், யார் வர்ராங்க போறாங்க யென்கிறதை யெல்லாம் நீங்க வேவு பார்க்கிறதும், இப்படி மறைஞ்சு இருந்து எங்க பேச்சைக் கேட்டுக்கிட்டு இருந்திட்டு இப்படித் திடும் பிரவேசம் செய்வீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்!"

"போலீஸ் இலாகாவுக்கு இந்த விதி முறைகள் கிடையாது என்பதை நான் உங்களுக்குச் சொல்லனுமா மிஸ்டர் சந்திரன்! அதுவும் போலீஸைக் குழப்புவதையே காரியமா வைச்சுக்கிட்டிருக்கிற உங்ககிட்டே நான் இப்படி வந்தாத்தான் எனக்கு நல்லது!"

'இன்ஸ்பெக்டர் நன்றி. என் திறமையை நீங்க நினைவு வைச்சிருக்கீங்க! ஆனால் யாரையும் குழப்புறது என் வேலையில்லே! குழப்பத்தை நீக்கறதுதான் என் வேலை.... குழப்பத்தைப் போலீஸ் இன்னும் குழப்பற சமயத்திலே

நான் செய்யற காரியம் குழப்பமானதா உங்களுக்குத் தோணலாம்... அது என் தப்பு இல்லே.... கோயமுத்தூர் கன்னிக் கடத்தல் வழக்கிலே நீங்க தான் பாத்தீங்களே.... நான் குழப்பினேனு... இல்லே..."

"மிஸ்டர் சந்திரன்! மறை முகமாச் சொல் றீங்க... நீங்க இல்லேன்னு அந்தச் சிக்கலே என்னாலே தீர்த்திருக்க முடியாதுன்னிட்டு ஒப்புக்கிடறேன்... இப்போ நிலைமை மாறிடுச்சு. நீங்க இப்போ போலீஸ் இலாகாவிலே இல்லே, எனக்கும் ரெண்டு மூனு கேஸைப் பிடிச்சு அனுபவம் ஏற்பட்டிடுச்சு!"

"ரொம்ப சந்தோஷம்! உங்க அனுபவம் இன்னும் வளரணும்கிறதுதான் என் ஆசை! என் சம்பந்தப்பட்ட வரையிலே இப்போ நான் போலீஸ் அதிகாரியா இல்லே என்கிறதுனாலே போலீஸுக்கு விரோதமா இருக்கிறதா ஏன் நீங்க நினைக்கிறீங்க இன்ஸ்பெக்டர்?"

"மிஸ்டர் சந்திரன்! எதுக்கு வீண் பேச்சு! நீங்க போலீஸுக்கு உதவி செய்யறதை வார்த்தையிலே சொல்லாதீங்க...செயலிலே காட்டுங்க!"

"அதாவது நீங்க சொல்றபடி நான் கேக்கணும்... நீங்க போறபாதை தவறுன்னு எனக்குத் தெரிஞ்சாலும் உங்களோடே நான் வரணும்... இதுதானே உதவி உங்க கருத்துப்படி!"

"இவ்வளவு பேசற நீங்க...போலீஸ் இலாகாவிலே இருந்து விலகாம, உங்க யோசனையையும், திறமையையும் கொண்டு போலீஸுக்கு உதவி செய்யலாம் இல்லையா? ஏன் தனியா துப்பறியும் கம்பெனி நடத்திறீங்க சந்திரன்.... உங்க திற

மையை வச்சுப் பணம் சம்பாதிக்கத் திட்டம் போட்டிருக்கீங்க.... அதுக்காகவே சட்டம் படிச்சு வக்கீலா வேறே ஆகியிருக்கீங்க!''

''அதனாலே குற்றவாளிகளை யெல்லாம் நிரபராதிகள் ஆக்க வேலை செய்திட்டு வாரேன்னு நினைக்கறீங்களா? அதுக்கு நேர் மாறுதலா நிரபராதிகளுக்கு முடிஞ்ச உதவி செய்யறதுக்குத் தான் நான் தனியே தொழில் நடத்தறேன். எவ்வளவு கொடுக்க முடியுமோ என் கட்சிக்காரங்களாலே அவ்வளவு பணம் வாங்கறேன்.

''சரி மிஸ்டர் சந்திரன்! உங்களை மறுபடியும் போலீஸ் இலாகாவிலே வேலைக்குச் சேரும்படிக் கேக்கறதுக்காக இப்போ நான் வரல்லே...''

''ஆல் ரைட், என்ன விஷயம்?''

''மேரி இருக்கிறஇடத்தை உங்ககிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டுப் போக வந்திருக்கேன்''

''எனக்குத் தெரியாது இன்ஸ்பெக்டர்.... மேரியைக் காணவில்லைஎன்று இப்போது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும்!'' சந்திரன் பேசிக் கொண்டிருந்தபோதே டெலிபோன் மணி ஒலித்தது.

சிரித்தவாறே இன்ஸ்பெக்டர் ரிஸீவரை எடுத்து ''என்ன விஷயம்?'' என்றார். ''பேசுவது யார்?'' என்ற கேள்வி மறுமுனையிலிருந்து எழுந்தது. ''ஏஏஒன் ஒஒன்'' என்று இன்ஸ்பெக்டர் சொல்லி முடிக்குமுன்பே மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்ட ஒலி கேட்டு இன்ஸ்பெக்டர் ரிஸீவரை வைத்தார். சந்திரன் சிரித்தான். ''தெரியும் மிஸ்டர் சந்திரன்! உங்கள் ஆள் உங்கள் சமிக்ஞை வார்த்தை நீங்கள் சொல்லாமல் எந்தச் செய்தியும்

சொல்லிவிடமாட்டான் என்பது எனக்குத் தெரியும்... போலீஸ் அதிகாரியாயிருந்தபோது நீங்கள் பயன்படுத்திய சமிக்ஞை வார்த்தையை இப்போதும் பயன்படுத்தமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்... இருந்தாலும் சொல்லிப் பார்த்தேன். ரிஸீவரை எடுக்கும்போது ஒருக்கால் மேரியாக இருக்கலாமோ என்று எண்ணினேன்.

"இன்ஸ்பெக்டர்! இப்போது உங்களிடம் நான் எதையும் மறைக்கவில்லை. என் ஆட்களில் ஒருவன் மேரி வீட்டைக் கண்காணிக்கப் போயிருக்கிறான். இன்னொருவன் பிரேமா லாட்ஜுக்குப் போயிருக்கிறான்! அவர்களில் ஒருவன்தான் இப்போது போன் செய்திருக்கிறான்! மேரி எங்கு இருக்கிறாள் என்று எனக்குத் தெரியாது."

"அப்போது காலை 10 மணிக்கு மேரி உங்களைச் சந்தித்தபோது அவளை எங்கோ போய் ஒளிந்துகொள்ளும்படி நீங்கள் சொல்லவில்லை என்கிறீர்கள். சந்திரன், நீங்கள் சொல்வதை நான் நம்ப வேண்டும் என்றால் காலையில் மேரிக்கும், உங்களுக்கும் இடையில் நடந்த பேச்சு விவரத்தை நீங்கள் சொல்லவேண்டும்.

"இன்ஸ்பெக்டர்! மேரியை எதற்காக நீங்கள் தேடுகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. என்னை நீங்கள் நம்பவேண்டும் என்பதற்காக என் கட்சிக்காரரின் சொந்த விஷயங்களை வெளியிட என் தொழில் தர்மம் என்னை அனுமதிக்காது."

"மேரி உங்கள் கட்சிக்காரியா? அப்போது இந்தக் கொலைக் குற்றம் தன்மீது சாட்டப்படும் என்று அவள் எதிர் பார்த்திருக்கிறாள் என்று

தெரிகிறது. நான் இப்போது மேரியைத் தேடு வது பராங்குசம் கொலை சம்பந்தமாக சில கேள் விகள் அவளைக் கேட்க விரும்புவதாலேயே. ஆனால் அவள் முந்திக்கொண்டு உங்கள் கட்சிக் காரியாகி, தலைமறைவாக வேறு போயிருக் கிறாள்''

"அவசரப் படாதீர்கள் இன்ஸ்பெக்டர். இந் தக் கொலை வழக்கு சம்பந்தமாக மேரி என் கட் சிக்காரி என்று நான் சொல்லவேயில்லையே. அவள் சொந்த விஷயத்தைக் கவனிக்கும்படி என்னை நியமித்திருக்கிறாள்...."

"மிஸ்டர் சந்திரன், கடைசியாக ஒன்று. மேரியின்மீது சந்தேகம் வலுத்துக்கொண்டு வரு கிறது! குற்றவாளியோ இல்லையோ போலீஸ் தேடும் ஒரு நபருக்கு உதவி செய்வது சட்டப்படிக் குற்றம் என்று......"

"எனக்கு நீங்கள் சொல்லத் தேவையில்லை இன்ஸ்பெக்டர்! நான் தனிப்பட்ட முறையில் துப் பறியும் தொழில் பார்ப்பதற்கு லைசென்ஸ் பெற் றிருக்கிறேன். அதற்கான விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் என் தொழிலைப் பார்க்கிறேன் ...நான் செய்வது தவறு என்று நீங்கள் கருதி னால் என்மீது தாராளமாகச் சட்டப்படி நடவ டிக்கை எடுக்கலாம்....ஆனால் அந்த நடவடிக்கை யின் விளைவிலிருந்து நீங்கள் தப்பிவிட முடியாது.'' —சந்திரன் பேசி முடிக்கவும் இன்ஸ்பெக்டர் வெளியேறினார்.

அத்தியாயம் 4

புதிர் மனைவி!

"உட்காருங்கள் மிஸ்டர் ஜார்ஜ்! நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"—தன் முன் னமர்ந்த ஜார்ஜையே கூர்ந்து கவனித்தான் சந்திரன்.

"என் மனைவி மேரியைக் காணவில்லை.... கோர்ட்டிலிருந்து வந்ததிலிருந்து அவளைக் காணோம்...போலீஸ் வந்து அவளைப்பற்றி என்னிடம் கேள்விகள் கேட்டது"

"இந்த விஷயத்தை என்னிடம் எதற்காக நீங்கள் சொல்கிறீர்கள் ஜார்ஜ்?"

"என் மனைவி மேரி இன்று காலை உங்களைச் சந்தித்ததாக அறிகிறேன்...அதனால் உங்களுக்கு..."

"உங்களுக்கு எப்படி அது தெரியும்...? சொல்லுங்கள் ஜார்ஜ்! நீங்கள் எதையாவது மறைக்க முயலுவதன் மூலம் சிக்கல் இன்னும் அதிகமாகும்....நீங்களும் வக்கீல்தானே? எதற்காக உங்கள் மனைவியைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தீர்கள்?"

"டிடெக்டிவ் ஸார்!"—ஜார்ஜ் அதிர்ந்து போய் எழுந்து நின்றார்.

"உட்காருங்கள் ஜார்ஜ்! நீங்கள் வெறும் வக்கீல்....நான் வக்கீல் மட்டுமில்லை டிடெக்டிவும்கூட! அதனால் எப்படி அதைத் தெரிந்து கொண்டேன் என்று மலைக்காதீர்கள்....எங்கள் முறை தனி! உங்களிடம் வேண்டுமானால் கூறுகிறேன். என்

னைச் சந்தித்துத் திரும்பும் ஒவ்வொருவரையும் என் ஆட்கள் தொடருவார்கள் அவர்கள் அறியாமல்....அப்படி இன்று காலை உங்கள் மனைவியைத் தொடர்ந்த என் ஆட்கள், உங்கள் மனைவியைத் தொடர்ந்த உங்கள் ஆட்களைக் கண்டிருக்கிறார்கள்! அதனால் சொல்லுங்கள்...எதற்காக உங்கள் சொந்த மனைவியையே வேவு பார்க்கத் துணிந்தீர்கள்?"

"சொல்கிறேன் மிஸ்டர் சந்திரன்! போலீஸ் என்னிடம் அந்தக் கேள்வி கேட்கவில்லை...உங்களை ஏமாற்ற முடியாது என்பதால் மட்டுமில்லை, உங்களை ஏமாற்ற எண்ணினால் என்னையே ஏமாற்றிக்கொள்வேன் என்பதும் எனக்குப் புரிகிறது! இன்று அதிகாலை நான்கு மணி சுமாருக்கு வெளியே கார் புறப்படும் ஒலி கேட்டு அறைத் தூக்கத்திலிருந்து விழித்துப் பார்த்தேன். ஷெட்டிலிருந்து என் கார் புறப்படுவதைப் பார்த்தேன். என்னிடம் மோட்டார் சைக்கிள் வேறு இருக்கிறது. என் காரில் யார் சென்றார்கள் என்பது கூடத் தெரியாத நிலையில் என் காரைத் தொடர்ந்தேன். கார் பிரேமா லாட்ஜ் வாசலில் நின்றதும் அதிலிருந்து என் மனைவி இறங்கி உள்ளே செல்வதைப் பார்த்ததும் நான் என்ன உணர்ந்தேன் எப்படி உணர்ந்தேன் என்று எனக்கே தெரியவில்லை! நானும் சற்று நேரம் கழித்து உள்ளே செல்ல எண்ணினேன். என்னையறிந்தவர் யாரும் அங்கில்லை...என்ன காரணம் சொல்லி உள்ளே போவது என்று எனக்குத் தெரியவில்லை. எனவே வெளியே நின்று கொண்டிருந்தேன். மாடி வராந்தா வழியாக விரைந்து சென்ற மனைவி ஓர் அறைக் கதவைத் திறந்து உள்ளே

நுழைந்ததைக் கண்டேன். அந்த அறையில் ஏற்கெனவே விளக்கு எரிந்து கொண்டிருந்தது! சுமார் மூன்று அல்லது நான்கு நிமிடங்களில் என் மனைவி வெளியே வருவதைக் கண்டு நான் மறைந்து கொண்டேன்...என் மனைவி என் காரில் புறப்பட்டதும் துணிந்து உள்ளே சென்று நான் அந்த அறைக்குள் நுழைந்தேன்...அப்போதும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது...நம்புங்கள் மிஸ்டர் சந்திரன்....அங்கே கட்டிலோடு கட்டிலாக ஒருவன் பிணமாகக் கிடந்தான்... அதிர்ச்சியுற்றேன்....அருகில் சென்று பார்த்தேன்...விலாவில் கத்தி...! இரத்தம்....! சமாளித்துக்கொண்டு அறை விளக்கை அணைத்தேன். வராந்தா வழியாக வெளியேற எனக்குத் தைரியமில்லை. இந்தக் கொலை விஷயம் பரவிப் பின்னால் என்னை அடையாளம் கண்டு சந்தேகப்படுவார்களோ என்று பயந்து, அறை ஜன்னல் கண்ணாடிக் கதவைத் திறந்து பின்புறம் தோட்டத்தில் துணிந்து குதித்தேன்...பின்புறச் சுவர் வழியாக ஏறிக் குதித்து வெளி வந்தேன்!"

"உங்கள் மோட்டார் சைக்கிள்?"

"முன்புறமாக வந்து அதை எடுத்துக் கொண்டுதான் வந்தேன்!"

"போலீஸில் இதைப்பற்றி எதுவும் நீங்கள் கூறவில்லையா?"

"இல்லை! என் மனைவி எங்கே என்று கேட்டார்கள். தெரியாது என்று மட்டும் கூறினேன்! அவள் காலையில் எங்கு சென்றாள் என்று கேட்டார்கள். வெளியே போனாளா இல்லையா என்பது எனக்குத் தெரியாது; நான் தூங்கிக் கொண்டிருந்தேன் என்று சொன்னேன்!"

"சரி! காலையில் பிரேமா லாட்ஜுக்கு உங்கள் மனைவி சென்றதால் உங்கள் மனைவியைச் சந்தேகப் பட்டு வேவு பார்க்கத் தீர்மானித்தீர்கள்.... அப்படித்தானே?"

"சந்தேகப்பட்டு என்றால்....அவள் ஏதோ ஒன்றை என்னிடமிருந்து மறைக்கப் பார்க்கிறாள் என்று நான் நினைத்தேன். அதனால் என் வேலையாளை விட்டு அவளைக் கண்காணிக்கச் செய்தேன்....கொலையுண்ட நபரை அதற்கு முன் நான் பார்த்ததில்லை... இப்போது அவன் செங்கற்பட்டு வியாபாரி பராங்குசம் என்பவன் என்றறிந்தேன் என் மனைவியின் சொந்த ஊரும் செங்கற்பட்டு தான்....ஆகவே இதில் ஏதோ மர்மம் இருக்கலாம் என்று நினைக்கிறேன்!"

"சரி மிஸ்டர் ஜார்ஜ்! என்னிடம் நீங்கள் எதையும் மறைக்காமல் சொல்லிவிட்டதறிந்து மகிழ்ச்சி! நீங்கள் எதையும் மறைக்கவில்லை என்றும் நம்புகிறேன். முக்கியமாக....நீங்கள் பார்த்த போதே பராங்குசம் பிணமாகத்தான் இருந்தார் என்பது உண்மைதானே?"

"நான் சொல்வது உண்மை மிஸ்டர் சந்திரன்"

"சரி....நீங்கள் போகலாம்! உங்கள் மனைவி இருக்கும் இடம் இதுவரை எனக்குத் தெரியாது.... இனிமேல் தெரியலாம்! நீங்கள் நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று என்னிடம் கூறியதை அப்படியே இன்ஸ்பெக்டரிடம் சொல்லி விடுங்கள்!"

"போலீஸ் ஸ்டேஷனுக்கு வரத் தேவையில்லை மிஸ்டர் சந்திரன்! நானே வந்து விட்

டேன்!"—உள்ளே நுழைந்தார் இன்ஸ்பெக்டர் தாமோதரன்!

"இப்போதாவது நான் உங்களுக்கு உதவி செய்வதை நம்புவீர்கள் என நினைக்கிறேன் இன்ஸ்பெக்டர்!"

"நான் நிச்சயம் வருவேன் என்பதையறிந்து நீங்கள் சொல்லியிருக்கலாம் அல்லவா? எப்படியிருந்தாலும் மிஸ்டர் சந்திரன் உங்களுக்கு நன்றி! வாருங்கள் ஜார்ஜ்! போகலாம்! நீங்கள் இவரிடம் சொல்லிக் கொண்டிருந்ததையெல்லாம் கதவுக்கு அப்பாலிருந்து நான் ஏற்கனவே குறித்துக் கொண்டு விட்டேன்! இருந்தாலும் ஸ்டேஷனுக்கு வந்து நீங்கள் உங்கள் கையால் எழுதிக் கொடுத்து விடுங்கள்."

ஜார்ஜ் பரிதாப நிலையில் எழுந்து நின்றார்.

"பயப்படாதீர்கள் மிஸ்டர் ஜார்ஜ்! இந்தத் தகவலை நீங்கள் போலீஸில் முதலில் கூறவில்லை என்பது மட்டும் தான் நீங்கள் செய்திருக்கும் குற்றம்! குற்றமெதையும் மறைக்க நீங்கள் முயல வில்லை!"—சந்திரன் ஜார்ஜுக்குத் தென்பூட்டி அனுப்பினான்.

அந்தியாயம் 5

இன்ஸ்பெக்டர் போட்ட பூட்டு

பிரேமாலாட்ஜ் மானேஜர் சந்திரனைப் பார்த்த பார்வை, அவன் வருகையை அவர் விரும்ப வில்லை என்பதைக் காட்டியது. சந்திரன் அவனாக மானேஜர் அருகில் நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

"தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள் மிஸ்டர் சந்திரன்! உங்களிடம் எதுவும் சொல்லும் நிலையில் நானில்லை!"

"தெரியும் மானேஜர் சார்! வேறு யாரிடமும், குறிப்பாக என்னிடம் எந்தத் தகவலும் சொல்லக் கூடாது என்று இன்ஸ்பெக்டர் உங்களிடம் சொல்லியிருப்பார் என்று எனக்குத் தெரியும்!"

"தெரியும் என்றால் நீங்கள் இங்கு வந்திருக்கவே வேண்டாமே?"

"மானேஜர் சார் தயவு செய்து ஆத்திரப் படாதீர்கள்! உங்கள் லாட்ஜில் ஒரு கொலை நடந்திருக்கிறது. அதனால் உங்கள் லாட்ஜின் பெயருக்குக் கேடு ஏற்பட்டு, உங்கள் தொழில் பாதிக்கப் படலாம்!"

"என்ன மிஸ்டர் சந்திரன்! பயமுறுத்துகிறீர்களா?"

"பயமுறுத்தவில்லை! உங்கள் லாட்ஜுக்கு ஏற்பட்டிருக்கும் இந்தக் கெட்ட பெயரைப் போக்கவேண்டுமென்றால் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும். நிரபராதியைத் தண்டித்து விட்டால், உண்மைக் குற்றவாளிக்கு இன்னும் தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகமாகும். அடுத்தடுத்து இப்படிக் கொலைகளைத் தொடர்ந்து உங்கள் லாட்ஜிலேயே செய்வான்!"

"இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்?"

"எட்டாம் நம்பர் அறையை நான் பார்க்க வேண்டும்!"

"மன்னிக்க வேண்டும் மிஸ்டர் சந்திரன்! அந்த அறையைப் பூட்டிப் போலீஸ் சீல்வைத்துப் போயிருக்கிறது!"

COMICS PDF TIMES

"நான் எதிர்பார்த்ததுதான்! சரி உங்கள் லாட்ஜை நான் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன்!"

"தாராளமாக! வாருங்கள் போவோம்!"

மானேஜர் உடன்வர சந்திரன் மாடிப்படிகளில் ஏறினான்.

பிரேமா லாட்ஜ் 'ப' வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றை மாடிக் கட்டிடம். மத்தியில் திறந்த வெளியில் கார்களை நிறுத்துவதற்கு வரிசையாக ஷெட்டுகள். மூன்றுபக்கங்களிலும், கீழ்த் தளத்திலும், மேல் மாடியிலும் வரிசையாக அறைகள்....முன்னால் நீண்டவராந்தா! இடப்புற வரிசை கோடியில் லாட்ஜில் தங்குபவர்களுக்காக உள்ள உணவு, சிற்றுண்டிச் சாலை! லாட்ஜின் முன்புறம் மானேஜர் அறை. மானேஜர் அறையை அடுத்தும், எதிர்த்தும் இரண்டு புறங்களிலும் மாடியின் இரண்டு பக்கங்களுக்கும் செல்லப் படிக்கட்டுகள், இடப்புறக்கோடியில் சிற்றுண்டிச் சாலையிலிருந்து மாடிக்குச் செல்லவும் படிக்கட்டுகள். அப் படிக்கட்டுகள் வழியே ஏறி இடப்புறம் திரும்பினால் இடப்புற வரிசைக்கும், வலப்பக்கம் திரும்பினால் மத்திய வரிசைக்கும், அங்கிருந்து வலப்புற வரிசைக்கும் செல்லலாம். இம் மூன்று படிக்கட்டுகளைத் தவிர வேறு வழி மாடிக்குக் கிடையாது.

மானேஜர் அறைக்குப் பக்கத்திலிருந்த படிக்கட்டு வழியாக மாடிக்குச் சென்றனர் சந்திரனும், மானேஜரும். எதிர்ப்புற வரிசையில் எட்டாம் நம்பர் அறையைச் சந்திரனுக்குச் சுட்டிக் காட்டினார் மானேஜர். நேர் எதிரே தெரிந்த பூட்டியிருந்த அந்த அறைக் கதவை ஊன்றிப் பார்த்தான் சந்திரன்.

''கொலை நடந்த அன்று அந்த அறைக்குப் பக்கத்து அறைகளில் இருந்தவர்களைப் போலீஸ் விசாரணை செய்திருக்கும் என நினைக்கிறேன்...''

''அதற்கு அவசியமே ஏற்படவில்லை மிஸ்டர் சந்திரன்... ஏனென்றால் பக்கத்து அறைகள் இரண்டும் காலியாக இருக்கவேண்டும் என்று கூறி அந்த அறைகளுக்கான வாடகையையும் பராங்குசமே கொடுத்து விட்டார்! அதனால் 7-ம் நம்பர் அறையும், 9-ம் நம்பர் அறையும் காலியாகத்தான் இருந்தன.

''வேடிக்கையாக இருக்கிறதே மானேஜர்! அவர் ஏன் அப்படி விரும்பினார் என்று நீங்கள் கேட்க வில்லையா?''

''இல்லை.... இங்கே தங்க வருபவர்களிடம் நான் கேள்விகள் கேட்பது கிடையாது! அப்படிக் கேட்பது முறையல்ல என்றும் நினைக்கிறேன்!''

''சரி இதற்கு முன் பராங்குசம் எப்பொழுதாவது உங்கள் லாட்ஜில் தங்கியிருக்கிறாரா?''

''இல்லை! இதே கேள்வியை இன்ஸ்பெக்டரும் கேட்டார். லாட்ஜ் லெட்ஜரைப் பார்த்ததில் அவர் பெயரில் யாரும் தங்கியதாகத் தெரிய வில்லை... அவரை இதற்கு முன் பார்த்ததாகவும் எனக்கு நினைவில்லை... லாட்ஜ் வேலையாட்களும் அப்படித்தான் கூறினார்கள்!''

''சரி! இன்று காலை ஒரு பெண்மணி அவர் அறையிலிருந்து வெளியே சென்றதைப் பார்த்த தாக லாட்ஜ் வேலைக்காரன் சொல்லியிருப்பதாக அறிகிறேன்... நான் அவனிடம் சில கேள்வி கள் கேட்கலாமா?''

''மன்னிக்க வேண்டும் மிஸ்டர் சந்திரன், அவனை நீங்கள் கேள்வி கேட்க நான் அனுமதிக் கக்கூடாது என்று இன்ஸ்பெக்டர் என்னிடம்

கண்டிப்பாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அவனும் உங்களுக்கு எதுவும்சொல்லமாட்டான்!"

"சரி! நீங்கள் அப்படியொரு பெண்ணைப் பார்த்தீர்களா?"

"இல்லை! நான் காலை 6 மணிக்குத்தான் கண் விழித்தேன்" பேசிக்கொண்டே சந்திரனும், மானேஜரும் 8-ம் நம்பர் அறைக்கெதிரே வந்து நின்றனர். கதவு சீல்வைக்கப்பட்டதுடன் வெளிப்புற ஜன்னலும் அடைக்கப்பட்டிருந்தது... ஒன்பதாம் நம்பர் அறையின் கதவின் வெளியே பூட்டு இல்லாததைக் கண்ட சந்திரன் மானேஜர் பக்கம் திரும்பினான்.

"இந்த அறையில் இன்று மாலையிலிருந்து ஒருவர் தங்கியிருக்கிறார்..."

"ஏன்? வேறு அறை எதுவும் காலியில்லையா? தைரியமாகக் காலையில் கொலைநடந்த அறைக்குப் பக்கத்தில் தங்கி யிருக்கிறாரே!"

"அவருக்குப் பேய், பிசாசு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லையாம்! அதனால் என்னதான் ஆகிறது என்று பார்ப்பதற்காகவே இந்த அறையில் தங்க விரும்புகிறேன் என்று சொல்லி இந்த அறையைக் கேட்டார்!"

கவனமில்லாமல் மானேஜர் கூறியதைக் கேட்டுக்கொண்டே நடந்த சந்திரன், சற்று நேரத்தில் மானேஜரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

அத்தியாயம் 6

மாஜிக் நிபுணர்

காலைப் பத்திரிகையைப் பார்த்த சந்திரன் ஊன்றிப் படிக்கத்தொடங்கினான் ஒரு செய்தியை.

நின்ற மேஜிக் நிபுணரைக் கேட்டார் பிரேமா லாட்ஜ் மானேஜர்.

"கொலை நடந்த அறைக்குப் பக்கத்து அறையில் தங்க வேண்டும் என்று நான் விரும்புவதைக் கொண்டு என்னை நீங்கள் சந்தேகிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். நான் அந்த அறையில் தங்க விரும்புவதால், காரணத்தை உங்களிடம் தனியாகக் கூறுகிறேன். தயவு செய்து அறைக் கதவை அடைத்துச் சிறிது நேரத்திற்கு யாரும் உள்ளே வராதபடி வந்தமருங்கள்."

"மானேஜர் சாகிப்! உங்களுக்குப் பேய் பிசாசில் நம்பிக்கை உண்டா?"

"நம்பிக்கை இருக்கிறது என்றும் சொல்ல முடியாது, இல்லை என்றும் சொல்ல முடியாது!"

"சரி! கேளுங்கள்! நேற்று அதிகாலை இங்கு எட்டாம் நம்பர் அறையில் ஒருவர் கொலை செய்யப் பட்டார் என்று காலைப் பத்திரிகையில் பார்த்தேன்....நான் சென்னையிலிருந்து வருகிறேன். வருடத்திற்கு இரண்டு தடவைகள் நான் திருச்சிக்கு வருவேன். ஒரு வாரம் தங்கி முக்கிய தெருக்களில் மாலை நேரத்தில் என் மாஜிக், குறளி வித்தைகளைக் காண்பிப்பேன். எல்லா நகரங்களுக்கும் செல்வேன்...பத்திரிகையில் செய்தியைப் படித்ததும் இம்முறை உங்கள் லாட்ஜில், அந்த அறைக்கு அடுத்த அறையில் தங்குவது என்று என் தொழிலுக்காகத் தீர்மானித்தேன்!"

"உங்கள் தொழிலுக்காகவா?"

"ஆமாம்! கொலை செய்யப் பட்டவரின் ஆவி இரண்டு நாட்களுக்கு இங்குதான் சுற்றிக் கொண்டிருக்கும்... அவர் எந்த நோக்கத்துடன் இங்கு வந்தாரோ அது நிறைவேறுவதற்கு முன்பாக அவர் கொலை செய்யப் பட்டிருந்தால், இரண்டு

நாட்கள் மட்டுமில்லை...எப்போதும், அவருடைய ஆயுட்காலம் எப்போது முடிய வேண்டுமோ அது வரைக்கும் அந்த ஆவி இங்குதான் இருக்கும்... அவர் வந்த காரியம் முடிந்த பிறகு அவர் கொலை செய்யப் பட்டிருந்தால், அவருடைய ஆவி இரண்டு நாட்களில் இங்கிருந்து புறப்பட்டு இப்பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கும்...எந்தத் திதியில் கொல்லப் பட்டதோ, அந்தத் திதி நாளன்று இந்த அறைக்கு வந்து கொண்டே இருக்கும்...."

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா?"

"நீங்கள் மட்டுமில்லை மானேஜர் சாஹிப்! இன்று படித்தவர்களில் பெரும்பாலோர் நம்நாட்டில் பேயாவது பிசாசாவது என்கிறார்கள்... மேல்நாட்டு அறிஞர்கள்கூட ஆவி நடமாட்டம் உண்டு என்று ஒப்புக் கொள்ளும்போது நம்மவர்கள் இப்படிச் சொல்வது ஒரு பெருமை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இன்று இரவு என்னுடன் என் அறையில் தங்கியிருப்பதற்குத் தயாராக இருந்தால் கொலைசெய்யப்பட்டவரின் ஆவி நடமாட்டத்தை உங்களுக்குக் காட்டுகிறேன்"

"அது இருக்கட்டும்! எதற்காக நீங்கள் அவர் ஆவி நடமாட்டத்தைப் பார்க்க விரும்புகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்"

"சொல்கிறேன் மானேஜர் சாஹிப்! அப்போதாவது என்மீது உங்களுக்கு உள்ள சந்தேகம் போகும்...இல்லையென்றால் என்னைப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடமாட்டீர்களா? இன்று இரவு அவருடைய ஆவியைக் கண்டு அதை என் சக்திக்குள் அடக்கி என் குறளி வித்தைக் காரியங்களுக்குப் பயன் படுத்திக் கொள்ள விரும்

COMICS PDF TIMES

புகிறேன். ஏற்கெனவே என் சக்திக்குள் மூன்று நான்கு ஆவிகள் அடங்கி யிருக்கின்றன. அவற் றுள்ஒன்று பெண் ஆவி! இந்த ஆவியை என் சக் திக்குள் கொண்டு வந்து விட்டேன் என்றால் இதைக் கொண்டு நான் எவ்வளவோ காரியங்கள் செய்யலாம்...அதையெல்லாம் நான் சொல்லக்.... கூடாது அது என் தொழில் ரகசியம்...நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன். என்சக்திக்குள் இருக்கும் ஆவியை நான் ஏவி விட்டு யாரை யாவது பிடித்துக் கொள்ளச் செய் வேன் பிறகு நானே அதை அந்த நபரிடமிருந்து விரட்டி என் சக்திக்குள் கொண்டு வருவேன்... பணம் சம்பாதிக்க இதைச் செய்கிறேன்—நான் இதை உங்களிடம்தான் முதலில் வெளியிடு கிறேன்...."

"பயங்கரமாக இருக்கிறதே! இப்போது அந்த ஆவி இங்கு இருக்கிறது என்றால் அதுவாக யாரையாவது பிடித்துக் கொள்ளாதா?"

"கொலை செய்யப்பட்ட திதியிலிருந்து அடுத்த திதிவரை யாரையும் அது பிடித்துக் கொள்ளாது. அதன் பிறகுதான் பிடிப்பதாக இருந்தால் பிடித் துக் கொள்ளும். அப்படி ஒருவரைப் பேய் பிடித் திருந்தால், அந்தப் பேயை விரட்டி அதை என் சக்திக்குள் கொண்டு வருவது மிகவும் எளிது!"

"அந்த ஆவியுடன் நீங்கள் பேச முடியுமா?"

"தாராளமாக! ஆவியுடன்பேசுவது என்றால் மனிதர்களுடன் பேசுவதுபோல் இல்லை...அதற்கு என்று தனிச் சங்கேத பாஷை இருக்கிறது!"

"பரவாயில்லையே! அப்படியென்றால் பராங் குசம் ஆவியிடமிருந்தே கேட்டுவிடலாமே அவ னைக் கொன்றது யார் என்று?"

"கேட்கலாம்! நான் சொல்வதைப் போலீஸ் நம்ப வேண்டுமே! தவிர ஆவிகள் சொல்வதைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்வதற்கு நமது சட்டத்தில் இடமில்லை."

'மாஜிக் நிபுணராக இருக்கும் உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே?"

"இப்போது நீங்கள் கூறியதுபோல் எத்தனையோ பேர் கேட்டிருக்கிறார்கள்! அப்போது போலீஸ் என் சாட்சியத்தை ஏற்க மறுத்திருக்கிறது. அதனால்தான் எனக்குத் தெரியும். நீங்கள் அந்த அறையைக் கொடுக்க இப்போதாவது சம்மதிக்கிறீர்களா?"

"தாராளமாக!"

"இன்று இரவு என் அறையில் நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள் மானேஜர்! ஆவி நடமாட்டத்தை உங்களுக்குக் காட்டுகிறேன்!"

"வேண்டாம்! நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்!" மானேஜரின் குரல் அவர் நடுக்கத்தையும் பயத்தையும் காட்டியது. புறப்படப்போன மாஜிக் நிபுணரை மானேஜர் தடுத்து நிறுத்தினார்.

"இதோ பாருங்கள்! "ஆவி நடமாட்டத்தைப் பற்றி வேறுயாரிடமும் எதுவும் சொல்லாதீர்கள்."

"இதை நீங்கள் சொல்லவேண்டுமா எனக்கு? நீங்கள் கவலைப் படாதீர்கள்... அதனால்தானே இந்த விஷயத்தை நானே உங்களிடம் ரகசியமாக சொல்ல விரும்பினேன்" மாஜிக் நிபுணர் புறப்பட்டார்.

ஏழாம் நம்பர் அறை இரண்டு நாட்களுக்கு அடைக்கப்பட்டே இருந்தது. மாஜிக் நிபுணர் வெளியே வரவேயில்லை.

மூன்றாவது பலி

மூன்றும் நாளிரவு பன்னிரண்டு மணி... பிரேமா லாட்ஜில் மானேஜர் அறையிலும், வராந்தாக்களிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. திடீரென்று இடப்புற மாடிவராந்தா விளக்குகள் அணைந்தன. அதையடுத்து மானேஜர் அறை டெலிபோன் அலறியது. ரிஸீவரைக் கையிலெடுத்தார் மானேஜர்.

"மானேஜர்! ஒன்பதாம் நம்பர் அறையில் ஏதோ அலறல் கேட்கிறது...உடனே வேலையாட்களுடன் வாருங்கள். நான் ஏழாம் நம்பர் அறைக்காரர் பேசுகிறேன்."

ஒரு நிமிடத்தில் நாலைந்து பேருடன் மானேஜர் ஒன்பதாம் நம்பர் அறையின் முன்னே வந்து நின்றார். அவருக்கு முன்னே அங்கு வந்து நின்று கொண்டிருந்தார் மாஜிக் நிபுணர்.

"மானேஜர்! திடீரென்று வராந்தா விளக்கு அணைந்ததைப்பார்த்து நான் அறைக்கு வெளியே வந்தேன்... உடனே இந்த அறைக்குள்ளிருந்து 'ஐயோ' என்ற அலறல் கேட்டது. உடனே என் அறையிலிருந்து உங்களுக்குப் போன்செய்தேன். வராந்தா விளக்குகளை முதலில் போடுங்கள்" மாஜிக் நிபுணர் சொல்லி முடிக்குமுன்பு வராந்தா விளக்குகள் எரிந்தன.

மானேஜர் ஒன்பதாம் நம்பர் அறையைத் தட்டினார். பதில் இல்லை. மீண்டும் ஓங்கித் தட்டினார்.

"உள்ளே ஆள் இருந்தால் கதவைத் திறங்கள். இல்லையென்றால் கதவைஉடைத்துக்கொண்டு

வரவேண்டியிருக்கும்'' மானேஜர் உறக்கக் கத்தினார்.

''மானேஜர் இரண்டு பேரைப் பின்புறம் அனுப்புங்கள் உடனே... அறை ஜன்னலுக்குக் கீழே போய்ப் பார்க்கச் சொல்லுங்கள்'' இருவர் விரைந்தனர். மீண்டும் மானேஜர் கதவைத் தட்டப்போன சமயத்தில் கதவு படீரெனத் திறந்தது. அறை விளக்கு எரியவில்லை உள்ளிருந்து ஒருவர் வந்தார்.

''என்ன இது மானேஜர்? நள்ளிரவில் ஏனிப்படித் தொந்தரவு கொடுக்கிறீர்கள்?''

''உங்கள் அறையில் ஏதோ அலறல் கேட்டதாக அறிகிறேன். என்னவென்று பார்க்கவேண்டியது என் கடமை!''

''என் அறையிலா? யார் சொன்னது? நிம்மதியாக நான் தூங்கிக்கொண்டிருக்கிறேன்.''

''என்ன இது? இவர் இப்படிச் சொல்கிறார்? நீங்கள் என்னவென்றால்....'' மானேஜர் மாஜிக் நிபுணர்பக்கம் திரும்பினார். மாஜிக் நிபுணர் சடாரென்று அறைக்குள் நுழைந்து அறைவிளக்கைப் போட்டார்.

''மூட்டாள்! என்ன இது.... கொஞ்சம்கூடப் பண்பாடு இல்லாமல் அடுத்தவன் அறைக்குள் நுழைந்து...'' ஒன்பதாம் நம்பர் அறைக்காரர் மாஜிக் நிபுணரை நோக்கிப் பாய்ந்தார். மாஜிக் நிபுணர் விலகிக் கொண்டார்.

''மானேஜர்! நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள் இந்த அறையை...'' மாஜிக் நிபுணர் முடிக்குமுன்பாக மேஜைமீது இருந்த பேப்பர்வெயிட்டை எடுத்து அறைப் பல்பை நோக்கி எறிந்தார் அந்த அறைக்காரர். அடுத்த விநாடியில் பல்ப் சிதறியது. அறைக்குள் மீண்டும் அந்தகாரம். அந்த இரு

ளூடே அறைக் கதவு படாரென்று அடைக்கப் படும் ஒலி. அதையடுத்து அறைக்குள் துப்பாக்கி ஒலி... தடதடவென்று ஓடும் ஒலி....

"கதவைத் திறவுங்கள்" அறைக்கு வெளியே யிருந்து மானேஜர் அலறினார். கதவைத் திறந்து கொண்டு வராந்தாவில் வந்து விழுந்தார் மாஜிக் நிபுணர்.

"பிடியுங்கள்... பின்புறமாக ஜன்னல் வழி யாகக் குதித்து ஓடுகிறான்" மாஜிக் நிபுணர் அல றிக்கொண்டே வெளிப்புறமாய்ப் படிக்கட்டுகளில் இறங்கி ஓடினார். மானேஜரும் அவருடன் இருந்த வேலையாட்களும் அவரைத் தொடர்ந்து ஓடினர்... லாட்ஜ் முன்புறத்திற்கு வந்த மாஜிக் நிபுணர், "அதோ ஓடுகிறான்! பின்னால் காரில் வாருங்கள்" என்று கூறிக்கொண்டே அங்கிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டு புறப்பட்டார். ஷெட் டில் இருந்த ஒரு காரில் ஏறி மானேஜரும், மற்றவர் களும் மோட்டார் சைக்கிள் சென்ற பாதையில் சென்றனர். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் மோட்டார் சைக்கிள் தெரியவில்லை...ஏறத்தாழ ஒருமைல் தூரம் சென்ற மானேஜர் லாட்ஜுக் குத் திரும்பி உடனே போலீஸுக்குப் போன் செய்தார். சற்று நேரத்தில் வந்த இன்ஸ்பெக்டர் தாமோதரன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிக் கொண்டிருந்தார் பிரேமா லாட்ஜ் மானேஜர்.

"அலறல் சப்தம் கேட்டதாக அந்த ஆள் சொன்னவுடனே...அல்லது துப்பாக்கி ஒலி கேட்டவுடனேயாவது எனக்குப போன் செய்தி ருக்கவேண்டும் நீங்கள்....இப்போது தும்பைவிட்டு விட்டு வாலைப் பிடிக்கச் சொல்கிறீர்கள்...."

"பதட்டத்தில் எனக்கு எதுவும் தோன்ற வில்லை இன்ஸ்பெக்டர்...மன்னித்துக் கொள்ளுங் கள்....இப்போது அந்த மோட்டார் சைக்கிள்கார ருக்கு வேறு நான் பதில் சொல்லியாக வேண்டும்...."

இன்ஸ்பெக்டர் ஒன்பதாம் நம்பர் அறைக் குச் சென்றார் மானேஜருடன்....அறைக்குள் டார்ச்சு அடித்துப் பார்த்த இன்ஸ்பெக்டர் உடனே அறையில் வேறு பல்பை மாட்டச்செய் தார். பரவிய ஒளியில் தெரிந்த காட்சியைக் கண்டு மானேஜர் பதறினர்... அங்கு கட்டிலில் கழுத்திலிருந்து ரத்தம் வழியப் பிணமாகக் கிடந் தாள் ஒரு பெண்! தரையில் சுருண்டு கிடந்தார் ஒன்பதாம் நம்பர் அறைக்காரார்... அவர் உச்சந் தலையில் ரத்தம் உறைந்து கிடந்தது... அருகில் ஒரு ரிவால்வர்...ரிவால்வரின் பின்புறத்தில் இரத் தம்....ரிவால்வரின் பின்புறத்தால் அவர் தலையில் தாக்கப் பட்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

"அப்படியானல் சுட்டது மாஜிக் நிபுணரா?" —மானேஜர் சொல்லி முடிக்குமுன்பே இன்ஸ் பெக்டர் அவரை இடை மறித்தார்.

"ஆமாம்...கேள்வியாக நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்...மாஜிக் நிபுணராம், முன்பின் அடையாளம் தெரியாத ஒரு நபர் கொலை நடந்த அறைக்குப் பக்கத்து அறை வேண்டும் என்று உங்களிடம் கேட்டவுடனேயே சட்டப்படி என்னி டம் நீங்கள் தகவல் கொடுத்திருக்க வேண்டும்... அதை விட்டுவிட்டு இப்பொழுது நீங்களே கேள்வி கேட்கிறீர்கள்....கொலைகாரனுக்கு உங் கள் லாட்ஜில் உங்கள் அஜாக்கிரதையால் இடம் கொடுத்திருக்கிறீர்கள் ... இந்த இரண்டாவது

கொலை உங்கள் லாட்ஜில் நடந்திருப்பதற்கு நீங்கள்தான் காரணம்..."

"இன்ஸ்பெக்டர்.... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் எப்படியாவது இந்தக் கொலைகாரனைப் பிடிப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்."

"நீங்களா....? எப்படி?"

"என்னாலானவரை முயற்சி செய்கிறேன் இன்ஸ்பெக்டர்!"

"நாங்கள் எதற்காக இருக்கிறோம்? எங்கள் வேலைக்கு உதவியாக நீங்கள் இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை... உங்களுடைய அஜாக்கிரதையினால் எங்கள் வேலையை நீங்கள் கெடுக்காமல் இருந்தால் போதும் என்கிறேன்... தெரிகிறதா? இனி அடுத்து இப்படி அஜாக்கிரதையாக இருந்தால் உங்கள்மீது நடவடிக்கை எடுக்க நேரிடும்...கவனமாக இருங்கள்...."

இன்ஸ்பெக்டர் ஆம்புலன்ஸுக்குப் போன் செய்து, 9ஆம் நம்பர் அறையையும் பூட்டிச் சீல் வைத்தார்.

அத்தியாயம் 8

யார் அந்த மாஜிக் நிபுணர்?

"வாருங்கள் மானேஜர் சார்"—கிரேஸியுடன் தன் அறைக்குள் நுழைந்த பிரேமா லாட்ஜ் மானேஜரை வரவேற்றார் சந்திரன்.

"மிஸ்டர் சந்திரன், அன்று லாட்ஜுக்கு வந்திருந்தபோது கூறினீர்களே .... உண்மைக் குற்றவாளி பிடிபடும்வரை அவன் அடுத்தடுத்து என் லாட்ஜிலேயே எத்தனை கொலைகள் வேண்டுமானாலும் தைரியமாகச் செய்வான் என்று, அது

பலித்துவிட்டது! இப்போது நீங்கள்தான் என் லாட்ஜின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும்... என் லாட்ஜில் இன்னொரு கொலை நடந்துவிட்டால் என்னை கைது செய்யப் போவதாக இன்ஸ்பெக்டர் பயமுறுத்துகிறார்....நீங்கள்தான் என்னையும், என் லாட்ஜையும் காப்பாற்றவேண்டும்."

"மானேஜர் சார், பதறாதீர்கள்! நடந்ததையெல்லாம் முதலில் கோர்வையாகச் சொல்லுங்கள்."

மானேஜர் ஒன்று விடாமல் எல்லாம் சொல்லி முடித்தார்.

"இம்முறை நீங்களே ஏமாந்து கொலைகாரனுக்கு உங்கள் லாட்ஜில் இடம் கொடுத்து விட்டீர்கள்!"

"இதையேதான் இன்ஸ்பெக்டரும் சொன்னார். எனக்கே புரியவில்லை சந்திரன்....நான் எப்படி ஏமாந்தேன் என்று. அந்தக் கொலைகாரன் மாஜிக் நிபுணன் வேஷத்தில் வந்து நான் உங்களிடம் இப்போது கூறியதையெல்லாம் கூறி என் மனத்தை மாற்றிவிட்டான்....அவனுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது மட்டுமில்லை.... உடனே போலீஸுக்கு அவனைப்பற்றித் தகவல் கொடுக்க வேண்டும் என்று என் உள்மனம் சொன்னது... இருந்தாலும் எப்படியோ அவனுக்கு இடம் கொடுத்துவிட்டேன்."

"தெரியவில்லையா மானேஜர் உங்களுக்கு ஏன் என்று! அவன் மாஜிக் நிபுணன் வேஷத்தில் வந்திருந்தாலும் அவனிடம் வசிய சக்தி உண்மையில் இருந்திருக்கிறது. உங்களை ஹிப்னடைஸ் செய்து உங்கள் மனத்தைக் கட்டிவிட்டான்... அதனால்தான் கதவை அடைத்து உங்களிடம் தனியாகப் பேசியிருக்கிறான்."

"என் கண் முன்னலேயே தப்பி ஓடினனே ...அதைத்தான் என்னல் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. அன்று ஒரு பெண்மணி கொலை செய்து விட்டு வாட்ச்மேன் பார்க்கும்போது சாதாரண மாக வெளியேறினள்....இப்போது..."

"அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிடா தீர்கள்."

"நான் எந்த முடிவுக்கும் வரவில்லை மிஸ்டர் சந்திரன்...யார் வேண்டுமானலும், யாரை வேண் டுமானலும் கொலை செய்யட்டும்....என் லாட்ஜில் வேண்டாம்... அதுதான் நான் சொல்வது?"

"நீங்கள் ஏமாந்தவர் என்று கொலைகாரன் கண்டுகொண்டான்."

"நீங்கள்தான் சந்திரன் என்னைக் காப்பாற்ற வேண்டும். நீங்கள் எனக்கு ஆதரவாக முனைந் திருக்கிறீர்கள் என்றல் எதிரிக்கு என்னிடம் இதுவரை இருந்த துணிச்சல் இனி இருக்காது. எனக்காக நீங்கள் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முனையவேண்டும் சந்திரன்... இந்தா ருங்கள் அட்வான்ஸ் ஐநூறு ரூபாய்!"

"இப்போது உங்களுக்காக நான் நேற்று இரவு உங்கள் லாட்ஜில் அந்தப் பெண்ணைக் கொலை செய்தவனைக் கண்டு பிடிக்க ஒப்புக் கொள்கிறேன்—அதற்கு முன்பு நடந்த கொலை பற்றி நான் கவலைப்படவில்லை...அதில் மறைந்து போயிருக்கும் மேரியைத் தேடுவதுதான் என் வேலை!"

"போதும் சந்திரன்...மேரிதானே அதிகாலை யில் லாட்ஜிலிருந்து வெளியே போனவள்... அவ ளைப் பிடித்துவிட்டால் போதும்....மற்ற விவரங் கள் தானே தெரிந்துவிடும்!"

"மறுபடியும் அவசரப் படுகிறீர்களே மானேஜர்! மேரிதான் அந்த நேரத்தில் உங்கள் லாட்ஜிலிருந்து வெளியேறியவள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் மேரியைத் தேடுவது அதற்காக இல்லை....வேறு ஒரு சிக்கலில் அவள் என் கட்சிக் காரியாக இருப்பதால்....நல்லது மானேஜர்! ரசீது பெற்றுக் கொண்டு போய் வாருங்கள்....ஒன்று... 7 ஆம் நம்பர் அறையை யாருக்கும் கொடுக்காதீர்கள்....மாடியில் இடப்புற வரிசையில் உள்ள மற்ற ஏழு அறைகளிலும் உள்ளவர்களைக் கண்காணித்து வாருங்கள்...."

"சரி மிஸ்டர் சந்திரன்! நான் வருகிறேன்!"

0 0 0

"யார்? ஜார்ஜா? கிரேஸ்! கொஞ்சம் அவருடன் வெளியே பேசிக் கொண்டிரு. இன்னும் இரண்டு நிமிடங்களில் நானே வெளியே வந்து அவரை உள்ளே அழைத்து வருகிறேன்"

"என்ன ஸார்? ஜார்ஜுக்கு மட்டும் ஸ்பெஷல் வரவேற்பு?"

"ஆமாம்! ஜாக்கிரதை...ஜார்ஜ் நேரம் கடப்பது பற்றிச் சந்தேகிக்காமல் இரண்டு நிமிடங்களுக்கு அவரை நிறுத்திவை"—கிரேஸி வெளியே சென்றதும் சந்திரன் டெலிபோன் டயலைச் சுழற்றினான்....இரண்டே நிமிடங்களில் சந்திரன் வெளியே வந்து ஜார்ஜை உள்ளே அழைத்துச் சென்றான்!

"தவறாக நினைக்காதீர்கள் ஜார்ஜ்! வேறு ஒரு கேஸ்பற்றி டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தேன்!"

"எனக்குத் தெரியாதா மிஸ்டர் சந்திரன், சரி! நான் வந்தவிஷயம் என்னவாக இருக்குமென்று உங்களுக்கே தெரியுமல்லவா?"

COMICSPDF TIMES

"நிச்சயமாக, உங்கள் மனைவியைப்பற்றி ஏதாவது தகவல் தெரிந்திருக்கிறதா என்று அறிந்து போக வந்திருப்பீர்கள்...அது பற்றி இன்னும் தெளிவாகத்தெரிந்து கொள்வதற்கு உங்களிடம் இன்னும் சில கேள்விகள் கேட்க வேண்டும்!"

"என்னையா? ஆச்சரியமாக இருக்கிறது! சரி...கேளுங்கள்"

"நேற்று இரவு நீங்கள் உங்கள் மனைவியைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்தீர்களா இல்லையா?"

"சந்திரன், என்ன இது? விளையாடுகிறீர்களா?"

"விளையாடவில்லை...உங்கள் மனைவியைப் பார்க்கப் போகவில்லை என்றால் நேற்று இரவு நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்என்பதைச் சொல்லுங்கள்...நேற்று இரவு முழுவதும் நீங்கள் உங்கள் வீட்டில் இல்லை என்பது எனக்குத் தெரியும்"

"உங்கள் சொந்த ஊகம் இது"

"இருக்கலாம்! ஊகமும் உண்மையாகலாம் அல்லவா? என்னிடம் உதவி எதிர்பார்ப்பதாகக் கூறும் நீங்கள் என்னிடம் சில விஷயங்களை மறைக்க முயலுவதால் உண்மையில் என் உதவி உங்களுக்குத் தேவையில்லையோ என்ற சந்தேகத்தைத்தான் எனக்குக் கொடுக்கும்"

"அப்படியென்றால்..."

"ஆமாம்! உங்கள் மனைவி கண்டு பிடிக்கப் படக்கூடாது என்று நீங்கள் விரும்புவதாகவே எனக்குத் தோன்றும்"

"பாராட்டுகிறேன் சந்திரன் உங்களை! எதையும் மறைக்காமல் அப்படியே சொல்லிவிடுகிறீர்கள் நீங்கள்...சரி...சொல்கிறேன்....நேற்று இரவு முழுவதும் நான் என் வீட்டில் இல்லை என்ற உங்

கள் ஊகம் உண்மைதான். ஆனால் நான் எங்கு சென்றிருந்தேன் என்று சொன்னால்...."

"உங்கள் உயிருக்கு ஆபத்து என்கிறீர்கள், அப்படித்தானே?"

"ஆமாம்"

"உங்கள் உயிரை நீங்கள் பொருட்படுத்துவதாயிருந்தால் உங்கள் மனைவியை மறப்பதைத் தவிர வேறு வழியில்லைஎன்பது மட்டும் இல்லை.... உங்கள் மனைவி மறைவு குறித்து உங்களையே சந்தேகிக்கும் நிலைக்கு உங்களைத் தள்ளிக் கொள்கிறீர்கள்..."

"பயமுறுத்துகிறீர்கள் சந்திரன்"

"பயமுறுத்தவில்லை! கிடைத்துள்ள தடயங்களைக் கொண்டு உள்ள நிலையைக் கூறுகிறேன்! இப்போது நீங்கள் உண்மையைக் கூறினால், உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட முடியாத ஓர் ஏற்பாட்டை நான் உங்களுக்குச் செய்து கொடுக்கிறேன்"

"சரி நேற்று இரவு நான் பிரேமா லாட்ஜுக்குச் சென்றேன்"

"இரவு எந்த நேரத்தில்?"

"பன்னிரண்டு மணிக்கு"

"அடுத்தடுத்து நான் கேள்விகள் கேட்காமல் நீங்களே சொல்லிவிடுங்கள் ஜார்ஜ்!"

"எனக்கு நேற்று தபாலில் ஒரு பார்ஸல் வந்தது. அதற்குள்ளே மாஜிக் செய்பவர்கள் சாதாரணமாக அணிந்து கொள்வார்களே நீண்ட அங்கி, அந்தமாதிரி உடையும், ஒட்டு மீசை, தாடி முதலியவையும் இருந்தன. ஒரு கடிதமும் இருந்தது. அக் கடிதம், நேற்றிரவு சரியாகப் பன்னிரெண்டு மணிக்குப் பிரேமா லாட்ஜில் 9-ஆம் நம்பர் அறைக்கு நான் வர வேண்டும் என்றும், அங்கு

என் மனைவி மேரி இருப்பதாகவும் கூறியது. மேரியைப் போலீஸ் தேடிக்கொண்டிருக்கிறது என்றும், மேரியைப் போலீஸ் பிடித்து விட்டால் அவள் போலீஸில் சொல்ல வேண்டி யிருக்கும் சில செய்திகள் அவள்தான் பராங்குசத்தைக் கொலை செய்தவள் என்று நிரூபித்து விடும் என்றும், மேரி சொல்லும் செய்திகள் என் குடும்ப கௌரவத்திற்கும், என் பெயருக்கும் பெருங் கேடு விளைவிக்கும் என்றும் கூறியது அந்தக் கடிதம். என் நலனில் அக்கறை கொண்ட ஒருவர் அந்தக் கடிதத்தை எழுதியிருப்பதாகவும், அவர்தான் மேரியைப் போலீஸ் பார்வையில் படாமல் மறைவாய் பிரேமா லாட்ஜில் வைத்திருப்பதாகவும், நான் நேற்றிரவு பன்னிரெண்டு மணிக்குப் பிரேமா லாட்ஜுக்கு வந்து மேரியை அழைத்துச் செல்லலாம் என்றும், இந்த உதவிக்கு ஈடாக அந்த அறையில் மேரியுடன் இருக்கும் ஆளிடம் நான் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துவிடவேண்டும் என்றும், மேரியை அழைத்துச் சென்று வேறு பத்திரமான இடத்தில் மறைத்து வைப்பதோ, அல்லது வேறு ஏதாவது செய்வதோ அதெல்லாம் என் பொறுப்பு என்றும் அக்கடிதம் கூறியது. நான் வரும்போது பார்சலில் உள்ள அந்த உடையில் என் மோட்டார் சைக்கிளில் வரவேண்டும் என்றும், என் மோட்டார் சைக்கிளின் நம்பர் பிளேட்டை எடுத்து விடவேண்டும் என்றும், சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு பிரேமா லாட்ஜின் இடப்புற வரிசை மாடிப் படிக்கட்டுக்கு வெளியே மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்து விட வேண்டுமென்றும், வாட்ச்மேனிடம் முன்பே விபரம் கூறியிருப்பதால் என்னை யாரும் தடுத்து நிறுத்தி விசாரிக்க மாட்டார்கள் என்றும் அந்தக்

கடிதம் கூறியது. இந்தக் கடிதத்தைப் போலீஸி டம் தெரிவிக்க முயன்றால் மேரி பிடிபட்டு அவள் போலீஸிடம் கூறும் விஷயங்கள் என் பெயருக் குக் கேடாக இருக்கும் என்பதுடன் என் உயி ருக்கும் ஆபத்து என்று அந்தக் கடிதம் கூறியது! பார்சல் எங்கிருந்து வந்திருக்கிறது என்று பார்த் தேன். மேரி, 9-ம் எண் அறை, பிரேமா லாட்ஜ், திருச்சி என்ற முகவரியுடன் தெப்பக்குளம் போஸ்டாபீஸில் அந்தப் பார்சல் ரிஜிஸ்டர் செய்யப் பட்டிருப்பதாக அறிந்தேன்! கடிதத்தில் கையெழுத்து இல்லை."

"மிஸ்டர் ஜார்ஜ், நன்றி! இடையில் கேள்வி கள் கேட்கும் அவசியத்தை ஏற்படுத்தாமல் நீங் களே வரிசையாக எல்லாம் கூறிவிட்டீர்கள்....நீங் களும் ஒரு வக்கீல் இல்லையா! சரி, பார்சலைப் பெற்றுக்கொண்ட பிறகு நீங்கள் என்ன செய்தீர் கள் என்பதிலிருந்து இப்போது என்னைப் பார்க்க வந்திருப்பது வரைத் தொடர்ந்து சொல் லுங்கள் மிஸ்டர் ஜார்ஜ்."

"சுமார் மாலை ஆறு மணிக்கு என் வேலை யாள் ஒருவனைப் பிரேமா லாட்ஜுக்கு அனுப்பி நோட்டம் பார்த்துவரச் செய்தேன். அவன் சிற் றுண்டி சாலையில் காபி அருந்திவிட்டு அந்தப் படிக்கட்டு வழியாக இடப்புற மாடிக்குச் சென் றிருக்கிறான். ஒன்பதாம் நம்பர் அறை அடைக்கப் பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறான், வெளியில் பூட்டு இல்லாததால் உள்ளே ஆட்கள் இருக்கிறார் கள் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கிறது. துணிந்து கதவைத் தட்டியிருக்கிறான். உள்ளே யிருந்து ஒரு ஆண் குரல் யார் என்று கேட்டதற் குத் தன்னை இன்னார் என்று கூறாமல், 'கதவைத் திறவுங்கள்' என்று சொல்லியிருக்கிறான். 'மூடி

போது, போகலாம்!' என்ற பதில் கிடைத்திருக்கிறது. அத்துடன் அவன் திரும்பிவிட்டான். அதன் பிறகுதான் அந்த உடையில் என் மோட்டார் சைக்கிளில், நம்பர் பிளேட்டை எடுத்துவிட்டு, இரவு புறப்பட்டு சரியாகப் பன்னிரெண்டு மணிக்குப் பிரேமா லாட்ஜுக்கு வந்து அந்தக் கடிதம் கூறியபடி இடப்புறமாடிப் படிக்கட்டுக்கு வெளியே என் மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன்."

"கொஞ்சம் இருங்கள் மிஸ்டர் ஜார்ஜ். அடுத்ததாக நடந்ததை நீங்கள் சொல்வதற்கு முன்னால், உங்களை நான் மூன்று கேள்விகள் கேட்கவேண்டும்! முதலில் அந்தப் பார்சல் உங்களுக்கு வந்து கடிதத்தை நீங்கள் படித்ததும், போலீஸுக்குத் தகவல் தெரிவிக்க விரும்பவில்லையா?"

"வேண்டாம் என்று தீர்மானித்தேன். மேரி போலீஸில் சொல்ல வேண்டிய செய்தி என் குடும்பத்திற்கே பாதகமாய் அமையும் என்ற எச்சரிக்கையால்! அச் செய்தி என்னவென்று எனக்குத் தெரியாது. அவள் தனியாக அன்று காலை பிரேமா லாட்ஜுக்குச் சென்று வந்தது, உங்களைச் சந்தித்தது இவற்றையெல்லாம் பார்க்கும் போது ஏதோ ஒன்று இருக்கத்தான் வேண்டும் என்று நான் நம்பினேன்!"

"சரி, மேரியைத் தேடுவதில் நான் ஈடுபட்டிருக்கிறேன், என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தும் என்னிடம் வந்து அந்தத் தகவலை நீங்கள் கூறியிருக்கலாம் அல்லவா?"

"மேரியை முதலில் நான் என் வீட்டுக்கு அழைத்து வந்து அவளிடம் அந்தச் செய்தி என்னவென்று தெரிந்து கொண்டுவிடும் துடிப்

யில் இருந்தேன். பராங்குசத்திற்கும், அவனுக்கும் என்ன சம்பந்தம், அவள்தான் கொலை செய்தாளா என்பதையெல்லாம் அவளிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டபிறகு உங்களுக்குத் தகவல் சொல்வதாகத்தான் இருந்தேன். அதன் பிறகுதானே அவளைப் போலீஸில் ஒப்படைத்துவிடலாம் என்று இருந்தேன். உங்களிடம் கூறினால் நீங்கள் உடனேயே போலீஸுக்குத் தகவல் தெரிவித்து அவளைப் போலீஸில் ஒப்படைத்துவிடுவீர்கள் என்று பயந்தேன். அதனால் நான் மேரியிடமிருந்து அந்த ரகசியங்களை அறிந்துகொள்ள முடியாமல் போய் விடுமல்லவா?''

''நீங்களே உங்கள் மனைவியைப் போலீஸில் ஒப்படைத்தால் அப்போது போலீஸிடம் அந்தத் தகவல்களை உங்கள் மனைவி கூறமாட்டார்களா?''

''அதற்குத்தான் உங்களிடம் உடனே தகவலைக் கூறி, மேரிக்காக உங்களை வழக்காடச் செய்வதென்று தீர்மானித்தேன்....அப்போது நீங்கள் சொல்லும் முறையில்தானே அவள் போலீஸில் வாக்குமூலம் கொடுப்பாள்?''

''ஓகோ! அந்தக் கடிதப்படி உங்களை நடக்கச்செய்து உங்களைச் சிக்கலில் மாட்டி வைக்க எதிரி செய்யும் சூழ்ச்சியாக அது இருக்கலாம் என்ற சந்தேகம் உங்களுக்கு ஏற்படவில்லையா? நீங்களும் ஒரு வக்கீல்தானே?''

''ஏற்பட்டது! அதனால்தான் என் வேலையாளை அனுப்பினேன். ஒன்பதாம் நம்பர் அறைக்காரர் கதவைத் திறக்க மறுத்ததிலிருந்து அவர் முன் ஜாக்கிரதையாக இருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன்...கொலைகாரனே எனக்குக் கடிதம் எழுதியிருக்கலாம் என்றுதான் நானும் நினைத்தேன்! எப்படியும் அவன் என்னிட

மிருந்து பத்தாயிரம் ரூபாய் பணம் பறிக்கப் பார்க்கிறான் என்று தெரிந்து பணமும் எடுத்துச் சென்றேன்! அதனால்தான் அவன் கடிதப்படி அதே உடையில் அதே முறையில் சென்றேன். எப்படியும் மேரி போலீஸிடம் அகப்படத்தான் போகிறாள். நான் போகாவிட்டாலும் அவன் அவளைப் போலீஸிடம் சிக்க வைக்கத்தான் போகிறான். அதனால்தான் அவளை அழைத்து வந்து விவரம் அறிந்து கொண்டு பின் அவளைப் போலீஸில் ஒப்படைத்தால் பின்னால் உங்கள் உதவியுடன் அவளை விடுவித்து விடலாம் என்று நம்பினேன். அப்படி என்னை ஏதாவது ஒரு சிக்கலில் மாட்டிவைக்க அவன் சூழ்ச்சி செய்திருந்தாலும், வருவதை ஏற்பது என்ற துணிவுடன்தான் நான் புறப்பட்டேன்!"

"நன்றி மிஸ்டர் ஜார்ஜ்! தாங்கள் பதில் கூறும்முறை எனக்கு மிகவும் திருப்தியளிக்கிறது. நல்லது, தொடர்ந்து சொல்லுங்கள். மாடிப்படிக் கட்டருகே மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு மாடிக்குச் சென்றீர்கள்...! பிறகு?"

"மாடிப்படியில் ஏறிக்கொண்டிருந்த என்னை எதிர்த்து ஒருவன் விரைவாக இறங்கி வந்தான்.... நான் அசந்து போனேன் ஒருவினாடி! என்னை எதிர்த்து இறங்கி வந்தவர் என்னைப் போலவே உடையணிந்திருந்தார்... அடுத்த வினாடி கீழே இருந்த என் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து கொண்டு அவர் பறந்தார். எனக்கு அப்போது தான் விவரம் புரிந்தது...தொடர்ந்து வராந்தாவில் ஆட்கள் ஓடிவரும் சப்தம் கேட்டு நான் கீழே இறங்கி மாடிப்படி வளைவில் மறைந்து கொண்டேன்...லாட்ஜ் மானேஜரும் இரண்டுபேரும் இறங்கி ஓடுவதையும் காரில் ஏறிப் புறப்படுவதை

யும் பார்த்தேன்....அங்கேயே மாற்றுடையைக் களைந்து சுருட்டி எடுத்துக்கொண்டு பின்புறச் சுவர் வழியாக ஏறிக் குதித்து வெளியேறினேன் ...மெயின்ரோடில் செல்லாமல் குறுக்குப் பாதை யில் சென்றேன்...அங்கே சற்று தூரத்தில் என் மோட்டார் சைக்கிள் கீழே கிடந்ததைப் பார்த்தேன்....அங்கு அதை அவன் விட்டு, விட்டு தப்பிவிட்டான் என்று அறிந்தேன். அச்சமயத்தில் அந்த மோட்டார் சைக்கிளை எடுத் துச் சென்றால் நான்தான் அதில் ஏறி தப்பி வந் தேன் என்ற சந்தேகம் ஏற்படும். மறு நாள் போலீஸ் அது என் சைக்கிள்என்று அறிந்து என் னிடம் விசாரித்தால் விவரம் சொல்வோம் என்று எண்ணி சைக்கிளை எடுத்துக்கொள்ளவில்லை. அப் போது எனக்கு அந்த ஐடியாதோன்றியது! கையி லிருந்த் அந்த மாஜிக் ஆள் உடையை மோட்டார் ஸைக்கிள் அருகில்போட்டுவிட்டு நடந்தேவீடுவந்து சேர்ந்தேன்!"

"தாங்ஸ் ஜார்ஜ்" சந்திரன் மேஜைமணியை அடித்தார். கிரேஸி நோட்டுப் புத்தகத்தை மூடி னாள். அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார் இன்ஸ்பெக்டர் தாமோதரன்.

"நன்றி மிஸ்டர் சந்திரன்! சரியான சமயத் தில் எனக்கு அழைப்பு அனுப்பினீர்கள்" தாமோ தரன் வந்து அமர்ந்தார்.

"அந்த மட்டில் நீங்கள் நான் சொல்லியிருந்த படி எங்கள் பேச்சுக்கு இடையூறாக இல்லாமல் முடியும் வரை வெளியில் பொறுமையாக இருந்தீர் களே! அதற்காக நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்."

ஜார்ஜ் பதறி எழுந்தார்.

"உட்காருங்கள் மிஸ்டர் ஜார்ஜ்! ஏன் பதறுகிறீர்கள்?" சந்திரன் நிதானமாக கேட்டான்.

"தெரிகிறது மிஸ்டர் சந்திரன்... என் பேச்சை மறைவாக இருந்து கேட்பதற்கு இன்ஸ்பெக்டரையும் இங்கு வரச் செய்து இப்போது என்னைப் போலீஸில் ஒப்புவிக்க திட்டமிட்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது."

"நீங்கள் கூறுவது உண்மை! நீங்களும் சட்டம் படித்தவர் ஆதலால் நீங்கள் என் நிலையை புரிந்துகொள்ள வேண்டும். நேற்று இரவு கொலை நடந்த லாட்ஜுக்கு நீங்கள் சென்றிருக்கிறீர்கள். கொலைகாரன் அணிந்திருந்த உடையிலேயே நீங்களும் இருந்ததாக கூறுகிறீர்கள். கொலைகாரன் தப்பித்துச செல்வதற்கும் உங்கள் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தி யிருக்கிறான். எப்படியும் மோட்டார் சைக்கிள் உங்களுடையது என்பதைப் போலீஸ் தெரிந்து கொள்ளும். இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்து நேற்றைய கொலையை நீங்களே செய்ததாக புலன் விசாரணையின் மூலம் போலீஸ் முடிவுகட்டி உங்களைக் கைது செய்யும். இப்போது நீங்கள் என்னைச்சந்தித்துப் பேசியதையும் புலன் விசாரனை மூலம் போலீஸ் தெரிந்து கொண்டு என்னை விசாரிக்கும். அப்போது போலீஸிடம் என்னிடம் நீங்கள் சொன்ன விஷயங்களையெல்லாம் நான் சொல்லத்தான் வேண்டும். நீங்கள் கொலை செய்யவில்லை என்பதற்கு ஆதரவாக இப்படி நீங்கள் ஏமாற்றப்பட்ட விபரத்தைப் போலீஸ் என்னை விசாரிக்கும்போது நான் கூறினுல் போலீஸ் என்னை நம்பாது. நான் பொய்சொல்லுகிறேன் என்று நினைத்து என்னை ஒரு சாட்சியாகவே ஏற்றுக்கொள்ளாது என்பது மட்டுமில்லை, கொலைகாரராகிய உங்களுக்கு நானும் உடந்தை

என்று முடிவு கட்டிவிடும். அதனால் உங்களுக்காகத்தான் நான் இப்போது சப் இன்ஸ்பெக்டரை இங்கு வரவழைத்தேன்."

"வேடிக்கையாக இருக்கிறது உங்கள் விளக்கம் சந்திரன்"

"சட்டமறிந்த உங்களுக்கு அப்படியிருக்கக் கூடாது மிஸ்டர் ஜார்ஜ்! கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள் நான் சொல்வதை. இப்போது இன்ஸ்பெக்டரை இங்கு வரச் செய்து நீங்கள் என்னிடம் கூறியதையெல்லாம் மறைவாக இருந்து அவரையே கேட்கச் செய்துவிட்டேன். அது மட்டுமில்லை நீங்கள் என்னிடம் கூறியதையெல்லாம் அவரும் குறித்துக் கொண்டிருப்பார் நீங்கள் கூறியதை ஒன்று விடாமல் என்னுடைய காரியதரிசி கிரேஸியும் எழுதிக்கொண்டிருக்கிறாள். இப்போது நீங்கள் என்னிடம் கொடுத்திருக்கும் வாக்கு மூலத்திற்கு இன்ஸ்பெக்டர் தாமோதரனே சாட்சி! நாளை நீதிமன்றத்தில் நீங்கள் என்னிடம் கொலைகாரர் என்று ஒப்புக்கொண்டதாக இன்ஸ்பெக்டர் உங்கள் வாக்கு மூலத்தை மாற்றி ஜோடனை செய்ய முடியாது."

"சந்திரன்" தாமோதரன் எழுந்தார்.

"உட்காருங்கள் இன்ஸ்பெக்டர்! நான் சட்டப்படி நடந்திருக்கிறேன் என்பதை நீங்கள் மறுக்க முடியாது. இப்போது ஜார்ஜ்தான் அவர் மனைவியைக் கொலைசெய்திருக்கிறார் என்று நீங்கள் அவரைச் சந்தேகிப்பதாயிருந்தால், தாராளமாக அவரைக் கைது செய்யலாம். இந்த நிமிடம் முதல் ஜார்ஜ் என் கட்சிக்காரர். அவருக்காகப் பேச வேண்டியவன் நான்."

"மேரி கொலை செய்யப்பட்டாளா? ஐயோ! மிஸ்டர் சந்திரன்." ஜார்ஜின் குரல் தழதழத்தது.

"ஆமாம் மிஸ்டர் ஜார்ஜ்! உங்கள் மனைவி கொல்லப்பட்டது மட்டுமில்லை. பொறிக்குள் எலி விழுவதுபோல, கொலைகாரன் சூழ்ச்சிக்குப் பலியாகி விட்டீர்கள். உங்கள் மீது போலீஸ் சந்தேகத்தைத் தூண்டுவதில் கொலைகாரன் வெற்றி பெற்று விட்டான். அதனாலேயே அவன் என் பிடியிலிருந்து தப்ப முடியாமல் வலிய வந்து சிக்கிக் கொண்டிருக்கிறான். நீங்கள் இன்ஸ்பெக்டருடன் தைரியமாகச்செல்லுங்கள். என்னைக் கேட்காமல் போலீஸிடம் எந்த மேல் விபரமும் கூறாதீர்கள். இப்போது அந்தக் கொலைகாரனிடமிருந்து நீங்கள் தப்பித்துப் பாதுகாப்பாக இருப்பதற்குப் போலீஸ் லாக்கப்தான் சரியான இடம், அவன் சூழ்ச்சி வென்றுவிட்டதாக எண்ணி இறுமாந்து இருக்கட்டும்!"

"சந்திரன் நீங்கள் சொல்வது உண்மையா?"

"ஆமாம்! பயப்படாதீர்கள்" சந்திரன் கிரேஸியைப் பார்த்தான். அவள் பரபரவென்று எழுதி ஒரு ரசீதை ஜார்ஜிடம் கொடுத்தாள். ஜார்ஜ் சந்திரனின் கட்சிக்காரர் என்பதற்காகப் பணம் அட்வான்ஸ் பெற்றுக் கொண்டதற்கான ரசீது அது.

"சந்திரன் ஜாக்கிரதை! மிகவும் சாமர்த்தியமாக ஒரு கொலை புரிந்திருக்கிறார் ஜார்ஜ். அவருடைய மோட்டார் சைக்கிளும், அதனருகில் அவர் அணிந்திருந்தமாற்றுடையும் நிச்சயம் போலீஸால் கண்டுபிடிக்கப்பட்டு விடும் என்று தெரிந்து அழகாக ஒரு கதை சொல்கிறார். இதை நம்பி நீங்கள் அவருக்காக முழுதாக இந்த வழக்கில் இறங்கி உங்கள் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்" இன்ஸ்பெக்டர் தாமோதரன் சற்றுக் கண்டிப்பான தொனியில் கூறினார்.

"தாமோதர் நன்றி! நான் ஜார்ஜ் கூறுவதை நம்புகிறேன்! அவர் என்னிடம் உண்மையை மறைத்தால் என் முயற்சி தோற்றுவிடும் என்று அவருக்கு நன்றாகத்தெரியும். அவரும் ஒரு வக்கீல் தான்! போலீஸ் தேடிக் கொண்டிருக்கும் அவருடைய மனைவி கூறப்போகும் செய்திகள் அவருக்கு அவமானத்தை உண்டாக்கலாம் என்பதால் ஜார்ஜே தன் மனைவியைக் கொலை செய்து விட்டார் என்ற கொலை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் மேலும் தொடர்ந்து சொல்லப் போகிறீர்கள், இல்லையா?"

"ஆமாம்! ஜார்ஜுக்குப் பார்சலும், மர்மக் கடிதமும் வந்தது உண்மையென்று நான் ஒப்புக் கொள்கிறேன். 'அந்தப் பார்சலையும், கடிதத்தையும் அவரே அவருக்கு அனுப்பிக் கொண்டிருக்கலாம் அல்லவா? அதற்குமுன் தினமே மந்திரவாதி உடையில் பிரேமாலாட்ஜில் ஏழாம் நம்பர் அறையைப் பிடித்துக் கொண்டிருக்கிறார். அன்று இரவு அவர் மோட்டார் சைக்கிளைக் கீழே நிறுத்தி வைத்து விட்டு, மானேஜரை ஒன்பதாம் நம்பர் அறைக்கு வரச்செய்து கொலை செய்து தப்பி விட்டார். அதே உடையில் இன்னொருவர் வந்தார் என்பதெல்லாம் கதை. கடைசியாக ஒன்று மிஸ்டர் சந்திரன்! உங்கள் நோக்கம் எதுவாக இருந்தாலும், என்னையழைத்து, என்னிடம் ஜார்ஜை ஒப்புவிக்க உண்மையாக நீங்கள் விரும்பியதால் உங்களுக்கு ஓர் உதவி செய்கிறேன். யாருக்கும் தெரியாதசெய்தியை உங்களுக்குச் சொல்லப் போகிறேன்! இது நாளைக்காலைப் பத்திரிகையில் தான் வரும். அதற்குமுன்பே நீங்கள் தெரிந்து கொண்டால், இதிலிருந்து நீங்கள் ஒதுங்கி விடுவீர்கள் என்று நம்புகிறேன். அல்லது இன்னும் தீவி

ரமாக நீங்கள் முனைந்தாலும்- எனக்குக் கவலையில்லை! கடிதப்படி புறப்பட்டு வந்ததாகக்கூறும் ஜார்ஜ், யாருக்கும் கடிதப்படிப் பணம் கொடுக்கவில்லை என்பது மட்டும் இல்லை, அவர் கொன்றது, அல்லது, உங்கள் வாக்குப்படி, ஒன்பதாம் நம்பர் அறையில் கொல்லப்பட்டவள் அவர் மனைவி மேரி இல்லை......"

"இன்ஸ்பெக்டர்!"—சந்திரனின் குரல் எப்படியோ தொனித்தது!

"ஆமாம் மிஸ்டர் சந்திரன்! கொலை செய்யப்பட்டவள் நீலவேணி என்ற பெண்! அந்தப்பெண்ணுடன் அந்த அறையிலிருந்தவனிடமிருந்து அப்பெண்ணின் பெயரை அறிந்து கொண்டோம். அவன் ஆஸ்பத்திரியில் இருக்கிறான். அவனிடமிருந்து மேல் விவரம் தெரிந்து கொள்ள முடியும் என்று நம்புகிறோம்!"

"நன்றி, இன்ஸ்பெக்டர்! நான் இந்த வழக்கிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவில்லை!"

சந்திரனை முறைத்துப் பார்த்துவிட்டு ஜார்ஜுடன் வெளியேறினார் இன்ஸ்பெக்டர்.

அத்தியாயம் 9

டானியல் போட்ட புதிர்

தன்முன் வந்து நின்ற ஏஏயிடம் ஒரு தபால் கவரைக் கொடுத்தான் சந்திரன். அன்றிரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் செங்கற்பட்டுக்குப் புறப்பட்டுச் சென்று அங்கு தலைமைத்தபால் நிலையத்தில் அந்தக் கவரைச் சேர்த்துவிட்டு மறுநாளே திருச்சிக்குத் திரும்பும்படி ஏஏயிடம் சந்திரன் கூறினான்.

மேஜை மீதிருந்த பத்திரிகையை எடுத்து ஒரு செய்தியில் மீண்டும் விழிகளைப் பதித்தான். "பிரேமலாட்ஜில் இரண்டு நாட்களுக்கு முன் கொலை செய்யப்பட்ட நீலவேணி என்ற பெண்ணைப் பற்றி மேல் விவரங்கள் கிடைத்துள்ளன. அவளுடைய சொந்தஊர் செங்கற்பட்டு என்றும், ஒரு வாரத்துக்கு முன் திருச்சி வக்கீல் ஜார்ஜ் என்பவரின் வளர்ப்பு மகனான டானியல் என்பவரிடம் அவள் வந்த பொழுது வந்த வழியில் கடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது, பத்திரிகையில் போலீஸ் வெளியிட்ட நீலவேணியின் புகைப்படத்தையும் பெயரையும் கண்ட டானியல் போலீஸில் இந்த விவரங்களைக் கூறியுள்ளார். அவள் தன்னை நாடித் திருச்சிக்கு வந்த விவரமும் அவள் என்று வந்தாள் என்பதும் தனக்குத் தெரியாது என்றும் டானியல் கூறியிருக்கிறார். ஒரு வாரத்திற்கு முன் கண்டுபிடிக்கப் பட்ட டாக்ஸிடிரைவர் கொலைக்கும், நீலவேணி கடத்தப் பட்டதற்கும் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகித்துப் போலீஸ் புலன் விசாரித்து வருகிறது."

"ஸார்! ஒரு பத்து நிமிஷங்களுக்கு இதையெல்லாம் மறந்துவிட்டு, சினிமாவைப் பற்றி என்னுடன் பேசுங்கள் ஸார்! உங்களைப் பார்த்தால்..."

கிளாசில் ஒவலுடன் சந்திரனருகே கிரேஸி வந்து நின்றாள்.

"தாங்க்ஸ் கிரேஸி! இப்போது நான் பேச வேண்டியது டானியலுடன்......."

டெலிபோன் ஒலி எழுப்பியது.

"இப்போது தான் நினைத்தேன்! உடனே ஹோட்டல் பிரிட்டானியாவுக்குப் புறப்பட்டு வாருங்கள்! இங்கு வேண்டாம்"

பேசியவர் டானியல் என்று கிரேசி புரிந்து கொண்டாள்.

இருபது நிமிடங்களில் ஹோட்டல் பிரிட்டா னியாவில் ஒரு தனிமறையில் சந்திரன், கிரேசி, டானியல் ஆகியோர் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டே பேச் ல் மூழ்ந்திருந்தனர்.

டானியல் கூறிய விவரங்கள் சந்திரனின் சிந்தைக்கு உரமிட்டு அதைத்தூண்டி விட்டன.

செங்கற்பட்டில் டானியலைப் பெற்ற தாய் சௌந்தரம்என்பவள்தான் அவனுடன் நீலவேணி யையும் வளர்த்து வந்தாள் என்றும், டானியலின் பதினைந்தாவது வயதில், பத்து ஆண்டுகளுக்கு மூன்பு அவல் திருச்சியில் ஜார்ஜிடம் வேலைக் கமர்ந்தான் என்றும் டானியல் கூறினான். போலீஸ் ஜார்ஜைக் கைதுசெய்த வுடனேயே, டானியலை அவன் வீட்டில் விசாரித்ததாம். போலீ ஸிடம் டானியல் முழுவிவரங்களையும் கூறவில்லை யாம். தன் தாய் செங்கற்பட்டில் சௌந்தரம் என் பவள் என்றும், பத்து வருஷங்களுக்கு முன்பு வீட்டைவிட்டு ஏதோ கோபத்தில் வெளியேறி திருச்சிக்கு வந்து ஜார்ஜ் வீட்டில் வேலைக்குச் சேர்ந்ததாகவும், தன் தந்தை தனக்குச் சிறுவயதா யிருக்கும்போதே இறந்துவிட்டதாகவும், தன் தாய் இரண்டு மாதங்களுக்கு முன்பு செங்கற்பட்டில் காலமான செய்தி பதினைந்து நாட்களுக்கு முன்பா கத்தான் செங்கற்பட்டு நண்பர் ஒருவர் மூலம் தனக்குத் தெரியும்என்றும், போலீஸில் டானியல் கூறினானும். அப்போது நீலவேணியைப் பற்றி எதுவும் கூறவில்லையாம். அதன் பிறகுச் செய்திப் பத்திரிகையில் நீலவேணியின் புகைப்படத்தையும் அவள் பெயரையும் பார்த்ததும், பத்து வருஷங் கள் ஆனபோதிலும் நீல வேணியின் முக

ஜாடையை அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது என்றும், உடனே அவனாக இன்ஸ்பெக்டரிடம் சென்று நீலவேணியைப் பற்றிய விவரங்களைக் கூறியதாகவும் டானியல் கூறினான், நீலவேணியைத் தன் தாய் வளர்த்ததாக மட்டுமே கூறினானும்.

ஆனால் போலீஸிடம் டானியல் சில உண்மைகளை முக்கிய காரணத்திற்காக மறைத்து விட்டானும். உண்மையில் டானியல் ஜார்ஜின் மகனும். அது ஜார்ஜுக்கே தெரியாதாம். ஜார்ஜ் கைது செய்யப் பட்டதையும், ஜார்ஜுக்காக சந்திரன் வழக்காட இருப்பதையும் அறிந்த டானியல் சந்திரனிடம் எல்லா உண்மைகளையும் மறைக்காமல் வெளியிடத் தீர்மானித்து விட்டதாகக் கூறினான்.

ஜார்ஜ் மேரியைத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு, செங்கற்பட்டில் அவருக்கும் செளந்தரத்திற்கும் கலியாணமாகாமலே தொடர்பு ஏற்பட்டதாம். டானியல் அவன் தாயின் கருவில் உருவானதும், ஜார்ஜ் செல்வர் வீட்டுப் பெண்ணும் அவருடைய மதத்தைச் சேர்ந்தவருமான மேரியை மணந்துகொண்டு திருச்சிக்குச் சென்று விட்டாராம். ஏமாற்றப்பட்ட அவன் தாய், அவன் பிறந்ததும் அவனுக்கு டானியல் என்றே பெயரிட்டு வளர்த்து வந்தாளாம். ஊராரின் ஏளனத்திற்கு ஆளான அவன் தாய்க்கு இன்னொரு சோதனையும் நேர்ந்ததாம்.

டானியல் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோது, ஒருநாள் நள்ளிரவில் இரண்டு முரடர்கள் அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டி உள் நுழைந்து, சின்னஞ்சிறு பெண் குழந்தையொன்றை அவன் தாயிடம் கொடுத்து அதனை வளர்க்க வேண்டும் என்று அச்சுறுத்தினார்களாம்

அக்குழந்தைக்குத் தாய் சௌந்தரம் என்றும், தகப்பன்பெயர் தெரியாது என்றும் பதிவுசெய்து விட்டார்களாம். கன்னி நிலையிலேயே டானியலைப் பெற்று எல்லோரின் இகழ்ச்சிக்கும் ஆளாயிருந்த சௌந்தரம் யாரிடம் சென்று முறையிடுவது என்று புரியாமல், அவர்கள் அச்சுறுத்தலுக்குப் பயந்து அந்தப் பெண் குழந்தையையும் நீலவேணி என்று பெயரிட்டு வளர்த்து வந்தாளாம். இவை யாவும் டானியலிடம் அவன் தாயே கூறியிருக்கிறாளாம்.

டானியலுக்குப் பதினைந்துவயதானதும், அவனைத் திருச்சிக்கு ஜார்ஜிடம் அவன் தாயே அனுப்பி வைத்தாளாம். எல்லா விவரங்களையும் ஜார்ஜுக்கு ஒரு கடிதத்தில் எழுதி டானியலிடம் கொடுத்தனுப்பினாளாம் அவன் தாய். டானியலை அவன் தந்தை நன்றாகப் படிக்கவைத்து ஆளாக்குவார் என்று சௌந்தரம் நம்பினாளாம். திருச்சியில் ஜார்ஜையும், மேரியையும் பார்த்த டானியலுக்கு, எங்கே தன்னை ஏற்றுக் கொள்ளாமல் விரட்டி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டதாம். எப்படியானாலும், தந்தையருகே இருந்தால் போதும் என்றே டானியல் எண்ணினான். ஆகவே ஜார்ஜிடம் உண்மையைக் கூறாமல், கடிதத்தையும் கொடுக்காமல் தான் ஓர் அனாதை என்றும் வேலை கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்றும் கெஞ்சி அவர்கள் கால்களில் விழுந்தானும்! அவர்களும் அவனை வீட்டு வேலைக்கமர்த்திக் கொண்டார்களாம்.

அவர்களுக்குக் குழந்தை இல்லாததால், நாளடைவில் அவனிடம் அவர்களுக்குப் பாசம், பிடிப்பு ஏற்பட்டு அவனைச் சொந்த மகனாகவே கருதி வளர்க்கத் தொடங்கினார்களாம். டானியல் மெட்ரி

குலேசன் தேறி விட்டானும். டானியல், ஜார்ஜ் தன்னை ஏற்றுக்கொண்டு விட்டார் என்று, அவன் தாய்க்குக் கடிதம் எழுதினனும். டானியல் ஜார்ஜின் மகனாக உண்மை தெரிந்து வாழ்ந்து வருகிறான் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வந்த அவன் தாயும் இரண்டு மாதங்களுக்கு முன்பாக இறந்து விட்டார்களாம் திடீரென்று!

இரண்டு மாதங்களுக்கு முன் ஒருநாள் அதி காலையில் வீட்டின் பின்புறம் கிணற்றுக்குப் போன அவன் தாய் கிணற்றில் தவறி விழுந்திருக்கிறாள். காலையில்தான் நீலவேணி பார்த்திருக்கிறாள். டானியல் அங்கு வருவதை ஜார்ஜ் விரும்பாமலிருக்கலாம் என்று எண்ணி நீலவேணி உடனே டானியலுக்குத் தகவல் தெரிவிக்காமல் இரண்டு நாட்கள் கழித்து டானியலுக்குக் கடிதம் எழுதியிருந்தாளாம். நீலவேணியைத் திருச்சிக்குப் புறப்பட்டு வருமாறு கூறி டானியல் கடிதம் எழுதினனும். நீலவேணி செங்கற்பட்டில் தனக்குத் தெரிந்தவர் வீட்டுப் பெண் என்று ஏதாவது ஜார்ஜ் இடம் பொய் சொல்லி ஜார்ஜ் மூலம் நீலவேணிக்கு ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்ய டானியல் விரும்பினனும். ஆனல் அவன் கடிதத்திற்கு நீலவேணியிடமிருந்து பதிலே இல்லையாம். அதன்பிறகு, இரண்டு மாதங்கள் கழித்து, இப்போதுதான் பத்திரிகையில் நீலவேணியின் புகைப்படத்தையும், கொலைச் செய்தியையும் பார்த்து இன்ஸ்பெக்டரிடம் பறந்து சென்றானும். ஆனல் அவள் உடலைக்கூட அவனல் பார்க்க முடியவில்லையாம். அதற்குள் எரித்துவிட்டார்கள் என்று கூறி டானியல் குமுறியழுதான்.

கண்களை மூடிக்கொண்டான் சந்திரன் அரை நிமிடம் நாற்காலியில் சாய்ந்தவாறு!

''டானியல் நன்றி! எதையும் மறைக்காமல் சொல்லி என் வேலைக்குப் பேருதவி செய்திருக் கிருய். நீ சொல்வதைப் பார்க்கும்போது, அன்று குழந்தையாக நீலவேணியை உன் தாயிடம் சேர்த்தவனுக்கும் இப்போது அதே நீலவேணி யைக் கொலை செய்தவனுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். கொலைகாரன் உன்னைச் சுற்றிக் கரம் நீட்டிவிட்டான். உங்களையெல்லாம் நன்கு அறிந்து வைத்திருக்கிருன் அவன். உன் தாய் கிணற்றில் தற்செயலாக விழுந்திருப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை...உன் தாய் கொலை செய்யப்பட் டிருக்கவேண்டும் நீலவேணி கொலை! ஜார்ஜை சந்தேகத்தின் பேரில் சிறைக்கனுப்பி விட்டான். பராங்குசம் கொலை...மேரியின்மீது போலீசுக்கு ஏற்பட்ட சந்தேகம் வளர்ந்து நிலைக்கவேண்டும் என்பதற்காகவே மேரியைக் கடத்திச் சென்று விட்டான். அடுத்து உன்னைச் சும்மா விட்டு வைக்க மாட்டான். நீ கவனமாக இருக்கவேண் டும், டானியல்!''

டானியல் எழுந்தான்—

''ஒரு முக்கிய விஷயம், டானியல்! இன்னும் இரண்டு நாட்களில் உனக்கு ஏதாவது கடிதம் வந்தால், அதைப் பிரித்துப் பார்க்காமல் என்னி டம் கொடு. கடிதம் எதுவும் இன்னும் இரண்டு நாட்களில் வரவில்லையென்ருல், என்னிடம் வந்து தகவல் கூறு!''

''கடிதமா?''

''ஆமாம்! நீலவேணி திருச்சிக்குப் புறப்பட்டு வரும் விவரத்தை உனக்கு எழுதியிருக்கவேண்டும். அந்தக் கடிதம் கொலைகாரன் கையில் கிடைத் திருப்பதால்தான், அவளை அவனுல் கடத்திக் கொலையும் செய்ய முடிந்திருக்கிறது.''

"ஸார்!"—டானியலின் குரல் அவன் பதட்டத்தைக் காட்டியது.

"பதறாதே, டானியல். நீ நினைப்பது எனக்குத் தெரிகிறது. உன் கடிதத்தை ஜார்ஜ் வாங்கிப் படித்திருக்கலாம் என்று நினைக்கிறாய், இல்லையா? அதைத் தெளிவு செய்து கொள்ளும் முயற்சியில்தான் நான் இப்போது இறங்கியிருக்கிறேன்."

கொலை நடந்த அன்று அதிகாலை மேரியும், ஜார்ஜும் வெளியே சென்றதும், அன்று பகல் மேரியை ஒருவன் டாக்ஸியில் அழைத்துச் சென்றதும் தனக்குத் தெரியாது என்றான் டானியல். சென்ற பத்தாண்டுகளாக, பராங்குசமோ, வேறு எந்த ஆண்மகனோ தன் வீட்டுக்கு வந்து, மேரியுடன் பேசியதைத் தான் பார்த்ததில்லையென்றும் டானியல் கூறினான்.

செங்கற்பட்டில் சௌந்தரம் இருந்த வீட்டு முகவரியைக் குறித்துக்கொண்டு, சந்திரன் டானியலை அனுப்பினான்.

"சரி, கிரேசி, நாளைக் காலை ஒரு காகிதத்தில் 'டானியலுக்கு வாழ்த்து-சந்திரன்' என்று மட்டும் எழுதி, அதை உள்ளூர்த் தபாலில் டானியலுக்கு அனுப்பிவிடு. நான் போய் ஏஏயை அனுப்புகிறேன்!"

"ஸார், ஏஏ செங்கற்பட்டுக்கு...."

சந்திரன் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு பேசினான் "மணி 8-45தான் ஆகிறது. தூத்துக்குடி புறப்பட இன்னும் நாற்பது நிமிடங்கள் இருக்கின்றன. ஏஏக்குப் பதிலாக நானேசெங்கற்பட்டு சென்று வருகிறேன். நீ பத்திரமாக உன் அறைக்குப்போ! டாடா!"—சந்திரன் புறப்பட்டான்.

அத்தியாயம் 10

யார் அந்தச் சபேசன்?

ஒன்பதாம் நம்பர் அறைக்காரர் தலையில் கட்டுடன் ஆஸ்பத்திரியில் தனியறையில் கட்டிலில் கிடந்தார். அறைக்கு வெளியே கான்ஸ்டேபிள். திடீரென்று ஆஸ்பத்திரியின் அந்தப் பகுதி விளக்கு அணைந்தது. கான்ஸ்டேபிள் உஷாராகக் கட்டிலருகே சென்று நின்று கொண்டார். ஒரே பரபரப்பு. வெளியே தெருக் கம்பத்தில் கையில் இரப்பர் உறையுடன் லயன் மேன் டார்ச் விளக்கின் ஒளியில் ஏதோ செய்து கொண்டிருந்தார். ஐந்து நிமிடங்களில் கீழே இறங்கிய லயன்மேன் சரியான பியூஸ்வயர் இல்லை யென்றும், உடனே போய் எடுத்து வருவதாகவும் அருகிலிருந்தவர்களிடம் கூறிவிட்டுச் சைக்கிளில் புறப்பட்டார்.

பெட்ரோமாக்ஸ் விளக்குகள் ஏற்றப் பட்டன. மின்சார சப்ளை அலுவலகத்திற்குப் போன் செய்ததில், அங்கிருந்து லயன் மேன் யாரும் அந்த நேரத்தில் அனுப்பப் படவில்லை யென்று அவர்கள் கூறினார்கள்.

போலீஸ் காவல்கைதி யிருந்த அறையில் பெட்ரோமாக்ஸ் விளக்கை மாட்டச் சென்ற ஆஸ்பத்திரிப்பந்தி, விளக்கைக் கீழே போட்டு விட்டு அலறிக்கொண்டு வெளியே ஓடி வந்தார். கூச்சல் கேட்டுக் கூட்டம் சேர்ந்தது. அங்கே கட்டிலில் ஒன்பதாம் நம்பர் அறைக் காரரும், தரையில் காவல் கான்ஸ்டேபிளும் பிணமாகக் கிடந்தனர். அவர்கள் ஒவ்வொருவர் விலாவிலும் ஒரு கத்தி!

* * *

காலை ஐந்து மணிக்குச் செங்கற் பட்டில் வந்திறங்கிய சந்திரன், தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் தபால் வண்டியில் ஒரு கவரையும், ஜங்ஷன் தபாற்பெட்டியில் ஒரு கவரையும் போட்டு விட்டு நேரே ஒரு லாட்ஜிக்குச் சென்றான். காலை எட்டு மணிக்குத்தலைமைத்தபால் நிலையத்தில் ஒரு கவரைப் போட்டுவிட்டு, மேட்டுத் தெருவில் ஒரு வீட்டின் முன் போய் நின்றான்.

அந்த வீட்டிலிருந்த பெரியவரிடம் சௌந்தரம்மாளைப் பார்க்கத் திருச்சியிலிருந்து வந்திருப்பதாகச் சந்திரன் கூறினான். அந்தப் பெரியவர் சௌந்தரம்மாள் காலமாகி இரண்டு மாதங்கள் ஆகி விட்டதாகக் கூறியதுடன் நிறுத்திக் கொள்ளாமல், நான்கைந்து நாட்களுக்கு முன் இப்படித்தான் சென்னையிலிருந்துஒருவர் சௌந்தரத்தைத் தேடிக் கொண்டு வந்ததாகவும், அவர் தன்பெயரைக் கூற மறுத்துவிட்டதாகவும், திருச்சிக்குப் போவதாகத்தான் கூறியதாகவும் சொன்னார்.

அந்தப் பெரியவரின் வாயைக் கிளறினான் சந்திரன் அது வீண் போகவில்லை. சௌந்தரம் உயிருடன் இருந்தவரை மாதாமாதம் அவளுக்குத் தபாலில் செக் ஒன்று வரும் என்றும் அதை அவள் ஆனந்தா பாங்கில் மாற்றிக் கொள்வாள் என்றும், அப்போது அவர் பக்கத்து வீட்டில் இருந்தால் தனக்கு அது தெரியும் என்றும் கூறினார். அவள் இறந்தபிறகு, சென்றமாதம் கூட அவள் பெயருக்கு ரிஜிஸ்தர் தபால் வந்ததாகவும். அவர்தான் தகவலைக் கூறித் தபாலைத் திருப்பி அனுப்பினார் என்றும். சபேசன், 70 B Z, ஏழாவது தெரு, ஷெனாய் நகர் என்ற அனுப்பியவர் மூகவரியையும் கவரில் பார்த்ததாகவும் அந்தப் பெரியவர் கூறினார். ஒரு வேளை தபால்

திரும்பி வந்தால் சபேசனே செளந்தரத்தைத் தேடிக் கொண்டு வந்திருக்கலாம் என்று நினைப்பதாக அப்பெரியவர் கூறினார்.

நேரே சென்னை சென்ற சந்திரன் பூந்தமல்லியில் ஒரு லாட்ஜில் தங்கினான். கிரேஸிக்குப் போன் செய்து, அவனிடம் ஏசியையும், ஏடியையும் அனுப்பிவைக்குமாறு கூறினான். மறுநாட் காலையில் ஷெனாய் நகரில் சபேசனைச் சந்தித்தான் சபேசன் பிடிகொடுத்து விளக்கமாக எதுவும் கூறவில்லை. அவருடைய நண்பர் ஒருவர் அவரிடம் மொத்தமாகப் பணம் கொடுத்து மாதாமாதம் செளந்தரத்திற்கு நூறு ரூபாய்க்குச் செக் அனுப்புமாறு சொல்லியிருக்கிறாராம். அந்த நண்பர் பெயரை வெளியிடுவதில்லை என்று அவரிடம் கூறியிருப்பதாகவும், அதனால் அவர் பெயரைச் சொல்ல முடியாது என்றும் சபேசன் மறுத்து விட்டார்.

சபேசனிட மிருந்து புறப்பட்ட சந்திரன் மவுண்ட் ரோடில் ஒரு பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று மறுநாட் காலைப் பதிப்பிலேயே வாருமாறு அதிகக் கட்டணம் செலுத்தி ஒரு விளம்பரம் கொடுத்து விட்டு வந்தான். தன்னைச் சந்தித்தபிறகு சபேசன் என்ன செய்கிறார் என்று பார்ப்பதற்காக மீண்டும் சபேசன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். சபேசன் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்த சந்திரன் தொலைவிலேயே சபேசன் ஒரு டாக்ஸியிலிருந்து இறங்கி வீட்டிற்குள் செல்வதைக் கண்டவன், ஓடிவந்து அதே டாக்ஸியில் ஏறிக் கொண்டான். சபேசன் எங்கிருந்து வந்தாரோ அதே இடத்திற்குப் போகுமாறு டாக்ஸி டிரைவரிடம் கூறினான். டிரைவர் சந்திரனை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுக்

காரைச் செலுத்தினான். டாக்ஸி வண்ணாரப் பேட்டையில் ஒரு இரும்புசாமான், பெயிண்ட் விற்பனைக் கடை முன் நின்றது.

டாக்ஸிடிரைவரிடம் சற்று அதிகமாகவேபணம் கொடுத்து டாக்ஸியை அனுப்பிவிட்டுக் கடைக்குள் நுழைந்தான் சந்திரன்.

கவுண்டரில்இருப்பவர் முன் போய் அமர்ந்து 'சபேசன் என்னை அனுப்பினார்' என்று கூறினான்.

"இப்போதுதானே சபேசன் இங்கு வந்து விட்டுப் போகிறார்? அவரிடம் சொன்னோமே எங்கள் முதலாளி ஊரில் இல்லை பதினைந்து நாட்களாகிறது."

"நான் சபேசனைப் பார்க்கவில்லை. தங்கள் முதலாளி ஊரில் இல்லையென்றால் திருச்சி சென்றிருக்கலாம்என்று முன்னாலேயேஎன்னிடம் சபேசன் கூறியிருக்கிறார். திருச்சியில் எங்கு பார்க்கலாம்?"

"திருச்சிக்குத்தான் போயிருக்கிறார் என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது. திருச்சியில் இருந்தால் பெரிய லாட்ஜில் எதிலாவது தங்குவார்."

"உங்கள் முதலாளியின் பெயரையும் இந்தக் கடையின் பெயரையும், முகவரியையும், குறித்துத் தந்தீர்களானால் விசாரிப்பதற்கு உதவியாக இருக்கும்."

அவர் கொடுத்த காகிதத்தை வாங்கிக் கொண்டசந்திரன்,ஒரு காகிதத்தில், 'சௌந்தரத்தின் மகன் டானியல்' என்று எழுதி அவரிடம் கொடுத்து, அவன்முதலாளி அதற்குள் வந்துவிட்டால் அவரிடம் கொடுக்குமாறு கூறிவிட்டுப் புறப்பட்டான். வெளியேவந்த டானியல் காகிதத்தைப்

பிரித்துப் பார்த்தான். 'விக்டர், மெயின்ரோடு, வண்ணாரப்பேட்டை' என்ற விலாசத்தைப பார்த்ததும் முறுவலித்தான் சந்திரன்.

அத்தியாயம் 11

சிவப்பு நாகம்

மறுநாட் காலைப் பத்திரிகையில் வெளி வந்திருந்த தன் விளம்பரத்தைப் படித்துப்பார்த்தான் சந்திரன்.

"நான்கைந்து நாட்களுக்கு முன் செங்கற்பட்டில் சௌந்தரத்தைத் தேடி வந்தவர் கீழ்வரும் முகவரியில் இன்னும் ஒரு நாளுக்குள் என்னைச் சந்தித்து ஒரு முக்கியசெய்தியறிந்து கொள்ளலாம். சந்திரன், 16, புளூலாட்ஜ், பூந்தமல்லி, சென்னை."

காலை பத்து மணிக்கு ஏசியும், ஏடியும் வந்து சேர்ந்தனர். பகல் பன்னிரண்டு மணிக்குச் சந்திரனுக்கு டெலிபோன் அழைப்பு வந்தது.

"மிஸ்டர் சந்திரன்! உங்கள் பத்திரிகை விளம்பரம் பார்த்துப் பேசுகிறேன். உங்களை அங்கு நேரில் சந்திக்க முடியாத நிலையில் இருக்கிறேன். விபரம் நேரில் கூறுகிறேன். நீங்கள் தயவுசெய்து என்னிடம் நேரில் வரவேண்டும். நான் இருக்கும் இடத்தை டெலிபோனில் சொல்லக்கூடப் பயமாயிருக்கிறது. கார் அனுப்புகிறேன் அதில் புறப்பட்டு வாருங்கள். பேசிமுடித்ததும் உங்களைக் காரிலேயே அங்கு கொண்டு சேர்க்கச் செய்கிறேன். என்னைத் தவறாக நினைக்காதீர்கள்."

"அதற்கென்ன? கார் அனுப்புங்கள் வருகிறேன். எல்லாம் நேரில் பேசிக்கொள்வோம்."

ஏசியையும் ஏடியையும் அழைத்தான் சந்திரன். சற்று நேரத்தில் அவனையழைத்துச் செல்ல ஒரு கார் வரும் என்றும், அந்தக் காரில் ஒருவர் மட்டும் வந்தால், அவர் சந்திரனையழைக்க லாட்ஜூக்குள் நுழைந்ததும், ஏஸி அந்தக் கார் கிளம்ப முடியாதபடி அதன் என்ஜினில் கோளாறு செய்துவிட வேண்டும், உள்ளே வரும் ஆளைச் சற்று நேரம் அவன் அறையில் சந்திரன் நிறுத்தி வைப்பதாகவும் சந்திரன் கூறினான். சந்திரனும் வரும் ஆளும் வேறு டாக்ஸியில் புறப்பட்டுச் சில நிமிஷங்களில் ஏசி இன்னொருடாக்சியில் அவனைத் தொடரவேண்டும்என்றும், இன்னும் சில நிமிஷங்கள் கழித்து வேறு டாக்ஸியில் ஏடி ஏசியைத் தொடரவேண்டும் என்றும் கூறினான். லாட்ஜூக்கு வெளியே பழுதாகி நிற்கும் காரை வேறு எவரும் வந்து எடுத்துப்போக அனுமதிக்க வேண்டாம் என்று லாட்ஜ் மானேஜரிடம் கூறவேண்டும் என்றும் சந்திரன் கூறினான். வரும் காரில் ஒருவர் இல்லாமல் இருவரோ, மூவரோ ஒருவர் உள்ளே வந்து மற்றவர் காரிலேயே இருந்தால், ஏசி காரை எதுவும் செய்ய வேண்டியதில்லையென்றும், அந்தக்காரில் சந்திரன் அவர்களுடன் புறப்பட்டதும் அவனைத் தொடர்ந்தால் போதும் என்றும் கூறினான்.

சற்று நேரத்தில் புளுலாட்ஜின் எதிர்ப்புறத்தில் வெவ்வேறு இடங்களில் ஏசியும் ஏடியும் நின்று கொண்டிருந்தனர். அதே வரிசையில், அடுத்தடுத்து இல்லாமல், தனித்தனியாக மூன்று டாக்ஸிகள்! சரியாக இரண்டு மணிக்கு, தூரத்தில் ஒரு கார் வருவதைக் கண்டதும், ஏடி லாட்ஜூக்குள் விரைந்தான். லாட்ஜின் வெளியே நின்ற காரிலிருந்து ஒருவன் இறங்கி

உள்ளே நுழைந்ததும் ஏஸி காரை நோக்கி நடை போட்டான்.

தன்னையழைத்துப் போக வந்தவன் முன் சிற்றுண்டியையும், காபியையும் வைத்துச் சாப்பிட்டுவிட்டுத்தான் புறப்படவேண்டும் என்று சந்திரன் வற்புறுத்தினான். பத்துநிமிடங்களில் சந்திரன் வந்தவனுடன் புறப்பட்டுக் காரில் அமர்ந்தான். கார் ஸ்டார்ட் ஆக மறுத்தது!

கீழே இறங்கிப் பானெட்டைத் திறக்கப் போன அவனிடம் தன்னால் காத்திருக்க முடியாது என்றும், இரண்டரை மணி நேரங்களில் அவன் சென்னையை விட்டுப் புறப்படவேண்டும் என்றும், ஆதலால் டாக்சியில் சென்று திரும்பலாம் என்றும், அதன்பிறகு அவன் காரைச் சரி செய்து எடுத்துச் செல்லலாம் என்றும் சந்திரன் கூறினான். அந்த ஆள் தயங்கினான்.

"அப்படியானால், நான் புறப்படுவதற்குள் என்னை இங்கு வந்து சந்திக்கும்படி உங்கள் எஜமானரிடம் சொல்லுங்கள்"—சந்திரன் லாட்ஜை நோக்கித் திரும்பினான்!

"சரி, வாருங்கள்"—அவன் அருகிலிருந்த டாக்ஸியை அழைத்தான். திருவள்ளூர் சாலையில் டாக்ஸி பறந்தது. இரண்டே நிமிடங்களில் அதே பாதையில் ஏசி புறப்பட்டான் அடுத்த டாக்சியில்.

சாலைத் திருப்பத்தில் முதல் டாக்சியை உள்ளிருந்தவன் நிறுத்தும்படிக் கூறியதும், ஒருவன் டாக்சியை நோக்கி ஓடிவந்தான்.

"ஏன், கார் என்ன ஆச்சு?"

"ஏதோ ரிப்பேர் ஆகிப் புளூ லாட்ஜுக்கு முன்னே நிக்குது! நீ போய் அதைப் பார்த்து எடுத்துக்கிட்டுவா"—டாக்சி புறப்பட்டது.

மூன்றாவது டாக்ஸியில் ஏறப்போன ஏடி, நின்று கொண்டிருந்த அந்தக் காரை நோக்கி ஒருவன் வருவதைக் கண்டு அவனிடம் சென்றான். வந்தவன் காரில் அமர்ந்து ஏதோ பார்த்துவிட்டுக் கீழிறங்கிப் பானெட்டைத் திறக்கப் போனான்.

"ஓ, வந்திட்டீங்களா? காரை எடுத்திட்டுப் போக ஒருத்தரை அனுப்பறதாகச் சொல்லிட்டுப் போனாரு எங்க ஐயாவை அழைச்சுக்கிட்டுப் போனவரு! நீங்க வர்ரீங்களான்னுதான் பாத்துக் கிட்டிருந்தேன். ஒரு முக்கிய விஷயம்! உங்க ஆளு பர்சை விட்டுட்டுப் போயிட்டாரு!"

"எங்கே?"

"அவர் எங்க ஐயாவோட அறையிலே டிபன் சாப்பிட்டிட்டுப் புறப்பட்டாரு. அறையிலே யே வச்சிட்டுப் போயிட்டாரு! பர்ஸிலே பண மும்; என்னென்னமோ பேப்பரும் இருக்குது!"— ஏடி சொல்லி முடிக்கவும் அந்த ஆள் அவன் பக் கம் வந்தான்.

"அந்தப் பர்ஸ் எங்கே? அதை ஏன் நீங்க திறந்து பாத்தீங்க?"

"விலாசம் இருக்குதான்னு பார்த்தேன். உள்ளே அறையிலேதான் இருக்குது...."— ஏடியை முந்திக்கொண்டு லாட்ஜினுள் நுழைந் தான் வந்தவன். அறைக்குள் நுழைந்ததும் அறைக் கதவை அடைத்துத் தாழிட்டான் ஏடி.

"ஏன்?"—வந்தவன் திரும்பினான்.

"அந்தக் காகிதங்களிலே என்ன எழுதி யிருக்குன்னு சொல்லுங்க ... வேறு யாரும் உள்ளே வரக்கூடாதுன்னிட்டுத்தான் கதவை அடைக்கிறேன்!"

"முதலில் பர்சைக் கொடுங்க."

"அதோ....அந்த மேஜை டிராயருக்குள்ளே தான் இருக்குது!"—ஏடி சொல்லி முடிக்குமுன் பாக, அவன் மேஜை டிராயரைத் திறந்தான். அவ்வளவுதான்! ஏடி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மேஜை டிராயரை இழுத்து அடைத்து, அவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து ரிவால்வரை எடுத்து வெளியே எறிந்து அவன் வாயையும் மூக்கையும் ஒரு கரத்தால் சேர்த்து அழுத்தினான். ஒருகை மேஜை டிராயரில் நசுங்கி அழுந்த, அவன் மூச்சு முட்டித் திணறித் துவண்டு கீழே விழுந்தான். மயங்கிய நிலையில் அவனைக் கீழே கிடத்திய ஏடி அவன் பைகளிலிருந்த பொருட்களை வெளியே எடுத்தான். பர்ஸ், சிறு கத்தி, விசில், கயிறு போன்றவற்றுடன் ஒரு டயரியும் பேப்பரும் இருந்தன.

"இரண்டு மணி—சந்திரன்—புளூலாட்ஜ்—திருவள்ளூர்ப் பாலம்—கூவம்—வெள்ளம்—ஏழு பேர் உன்னைச் சேர்த்து—நானும் இடையில் சேர்ந்து கொள்வேன்"—பேப்பர் வாசகம் ஏடிக்குப் பதட்டத்தைக் கொடுத்தது. டயரியைப் புரட்டினான். அன்றைய தேதியில்........"பத்து மணிக்குப் பிரதர் உத்தரவு—ஒன்றேமுக்கால் மணிக்குப் பூந்தமல்லி" என்று மட்டும் எழுதப்பட்டிருந்தது.

கீழே கிடந்தவனின் கை, கால்களை அவனுடைய கயிற்றால் இறுகக் கட்டிவிட்டு, அறையைப் பூட்டிக்கொண்டு வெளியேறினான் ஏடி. அந்தப் பேப்பர், டயரி ஆகியவற்றுடன், இருபது நிமிடங்களில் புளூலாட்ஜ் முன் நின்ற போலீஸ் ஜீப்பிலிருந்து இரண்டு கான்ஸ்டேபிள்கள் சந்திரனின் அறையை நோக்கி விரைந்தனர். இன்ஸ்பெக்டர், நான்கு கான்ஸ்டேபிள்கள், ஏடி ஆகி

யோருடன் ஜீப் பறந்தது திருவள்ளூர் சாலையில்.

சந்திரன் சென்ற டாக்சி இடையிடையே நின்று அதில் ஆங்காங்கே ஒவ்வொருவராக மொத்தம் ஐந்து பேர் ஏறிக்கொண்டனர். கடைசியாக ஓரிடத்தில் டாக்சியை நிறுத்துமாறு உள்ளிருந்தவன் கூறியதும், சாலையோரத்திலிருந்து ஒருவன் டாக்சியை நோக்கி வந்தான்.

"நீ வரவேண்டாம்! பின்னால் யாராவது மாப்பிள்ளை வந்தால் கவனித்துக்கொள்!" என்றான், கடைசியாக டாக்சியில் ஏறிய ஆள்!

'என்ன சொல்கிறீர்கள்? ஒன்றும் விளங்கவில்லையே? இவர்கள் எல்லாம் யார்? அங்குதான் வருகிறார்களா?"— சாதுவாகக் கேட்டான் சந்திரன்.

"எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுக்கு விளங்கும்!"—என்று ஒருவன் கூறி அருகிருந்தவனிடம் கண்ஜாடை காட்டினான். திடீரென்று பக்கத்திலிருந்தவர்கள் சந்திரனை அழுத்தி, அமுக்கிப் பிடித்துக் கொண்டனர். ஒருவன் சந்திரனின் மூக்கிற்கு நேராகப் 'பெண்டதால்' தோய்த்த பஞ்சைக் காட்டினான். சந்திரனின் விழிகள் சொருகின. மிரண்டு திரும்பிய டாக்ஸி டிரைவரையும் மயங்கச் செய்து, அவர்களில் ஒருவன் டாக்ஸியை ஓட்டினான்.

வெகு வேகமாக வந்து கொண்டிருந்த ஏசியின் டாக்ஸியைத் திடீரென்று நிறுத்தினார் டிரைவர் சாலையின் குறுக்கே ஒரு மரக்கிளை! டாக்ஸியை நோக்கி ரிவால்வருடன் வந்தான் ஒருவன்,

"என்னப்பா, நம்ம பேதாஸ்தை வால் பிடிக்கிறியா? கீழே இறங்கு!" என்று அவன் கூறவும், ஏசி டாக்சியிலிருந்து வெளியே வந்தான்.

"டாக்ஸி! நீ நேரே வந்த வழியைப் பாத்துக் கிட்டுப்போ!"— அவன் பேசிக்கொண்டிருந்த போதே டாக்ஸி திடீரென்று அவனை நோக்கித் திரும்பியது! அவன் பதறி விலக முயன்றான். அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஏசி அவன் முகத்தில் ஒரு குத்து விட்டு அவனைத் தடுமாறச் செய்து ரிவால்வரைக் கீழே தள்ளினான். டாக்ஸி டிரைவரும் ஏசியுடன் சேர்ந்து கொள்ள சுலபத்தில் வழிமறித்தவன் மடக்கப்பட்டான். அவன் பையிலிருந்த கயிற்றினால் அவன் கைகளைக் கட்டி, ஏசி அவனை டாக்சியில் ஏற்றப் போன சமயத்தில் காற்றாகப் பறந்து வந்து அங்கு நின்றது போலீஸ்ஜீப். ஜீப்புடன் டாக்ஸியும் நேரே புறப்பட்டது.

சரியாக மூன்றேமுக்கால் மணிக்கு ஸ்ரீபெரும்புதூர் திருவள்ளூர்ச்சாலைத் திருப்பத்தில் உள்ள கூவம் ஆற்றுப் பாலத்தில் முன்னால் காற்றாகச் சென்று கொண்டிருந்த டாக்ஸியைக் கண்டதும், மின்னலாக முன்னால் பாய்ந்து சென்றது போலீஸ்ஜீப்.

'டுமீல்'—முன்னால் சென்றுகொண்டிருந்த டாக்ஸி பேரொலியுடன் சுற்றி, வளைந்து, பாலத் தின்கைப்பிடிச்சுவரை முட்டி மோதி நின்றது, அதன் பின்புற டயர் உட்கார்ந்து விட்டதால். அடுத்த விநாடியில் டாக்ஸியிலிருந்த ஐந்து பேர் ஓடத் தொடங்கினர். ஜீப்பை நிறுத்தி இன்ஸ்பெக்டர் வானத்தை நோக்கிச் சுட்டார். ஓடியவரைத்துரத்தினர் போலீஸ் ஜவான்கள். அடுத்து ஒரு துப்பாக்கிஒலி! ஓடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் கணுக்காலில் குண்டு பாய்ந்து, சுருண்டு விழுந்தான் நடுப் பாலத்தில். எதிரே ஒரு லாரி, இரண்டு கார்கள் ஒன்றன் பின் ஒன்றாக வரவும்,

ஓடிக் கொண்டிருந்த நால்வருள் ஒருவன் பாலத்தின் கைப்பிடிச்சுவர்மீது பாய்ந்து ஏறி அடுத்த கணம் பொங்கி நுரைத்துச்சென்ற கூவம் ஆற்றில் குதித்துவிட்டான். மற்ற மூவரும் கைகளை உயர்த்திய வாறு அப்படியே நின்றனர்.

இரவு ஏழுமணிக்கு PL போலீஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டரிடம் எல்லா விவரங்களையும் கூறினன். அந்தக் கூட்டத்தினர் பிடிபட்ட செய்தியை வெளியிடவேண்டாம் என்றும் இன்ஸ்பெக்டரிடம் கூறினன் சந்திரன்.

"இவர்கள் தலைவனக இங்கு இருப்பவன் தான் ஆற்றில் குதித்தவன்என்று நினைக்கிறேன். அவனை உயிருடன் பிடித்து விடவேண்டும் என்று தான் என் ஆள் ஏடியை உடனே ஆற்றில் குதிக்கச் சொன்னேன். ஆனல் அவன் வேண்டுமென்றே நீரில் ஆழ்ந்து இறந்து விட்டான். ஏடியால் அவன் உடலை மட்டுமே கரைக்குக் கொண்டு வர முடிந்தது. சரி, வருகிறேன்.... நாங்கள் இப்போதே டாக்ஸியில் திருச்சிக்குப் புறப்படுகிறோம் நீங்கள் புளூலாட்ஜில் நின்று கொண்டிருக்கும் காரைக் கைப்பற்றி அதன் ரிஜிஸ்டிரேஷனைச் செக் செய்து திருச்சி ஸ்டேஷனுக்குத் தகவல் அனுப்புங்கள்!"—சந்திரன் புறப்பட்டான்.

டாக்ஸியில் அமர்ந்ததும் ஏடி சந்திரனிடம் ஓர் ஈரத்துணியைக் கொடுத்தான். சந்திரன் அதைப் பிரித்துப் பார்த்தான்.

"ஆற்றில் குதித்து இறந்தவன் அணிந்திருந்த பனியன் ஸார் இது! தனியாக எடுத்து வைத்துக் கொண்டு, போலீஸ் நிலையம் வந்ததும் பிடிபட்ட

மற்றவர்களின் பனியன்களையும் பார்த்தேன். அவர்கள் பனியனிலும் இதேபோல நெஞ்சுப் பக்கத்தில சிவப்பு நாகத்தின் உருவம் பின்னப் பட்டிருக்கிறது. இது அவர்கள் கூட்டத்தின் அடையாளம்!"

சந்திரன் ஏடியைத் தட்டிக் கொடுத்தான்.

அத்தியாயம் 12

பச்சை நாகம் எங்கே?

"கிரேஸி! ஒரு முக்கியவேலை! அடுத்த அறையில் ஏஸி காத்திருக்கிறான். போய் நாற்பது வயது பெண்மணியாய் உடனே, சீக்கிரம் வெளியே வா. நேரே விருத்தாசலத்திற்கு டாக்ஸியில் புறப்படு. அங்கு போனதும் டாக்ஸியை அனுப்பி விடு. நேரே விருத்தாசலம் ஜங்ஷன்போய் பகல்இரண்டரை மணிக்கு வரும் சென்னை திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் புறப்பட்டு மாலை ஆறு மணிக்குத் திருச்சி ஜங்ஷனில் வந்து இறங்கு. ஒருவன் உன்னை அழைத்துப்போக ஜங்ஷனுக்கு வருவான் அவனுடன் புறப்பட்டுப் போ. மற்றவற்றை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

சந்திரன் டெலிபோன் டயலைச் சுழற்றினான் இருபது நிமிடங்களில் டானியல்வந்தான். சென்ற இரண்டு நாட்களில் அவனுக்குக் கடிதம் எதுவும் வரவில்லை என்றான். தபால்காரரிடம் விசாரிக்க வேண்டாம் என்று டானியலிடம் கூறி அவனை அனுப்பி வைத்தான் சந்திரன்.

ஏஸியிடம் டானியல் விலாசம் எழுதிய ஒரு கவரைக் கொடுத்து அன்றைய உள்ளூர் கட்டில்

சேர்க்கச் சொன்னான். ஏடியை அழைத்து அந்தக் கடிதம் மறையும் மர்மத்தை அறிந்து வருமாறு அனுப்பினான்.

சற்று நேரத்தில், ஜார்ஜ் வீட்டுப் பகுதியின் தபாற்காரர் தபால் நிலையத்திலிருந்து வெளி வந்ததும் அவர் முன் சென்றான் ஏடி. டானியலின் கடிதத்தை வாங்கிவர தன்னை அனுப்பியிருப்பதாக ஏடி கூறினான். தபாற்காரர் தலையசைக்கவும், ஏடி சட்டைப் பொத்தானை அவிழ்த்து உள் பனியனைக் காட்டிவிட்டுப் பொத்தானைப் போட்டுக் கொண்டார். தனியே எடுத்து வைத்திருந்த ஒரு கவரை அவனிடம் கொடுத்தார் தபாற்காரர். அது சந்திரன் அன்று காலையில் கட்டில் சேர்க்கச் சொன்ன அதே கவர்.

திருச்சி ஜங்ஷனில் மாலை 6 மணிக்குச் சென்னை-திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வந்து நின்றதும், பெண்கள் வண்டியிலிருந்து நாற்பது வயதுப் பெண்மணியாகக் கிரேஸி இறங்கினாள். பிளாட்பாரத்தின் ஒரு கோடியில் ஏசியும் மறு கோடியில் ஏடியும் நின்று கொண்டிருந்தனர். முதல் வண்டியிலும், கடைசி வண்டியிலுமாக அவ்விருவரும் ஏறி நின்று கொண்டனர். யாரோ ஒருவன் கிரேசியிடம் கவர் ஒன்றைக் காட்டி ஏதோ சொல்வதையும், அவனைத் தொடர்ந்து கிரேசி பிளாட்பாரத்திலிருந்து கீழே இறங்கிச் செல்வதைக் கண்ட ஏசியும், ஏடியும் வண்டியிலிருந்து இறங்கி அவர்களைத் தொடர்ந்தனர். கிரேசியும் அவனும், ஒரு காரில் புறப்பட்டுச் செல்வதைக் கண்ட அவர்கள் இரண்டு நிமிடங்களில் டாக்சியில் அதே வழியில் புறப்பட்டனர். திருச்சி புதுக்கோட்டைச் சாலையில் இருபதாவது மைலில் கிர

னூரில் முன்னல் சென்ற கார் ஊருக்குள் திரும்பி யதைக் கண்ட டாக்ஸி சற்றுநின்று, இடை வெளி கொடுத்துப் புறப்பட்டது. அடர்ந்த தென்னந் தோப்பின் மத்தியில் ஒரு சிறு வீட்டின்முன் கார் நின்றது. சற்றுத் தள்ளி மரங்களுக் கிடையில் டாக்ஸி நின்றது.

பத்து நிமிடங்களில் ஏடி அந்த வீட்டுக் கத வைத் தட்டினன். கதவைத் திறந்த முரடனிடம் ஏடி சட்டைப் பொத்தானை அவிழ்த்து உள் பனி யனைக் காட்டினன், கையிலுள்ள டார்ச்சால். உள்ளே சென்ற ஏடி அங்கிருந்த முரடர்களிடம் தான் சென்னையிலிருந்து வருவதாகவும், தன்னு டைய தலைவன் அந்த வீட்டை அடையாளம் கூறி அங்கிருப்பவர்களிடம் சேர்ந்திருக்குமாறு தன்னை யனுப்பியதாகவும், திருச்சியிலிருந்து டாக்ஸியில் வந்து, டாக்ஸியைக் கீரனூர்ச் சாலையிலே திருப்பி அனுப்பிவிட்டு அங்கு வருவதாகவும் கூறினன். கிரேசி பக்கம் திரும்பவேயில்லை அவன்.

ஒரு முரடன் ஏடியை முன்புற அறைக்கு அழைத்துச் சென்ருன். ஏடியை அவனுடைய வலது தொடையைக்காட்டுமாறுகூறினன் அவன். ஏடி தயங்குவதைக் கண்ட அவன் தன் தொடை யில் டார்ச் அடித்துக் காட்டினன். அங்கே படமெடுக்கும் நாகத்தின் உருவம் பச்சை குத்தப்பட் டிருந்தது. ஏடி சடாரென்று குனிந்து அந்த முர டனின் இரு கால்களையும் பிடித்திழுத்து அவனைக் கீழே தள்ளிவிட்டு ஓடினன். மற்ற முரடர்கள் அவனை நோக்கி ஓடி வந்தனர். அதே சமயத்தில் வெளிக்கதவு தட்டப்படும் ஒலிகேட்டு, அங்கிருந்த ஒரே ஒரு சிம்னி விளக்கை அணைத்துவிட்டு ஓடி வந்து வெளிப்புறக் கதவைத் திறக்கவும் ஏசி

உள்ளே பாய்ந்தான். அவர்களிடையே இரண்டு நிமிடங்கள் இருளில் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. திடீரென்று டார்ச் ஒளியுடன் போலிஸ் தடதடவென்று உள்ளே பாய்ந்து அவர்கள் அனைவரையும் வளைத்துக்கொண்டது. அந்த வீடு முழுவதையும் ஆராய்ந்த சந்திரன், வீட்டின் பின்புறத்தில் பூட்டப்பட்டிருந்த ஓர் அறைக் கதவின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தான். அங்கே கட்டிலோடு கட்டிலாக இருளில் படுத்திருந்தாள் மேரி.

அத்தியாயம் 13

யார் அந்த நாகராஜ்?

போலீஸ் நிலையத்தில் சந்திரனின் கரங்களைப் பற்றிக் குலுக்கினார் இன்ஸ்பெக்டர் தாமோதரன்.

"மிஸ்டர் சந்திரன், என்னை நீங்கள் முந்தி விட்டீர்கள். என் பாராட்டு!"

"இன்ஸ்பெக்டர், நான் அழைத்ததும், என் சொல்லை மதித்துப் போலீசுடன் நீங்கள் சமயத்தில் வந்ததற்கு என் நன்றி! இனிமேல்தான் நாம் வேகமும், விவேகமும் காட்டவேண்டும். இவர்களை இயக்குவது யார் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இவர்கள் பிடிபட்ட விஷயம் இவர்களின் தலைவனுக்குத் தெரிவதற்கு முன் நாம் சில காரியங்கள் செய்யவேண்டும், இவர்கள் பிடிபட்ட விவரம் வெளியே தெரியவேண்டாம்! சென்னை P1 போலீஸ் நிலைய இன்ஸ்பெக்டரை ஒரு கார் ரிஜிஸ்ட்ரேஷனை செக் செய்யச் சொல்லியிரு

தேன். உடனே அர்ஜண்ட் டிரங்கால் போட்டு அது விவரத்தைக் கேட்டு வையுங்கள். நான் வெளியே சென்று திரும்புகிறேன்!''

லாக்கப்பில் ஜார்ஜையும், மேரியையும் சந்தித்துப் பேசிவிட்டுப் பிரேமா லாட்ஜுக்குச் சென்றான் சந்திரன்.

கொலை நடந்த அன்று காலை பிரேமா லாட்ஜில் பராங்குசத்தைச் சந்தித்துக் கடிதங்களைக் கேட்டதாகவும், அவன் இருபதாயிரம் ரூபாய் கேட்டதாகவும், பகலில் அவள் வீட்டுக்கு வந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு கடிதங்களைக் கொடுக்குமாறு பராங்குசத்திடம் கூறிவந்ததாக வும் லாக்கப்பில் மேரி சந்திரனிடம் கூறினாள். பராங்குசம் ஏமாற்றிவிடலாம் என்று நினைத்தே சந்திரனிடம் கடிதங்களைக் கைப்பற்றித் தருமாறு கேட்டதாகவும் கூறினாள். பராங்குசம் கொலை செய்யப் படுவான் என்பது தெரிந்திருந்தால் தான் அவனைச் சந்தித்துப் பேசிய விவரத்தை சந்திரனிடம் மறைத்திருக்க மாட்டாள் என்றாள் மேரி. அன்று பகலில் ஒருவன் அவளிடம் வந்து பராங்குசத்தால் வர இயலாது என்றும், பணத் துடன் அவள் லாட்ஜுக்குப் புறப்பட்டு வரவேண் டும் என்று கூறியதும், பாங்கில் பணம் மாற்றிக் கொண்டு, டாக்ஸியில் அவனுடன் செல்ல மேரி யிடமிருந்து பணத்தையும் பறித்துக் கொண்டு அவளைக் கிரனூரில் சிறை வைத்துவிட்டானும் அந்த ஆள் வேறு சிலருடன் சேர்ந்து.

பிரேமா லாட்ஜுக்குச் சென்ற சந்திரன், அங்கு அவன் தேடும் ஒருவர் தங்கியிருக்கிறாரா என்று பார்க்க விரும்புவதாகக் கூறி, மானேஜர் மேஜை மீதிருந்த பதிவுப் புத்தகத்தை எடுத்து

ஊன்றி நோக்கினான். அங்கிருந்து புறப்பட்ட சந்திரன் ஏழாம் நம்பர் அறைக் கதவைத் தட்டினான். நெட்டையான ஒரு மனிதர் கதவைத் திறந்து அவனை உள்ளே அழைத்துச் சென்றான்.

"நான் உங்களைச் சந்திக்கத்தான் வந்திருக்கிறேன். வஸந்த் என்ற பெயரில் நீங்கள் இங்கு தங்கியிருந்தாலும், நீங்கள் விக்டர்தானே?"

அவர் சிரித்தார்.

"என் பெயரை மட்டுமல்லாமல் என் மதத்தையே மாற்றி விட்டீர்களே? நீங்கள் தேடும் நபர் நான் இல்லை!"

"சரி, மன்னித்துக் கொள்ளுங்கள், வருகிறேன்!"...வெளியேறிய சந்திரன் அருகிருந்த ஹோட்டலில் டெலிபோனருகே சென்றான்.

ஐந்தே நிமிடங்களில் மீண்டும் பிரேமா லாட்ஜ் மானேஜரின் அறையில் நுழைந்த சந்திரன் இரண்டு நிமிடங்களில் வெளியேறினான். போலீஸ் நிலையத்தில் பரபரப்புடன் நுழைந்த சந்திரன் இன்ஸ்பெக்டர் கூறிய தகவலைக் கேட்டு கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்தான் அரை நிமிடம். ஆம்! அந்தக் காரின் நம்பர் உண்மையானதாகத் தெரியவில்லை யென்று சென்னை இன்ஸ்பெக்டர் கூறிவிட்டாராம்!

"இன்ஸ்பெக்டர்! மறுபடியும் டிரங்கால் போட்டு, நாளைக் காலை ஆறுமணிக்குள் அந்தக் காரை என் வீட்டில் கொண்டு வந்து நிறுத்தச் செய்யவேண்டும். அதை மப்டியில் கான்ஸ்டேபிள் ஓட்டிவரவேண்டும். அடுத்தபடியாக இன்று இரவும் கிரனூரில் வேலை இருக்கிறது. அந்த வீட்டில் போலீஸ் வேண்டாம். அதைச் சுற்றிலும் மறைந்

திருக்கட்டும். அந்த வீட்டுக்கு வரும் எவரையும் தடுக்கவேண்டாம்!"—இன்ஸ்பெக்டரைத் தனியே அழைத்துச் சென்று அவரிடம் சில செய்திகள் கூறினான் சந்திரன்.

அன்று இரவு சுமார் இரண்டு மணிக்குக் கீரனூர் தென்னந்தோப்பில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஓர் உருவம் மெதுவாக நடந்து சென்று வீட்டுக் கதவைத் தட்டியது. தொப்பியைக் கீழே இறக்கி, கண்களைச் சல்லடைத் துணியால் மூடிக் கொண்டிருந்தது அந்த உருவம்.

கதவு திறக்கப்பட்டதும் உள்ளே சென்ற அந்த உருவம், கதவைத் திறந்தவனை விளக்கை ஏற்றும்படிக்கூறியது. ஏற்றப் பட்ட சிம்னி விளக்கை எடுத்துக்கொண்டு அந்த உருவம் வீட்டின் பின்புற அறையை நோக்கிச் சென்றதும், விளக்கேற்றியவன் ஓடிச் சென்று அந்த அறைக் கதவைத் திறந்தான். அறைக்குள் நுழைந்து கதவை அடைத்துக் கொண்டது அந்த உருவம்.

"மேரி! எப்படியிருக்கிறது தனிவாசம்? இப்போது என்ன சொல்கிறாய்?"

"நான் என்ன சொல்லவேண்டும்?"—கட்டிலில் எழுந்து அமர்ந்தாள் மேரி, ஆம்! அசல் மேரியேதான்!

"நீ என்ன செய்யவேண்டும் என்றுதான் அன்றே சொன்னேனே? நான் செய்த காரியங்கள் எல்லாவற்றிலும் உனக்கும் பங்கு உண்டு, நீயும் என்னுடன் சேர்ந்துதான் எல்லாம் செய்தாய் என்று நான் எழுதும் காகிதத்தில் நீ கையெழுத்துப் போடவேண்டும். அது என்னிடம் இருக்கும். நீ என்னைக் காட்டிக் கொடுக்க முயற்சி

செய்தால், அந்தக் காகிதத்தைப் போலீசில் கொடுத்து விடுவேன். என்னுடன் நீயும் கம்பி எண்ண வேண்டும்!"

"எங்கே அந்தக் காகிதம்?"

அந்த உருவம் ஒரு காகிதத்தையும், பேனாவையும் மேரியிடம் கொடுத்தது. சிம்னி வெளிச்சத்தில் அந்தக் காகிதத்தைப் பார்த்தாள் மேரி.

"என்ன இது, வெற்றுக் காகிதம்?"

"ஆமாம்! முதலில் காகிதத்தின் கீழே நீ கையெழுத்துப்போடு! நான் மேலே எழுதி அதன் பிறகு உனக்கு அதைப் படித்துக் காட்டுகிறேன். என்னை ஏமாளியென்று நினைத்தாயா, மேரி?"

"சரி, இந்தக் காகிதத்தில் நான் கையெழுத்துப் போட்டு விட்டு, உன்னைக் காட்டிக்கொடுக்காமல் இருந்தால்?"

"என்றால் உனக்கு எந்தத் தொல்லையும் இருக்காது!"

"ஏன்? இப்போதும் என்னைப்போலீஸ் தேடிக் கொண்டுதானே இருக்கும்? பராங்குசத்தை நான் தான் கொன்று விட்டுத் தலைமறைவாக இருக்கிறேன் என்றுதானே போலீஸ் நம்பிக் கொண்டிருக்கிறது?"

"பயப்படாதே! நீ வெளியே போனதும் உன்னைப் போலீஸ் கைதுசெய்யும். உனக்காகப் பெரிய கிரிமினல் வக்கீலை ஏற்பாடு செய்கிறேன். அன்று அதிகாலையில் நீ லாட்ஜிலிருந்து வெளி வந்ததைப் பார்த்த சாட்சியான வாட்ச்மேனை உனக்கு ஆதரவாகப் போலீஸில் சொல்லச் செய்கிறேன். அவன் பார்த்த பெண் நீ இல்லை

COMICS PDF TIMES

என்று அவனிடம் போலீஸ் உன்னைக் காட்டிய தும், அவன் சொல்வான்!''

''அவன் ஏன் பொய் சொல்கிறான்? அவன் பார்த்தது என்னைத்தானே?''

''உனக்கேன் அந்தக்கவலை! என்னிடம் பணம் இருக்கிறது, நாகராஜ் இருக்கிறான்! இனி உனக்கு எந்தப் பயமும் வேண்டாம்! உண்மையில் உனக்கு ஒரு பங்கு கொடுக்க நான் தயாராயிருக் கிறேன்! நீ இனிமேல் யாருக்குப் பயப்படவேண் டும்? உன் அக்காள் புருஷன் எமானுவேல் இந்த வீட்டின் பின்னால் புதைகுழிக்குப் போய் விட் டான்!''

''அடப்பாவி! அவரையும் கொன்று விட் டாயா?''

''அவரையும் என்றால்....அடுத்ததும் உனக் குத் தெரியுமா ஜாக்கிரதை, மேரி! எல்லாவற் றிலும் உனக்கும் பங்குண்டு என்று நீ கையெழுத் திட்டால் தான் உனக்கு விடுதலை!''

''மிஸ்டர் வஸந்த் என்ற விக்டர் அவர்களே! போதும் பேச்சு!''

அந்த உருவம் சற்றும் எதிர்பாராத வகையில் கட்டிலின் அடியிலிருந்து அதன் கால்களை இழுத் துக் கீழே தள்ளினான் சந்திரன். மேரி ஓடிச் சென்று அறைக்கதவைத் திறந்தாள். ஏசியும் ஏடியும் அறைக்குள் பாய்ந்து வந்து விக்டரின் கரங்களைக் கட்டினர். விக்டரின் சட்டைப் பொத் தானை விலக்கி உள்புனியனில் டார்ச்சு அடித்துப் பார்த்தான் ஏடி. அங்கே சிவப்பு நாகம் இல்லை!

அவரு கொலைகாரன்?

மறுநாட்காலை 7½ மணிக்குச் சந்திரன் பிரேமாலாட்ஜ் மானேஜர் அறையில் நுழைந்தான்.

"மானேஜர்ஸார்! எட்டாம் நம்பர் அறையை நான் பார்வை யிடவேண்டும்!"

"என்ன மிஸ்டர்சந்திரன், எல்லாம் தெரிஞ்ச நீங்க இப்படிக் கேட்கறீங்க? போலீஸ் சீல் வைத்திருக்கிற அறையை..."

"நான் இன்ஸ்பெக்டரிடம் அனுமதி பெற்றுத் தான் வந்திருக்கிறேன்! இன்று காலைப் பத்திரிகை பார்த்திருப்பீர்களே?"

"ஆமாம்! நீலவேணி கொலையில் ஜார்ஜின் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் போகிறார்கள்! மேரி இன்னும் அகப்பட வில்லையா? சரி, இன்ஸ்பெக்டர் அனுமதி கொடுத்திருக்கிறார் என்றீர்களே?"

சந்திரன் சட்டைப் பைகளில் தேடினான் "ஆஹா! மறந்து வைத்து விட்டு வந்துவிட்டேன்! இருங்கள்! இன்ஸ்பெக்டரையே உங்களிடம் சொல்லச் சொல்கிறேன்!"

"மன்னிக்க வேண்டும் சந்திரன்! டெலிபோன் தகவலை நம்புவது சட்டப்படிகூடாது!"

"சரி! என்னை நீங்கள் நம்புவீர்கள் என்று நினைத்தேன், இன்ஸ்பெக்டரையே உங்களிடம் நேரில் வந்து சொல்லச் சொல்கிறேன்."

டெலிபோன் டயல் சுழன்றது.

சந்திரன் அவிழ்த்த புதிர்

அன்று மாலையில் போலீஸ் நிலையத்தில் சந்திரன் ஒரு நோட்டுப் புத்தகத்தை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தான்.

"இன்ஸ்பெக்டர் சார்! இந்த நோட்டில் தொடர்ச்சியாக கோர்வையாக இந்தக் கொலைகள் எவ்வாறு திட்டமிட்டு நடத்தப் பட்டுள்ளன என்றும், நான் என்னென்ன முறையில் இவற்றின் துப்புக்களை அறிந்தேன் என்றும் எழுதியிருக்கிறேன். லாக்கப்பில் 'இருக்கும் மானேஜர் நாகராஜ், அவனுடைய ஆட்கள், விக்டர், ஜார்ஜ், மேரி ஆகியோரை இங்கு கொண்டு வாருங்கள். என் குறிப்பை அவர்கள் எதிரில் உரக்கவே படியுங்கள்! என் செக்ரட்டரி கிரேஸிக்கும், என் ஆட்கள் ஏஏ, ஏபி, ஏஸி, ஏடிக்கும் தெரியட்டும். பாவம்... அவர்கள் எல்லோரும் என் உத்தரவுகளை அவ்வப்போது ஒழுங்காக நிறைவேற்றினார்களே தவிர என்னுடைய நோக்கம் அவர்களுக்குத் தெரியாது இப்போது அவர்களும் தெரிந்து கொள்ளட்டும்! இதற்காகவே டானியலையும் அழைத்து வந்திருக்கிறேன். இதைப் படித்து முடித்த பிறகு நீங்கள் ஜார்ஜையும், மேரியையும் சந்தேகத்தின் பேரில் லாக்கப்பில் வைத்திருப்பது தவறு என்று புரிந்து கொண்டு அவர்களை விடுவிப்பதுடன் இந்தக் கொலைகாரர்கள் மீது குற்றப்பத்திரிகை தயாரிக்கவும் உங்களுக்கு உதவியாக இருக்கும்."

லாக்கப்பில் உள்ளவர்கள் கொண்டு வரப்பட்டனர். சந்திரன் விளக்கக் குறிப்பை இன்ஸ்பெக்டர் படிக்கத் தொடங்கினர்.

"முதலில் நடந்திருப்பது நீலவேணி கடத்தப் பட்டிருக்கும் குற்றம். அது நமக்குத் தெரியாது. நமக்குத்தெரிந்தது டாக்ஸி டிரைவரின் கொலை மட்டுமே. இரண்டாவதாகப் பராங்குசத்தின் கொலை, மூன்றாவதாக எமானுவேலின் கொலை, நான்காவதாக நீலவேணியின் கொலை, ஐந்தாவதாக ஆஸ் பத்திரியில் பாரா இருந்த கான்ஸ்டபிளின் கொலை, ஆறாவதாக ஆஸ்பத்திரியில்இருந்த இவர்கள் ஆட்களில் ஒருவனின் கொலை. இத்துடன் என்னையும் கொலை செய்ய ஏற்பாடு செய்தார்கள். பலிக்கவில்லை!

சிக்கல் வளர்ந்து நானே திணறியதற்கு ஓரளவிற்கு மேரி காரணம்.மேரி என்னிடம் முழு உண்மையைக் கூறாமல் சில செய்திகளை மறைத்து விட்டதால் துப்பறியும் வேலையில் நான் பல சோதனைகளுக்கு ஆளாக வேண்டி வந்து விட்டது. முதலில் மேரி என்னைச் சந்தித்தபோது, அன்று காலை பிரேமா லாட்ஜில் பாராங்குசத்தைச் சந்தித்துப் பேசியவிபரத்தை என்னிடம் மறைத்து விட்டாள். மறுபடியும் மேரி லாக்கப்பில் என்னிடம் பேசிய போது பராங்குசத்தைச் சந்தித்ததை மட்டும் ஒப்புக் கொண்டாளே தவிர, நீலவேணிக்கும், மேரிக்கும் உள்ள உறவை என்னிடம் கூறவில்லை. அதனால்தான் கடைசி நிமிஷம் வரையில் என் தீர்மானம் சரியா, தவறு என்ற முடிவுக்கு வரமுடியாத நிலையில் இருந்தேன்.

வஸந்த் என்ற விக்டர் இந்தச் சிக்கலில் எங்கே பொருந்துகிறார் என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை. நேற்றிரவு கீரனூர்வீட்டில் விக்டர் மேரியுடன் பேசியபோது கூறிய இரண்டு செய்திகள்தான் எனக்குத் தெளிவு தந்தன. ஒன்று

எமானுவேல் அந்த வீட்டின் பின் புறத்தில் புதை குழியில் இருக்கிறான்என்பது. இரண்டாவது நாகராஜ் அவன் ஆள் என்று விக்டர்கூறியது. விக்டருடன் இங்கே திரும்பியதும் உடனே இன்ஸ்பெக்டரிடம் கூறி, கிரனூர் வீட்டின் பின் புறத்தைச் சோதித்து தோண்டிப் பார்த்ததில் எமானுவேலின் உடல் கிடைத்தது.

நேற்று இரவு மீண்டும் கிரனூரிலிருந்து திரும்பிய பிறகு மேரியிடம் நான் அழுத்திக் கேட்ட பிறகு சில முக்கிய தகவல்களை அறிந்து கொண்டேன். எமானுவேல் மேரியின் ஒன்றுவிட்ட தமக்கையின் கணவர். மேரியின் தாயும்,எமானுவேலின் மாமியாரும் உடன் பிறந்தவர்கள். எமானுவேல் மலேயாவில் தொழில் செய்தார். அவர் ஒரு கோடீஸ்வரர். அவருக்கு ஏராளமான நிலபுலன்கள் திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் இருக்கின்றன. நீலவேணி எமானுவேலின் மகள். நீலவேணி இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் செங்கற்பட்டில் பிறந்தாள். அப்போது எமானுவேலின் மனைவி செங்கற்பட்டில் அவளுடைய தாய்வீட்டில் இருந்தாள். தமக்கைக்குப் பிள்ளைப் பேற்றில் உதவி புரிய மேரி திருச்சியிலிருந்து செங்கற்பட்டுக்கு வந்திருந்தாள். எமானுவேலின் மாமனார் இறந்து விட்டார். மாமியார் மட்டுமே இருந்தார். எமானுவேலின் மனைவி குழந்தை பிறந்ததுமே இறந்துவிட்டாள். தாய் இல்லாத அந்தப் பச்சிளம் குழந்தையைத் தான் நல்ல முறையில் வளர்ப்பதாகக் கூறி எடுத்துச் சென்றான் எமானுவேலின் சிற்றப்பா மகனான விக்டர். அவன் அந்தக் குழந்தையைச் சௌந்தரம்மாளிடம் சேர்த்து அவர்களைப் பரமுறுத்தி

வளர்க்கச் செய்ததுடன் அதே நாளில் சௌந்த ரத்திற்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாகவும், எமானுவேலின் மனைவியுடன் குழந்தையும் இறந்துவிட்டதாகவும் முனிஸிபாலிடியில் பதிவு செய்துவிட்டான்.

இங்குதான், இனிமேல்தான் ஜார்ஜ், மேரி ஆகியோரின் குடும்பச் செய்திகளை நான் விவரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன். அவர்கள் என்னை மன்னிப்பார்களாக! ஜார்ஜ் திருமணத்திற்கு முன்பாக சௌந்தரத்திடம் தொடர்பு கொண்டிருந்தார். சௌந்தரம் கருவுற்ற சமயத்தில் ஜார்ஜ், மேரியை மணந்து கொண்டு செங்கற்பட்டில் இருக்க விரும்பாமலோ என்னவோ திருச்சிக்கு வக்கீல் தொழில் பார்க்க வந்துவிட்டார். திருமணத்திற்கு முன்பாக மேரிக்கும், செங்கற்பட்டில் நகை வியாபாரியாக இருந்த பராங்குசம் என்பவருக்கும் வெறும் கடிதத் தொடர்பு மட்டும் இருந்திருக்கிறது. செங்கற்பட்டில் தன் தமக்கை குழந்தையைச் சௌந்தரம் என்னும் பெண்ணிடம் விக்டர் சேர்த்திருக்கும் விபரம் மேரிக்குத் தெரிந்தவுடன் அவள் மலேயாவில் எமானுவேலுக்கு உடன் கடிதம் எழுதியிருக்கிறாள். மேரிக்கும், பராங்குசத்திற்கும் கடிதத் தொடர்பு இருந்த செய்தி எவ்வாறு இன்று வரை ஜார்ஜுக்குத் தெரியாதோ, அதேபோல, திருமணத்திற்கு முன்பு ஜார்ஜுக்கும், சௌந்தரத்திற்கும் தொடர்பு இருந்து அவளுக்கு ஒரு குழந்தை பிறந்த செய்தியும் மேரிக்குத் தெரியாது, ஆனால் இரண்டு செய்திகளும் அப்போதே விக்டருக்குத் தெரியும். அதனால்தான் சௌந்தரம் திருமணமாகாமலே குழந்தை பெற்று வளர்த்து

வந்தாள் என்பதால்தான் அவளைப் பயமுறுத்தித் தன் அண்ணன் குழந்தையை அவள் குழந்தையாக மாற்றி அவளிடம் கொடுத்து வளர்க்கச் செய்திருக்கிறான். அந்தக் குழந்தையை உடனே கொன்றுவிட்டால் தன்மீது சந்தேகம் ஏற்படும் என்று பயந்து கொல்லாமல் இப்படியோர் ஏற்பாடு செய்திருக்கிறான். இதன் காரணம் தெரிந்ததே! எமானுவேலின் மனைவி இறந்த பிறகு அவருக்குப் பிறந்த குழந்தையும் இறந்துவிட்டதாகச் சட்டப்படி பதிவு செய்துவிட்ட பிறகு, எமானுவேலுக்குப் பிறகு, கோடீஸ்வரரான எமானுவேலின் அடுத்த வாரிசு விக்டர். எமானுவேல் இன்னொரு மணம் புரிந்து கொள்ளமாட்டார் என்று விக்டர் நினைத்தானே, அன்றி அடுத்து எமானுவேல் மலேயாவிலிருந்து இங்கு வரும் போது அவரையும் தீர்த்துவிடலாம் என்று நினைத்திருந்தானே தெரியாது. அவன் நோக்கம் தெரிகிறது. திருமணத்திற்கு முன்பு மேரிக்கும், பராங்குசத்திற்கும் கடிதத்தொடர்பு இருந்ததை விக்டர் அறிந்திருந்ததால் அதைக்கொண்டு மேரியைப் பயமுறுத்தியிருக்கிறான். அவள் தமக்கை குழந்தை செளந்தரம் வீட்டில் வளருவதை மேரி தெரிந்து கொண்டு விட்டாள் என்பதை யறிந்த விக்டர் அச் செய்தியை எமானுவேலுக்கோ அல்லது வேறு யாருக்கோ தெரிவித்தால், மேரியின் கணவர் ஜார்ஜியிடம், திருமணத்திற்கு முன்பு அவள் பராங்குசத்தைக் காதலித்துக் கடிதம் எழுதிய விபரத்தைக் கூறி, அந்தக் கடிதங்களையும் பராங்குசத்திடமிருந்து வாங்கி, ஜார்ஜுக்கு அனுப்பி விடுவதாகப் பயமுறுத்தி மேரியின் வாயை அடைத்து வைத்திருக்கிறான். ஆனால் மேரி திருச்சி சென்றதும் எமானுவேலுக்கு விவரத்

தைக்கூறி கடிதம் எழுதிவிட்டாள். இந்த விபரத்தைப் போலீஸில் சொன்னால் தன் ரகசியம் அம்பலமாகிவிடும் என்று பயந்துதான் வறிதே இருக்க நேரிட்டுள்ளது என்று விக்டர் பயமுறுத்திய விபரத்தையும் எமானுவேலுக்கு மேரி எழுதியிருக்கிறாள். கடிதம் கண்ட எமானுவேல் உடனே இங்கு வந்து அந்தக் குழந்தையை எடுத்துப்போக விரும்பவில்லை. இரண்டு காரணங்களுக்காக ஒன்று, அவர் இங்கு வந்தால் மேரி அவருக்கு எழுதிவிட்டாள் என்பது விக்டருக்குத் தெரிந்து மேரியின் ரகசியத்தை ஜார்ஜுக்குத் தெரிவித்து விடுவான். இரண்டாவதாக ஏதாவது சதி செய்து தன்னையும், தன் குழந்தையையும் உடனே கொலை செய்தாலும் செய்து விடுவான் விக்டர். தன் குழந்தையை எமானுவேலால் மலேயாவிற்கு எடுத்துச் சென்று வளர்க்கவும் முடியாது. குழந்தையை மேரியிடமோ அல்லது வேறு யாரிடமோ கொடுத்துத்தான் வளர்க்கச் சொல்லவேண்டும். மேரியிடம் குழந்தையைக் கொடுப்பதால் மேரிக்கும், அந்தக் குழந்தைக்கும் ஆபத்து. எனவே குழந்தை சௌந்திரத்திடம் வளருவதே நல்லது என்று இருந்துவிட்டார் எமானுவேல்! தன் குழந்தையை வளர்க்கும் செலவிற்கு சௌந்தரத்திற்கு மாதா மாதம் தன்னைக் காட்டிக் கொள்ளாமலே எமானுவேல் பணம் அனுப்பி வந்தார். ஷெனும் நகரில் இருக்கும் அவர் நண்பன் சபேசன் என்பவருக்குப் பணம் அனுப்பி மாதா மாதம் சௌந்தரத்திற்குச் சபேசனை நூறு ரூபாய் செக் அனுப்பச் சொல்லியிருக்கிறார். சபேசன் எமானுவேல் பெயரை யாரிடமும் சொல்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார். எனவே சௌந்தரம் சபேசனைப் போய்க் கேட்டிருந்தாலும்

அவளிடம் சொல்லியிருந்திருக்க மாட்டார் என நினைக்கவேண்டியிருக்கிறது. இந்த வழக்கில் சபேசன் ஒரு முக்கிய சாட்சி.

சௌந்தரம் இறந்த செய்தி அறிந்து எமானுவேல் இங்கு புறப்பட்டு வந்தாரா இல்லை சாதாரணமாக அது தெரியாமல் புறப்பட்டு வந்தாரா என்பது தெரியவில்லை. அவர் தைரியமாகச் செங்கற்பட்டில் சௌந்தரம் வீட்டில் சென்று விசாரித்திருப்பதைப் பார்க்கும்போது, சௌந்தரம் இறந்த செய்தியறிந்துதான் வந்திருக்கவேண்டும். இல்லையென்றால் தன் மகளைத் தான் அறிந்திருப்பதாகக் காட்டிக்கொள்ளத் துணிந்திருக்க மாட்டார் விக்டரிடம்!

இப்போது நான் கூறப்போவது என் அனுமானம்! சௌந்தரம் இறந்த செய்தியை விக்டரே வேறு எவர் பெயரிலாவது எமானுவேலுக்குத் தெரிவித்திருப்பான் என நினைக்கிறேன். அப்போது உடனே தன் மகளை அழைத்துப் போக எமானுவேல் பறந்து வருவார்; அவரையும், நீலவேணியுடன் தீர்த்துக் கட்டலாம் என்பது அவன் திட்டம் என்பது என் கருத்து.

இன்னொன்று, நான் சபேசனிடம் அவர் சௌந்தரத்திற்குப் பணம் அனுப்பி வருவது குறித்து விசாரித்துவிட்டு அவரை நோட்டம் பார்த்தபோது அவர் உடனே வண்ணாரப் பேட்டையில் விக்டரைத் தேடிச் சென்றார். அதன் காரணம் முதலில் எனக்குப் புரியவில்லை பிறகு நான் அனுமானித்துத் தெரிந்து கொண்டேன். சபேசனை விசாரித்தால் தெரியும்! சபேசன் சௌந்தரத்திற்குப் பணம் அனுப்புவது விக்டருக்

குத் தெரிந்திருக்க வேண்டும். எமானுவேல் இங்கு வந்து கொலை செய்யப்பட்டவுடனே அல்லது ஓரிரு நாட்கள் முன்போ போன்மூலம் சபேசனுக்கு எமானுவேல் அனுப்புவதுபோல் விக்டர் செய்தி அனுப்பிச் சபேசனை ஏமாற்றியிருக்க வேண்டும். அதாவது எமானுவேல் சென்னை வந்துவிட்ட தாகவும், பிறகு வந்து அவரைச் சந்திப்பதாகவும் சௌந்தரம் குறித்துச் சபேசனை யார் விசாரித்தா லும் உடனே வண்ணாரப்பேட்டை விக்டரிடம் வந்து கூறவேண்டியது என்றும் கூறியிருக்க வேண்டும். அதனால்தான் சபேசன் நான் விசாரித் ததும் விக்டரின் கடையைத் தேடிப் போயிருக் கிறார்.

எமானுவேல் சென்னை வந்ததும் செங்கற் பட்டில் சௌந்தரம் வீட்டில் தன் மகள் இல்லை யென்று அறிந்து திருச்சிக்குப் புறப்பட்டிருக் கிறார். மேரியைச் சந்திக்க அவர் விரும்பியிருக்க லாம், ஆனால் திருச்சிக்கு வந்தவர் செய்திப் பத் திரிகைமூலம் பிரேமா லாட்ஜில் நிகழ்ந்த பராங்கு சம் கொலையைப் பற்றியும், மேரியைப் போலீஸ் தேடிக் கொண்டிருப்பதை யும் அறிந்து நேராகப் பிரேமா லாட்ஜில் தங்கச் சென்றிருக்கிறார். பராங்குசத் திற்கும், மேரிக்கும் கடிதத் தொடர்பு இருந்ததும் அதைக் கொண்டு மேரியை விக்டர் பயமுறுத்தி வந்ததையும் மேரி எழுதி எமானுவேல் அறிவார். ஆகவே பராங்குசத்தை விக்டர்தான் கொலை செய்திருக்க வேண்டும், மேரியின் மேல் சந்தே கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொலை நடந்த அறைக்குப் பக்கத்தில் ஏழாம் நம்பர் அறையில் மந்திரவாதி வேஷத்தில்

தங்கத் தீர்மானித்திருக்கிறார். இரவு நேரத்தில் அடுத்த அறையைச் சோதித்துப் பார்க்க நினைத்தாரோ, இல்லை அந்த அறைக்குக் கொலைகாரர் மீண்டும் வருவார் என்று எதிர்பார்த்தாரோ தெரியவில்லை. ஆனால் ஒன்பதாம் நம்பர் அறையில் தன் மகள் நீலவேணி கொண்டு வந்து வைக்கப் பட்டிருப்பது அவருக்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன்! சென்ற பத்து நாட்களுக்கு மேலாகவே விக்டரும் இங்குதான் இருந்து வந்திருக்கிறான். கீரனூர் வீட்டில் அவன் தங்கியிருந்திருக்க வேண்டும். அந்த மந்திரவாதியைச் சந்தேகப்பட்டு வேண்டுமென்றுதான் மானேஜர் அவருக்கு இடம் கொடுத்திருக்க வேண்டும். போலீஸிடமும், என்னிடமும் தான் ஏமாந்து விட்டதாக மானேஜர் நடித்திருக்கிறான். என்னிடமே வந்து கொலைகாரனைக் கண்டு பிடிக்குமாறு தனிப்பட்ட முறையில் வேறு கேட்டிருக்கிறான். அதற்காக எனக்கு அட்வான்ஸாகப் பணமும் கொடுத்திருக்கிறான்....அப்போதுதானே அவன் மீது எனக்குச் சந்தேகம் ஏற்படாது!....மந்திரவாதிக்கு இடம் கொடுத்து விட்டு விக்டருக்குத் தகவல் கொடுத்திருக்கிறான். விக்டர் மந்திரவாதியை நேரில் சந்தித்திருக்க வேண்டும். ஏற்கெனவே விக்டர் எமானுவேலுக்குக் கடிதம் எழுதியிருப்பதால், அவன் எமானுவேல் என்று விக்டர் அறிந்திருக்க வேண்டும். மானேஜரிடம் தகவல் கூறி மறுநாள் எமானுவேலை மானேஜர் கொலைசெய்து இரவில் கீரனூருக்கு அவர் உடலைக் காரில் எடுத்துச் சென்று புதைத்திருக்கிறார்கள். அந்த மந்திர வாதி வந்ததை வைத்துக் கொண்டே நீலவேணியையும் கொலை செய்யத் திட்ட மிட்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நீலவேணியைப் பற்றி.... சௌந்தரம்மாள் இறந்த செய்தியைக் கேள்விப் பட்டதும் நீலவேணியைத் திருச்சிக்கு புறப்பட்டு வரும்படிக் கூறி டானியல் கடிதம் எழுதியிருக்கி ருன். சௌந்தரம் இறந்து ஒன்றரைமாதங் களுக்குப் பிறகுதான் அந்தச் செய்தி தனக்குத் தெரியும் என்று டானியல் போலீஸில் கூறிய செய்தி பொய். அவன் வேறு செய்தியொன்றை மறைப்பதற்காகப் போலீஸில் அப்படிப் பொய் சொல்லியிருக்கிருன். அது என்னவென்று இப்போது ஜார்ஜுக்குத் தெரிந்திருக்கும்... ஆம்! டானியல்.! ஜார்ஜின் மகன்! அது வெளியே தெரிய வேண்டாம் என்று விரும்பியே தன் தந்தை உயிருடன் இல்லை என்று டானியல் இன்ஸ்பெக்டரிடம் கூறியிருக்கிருன். இப்போது சௌந்தரம் கிணற்றில் விழுந்தது தவறியா அல் லது அவளும் கொலை செய்யப் பட்டாளா என்பது தெரியாது.'அது நம் புலன் விசாரணையில் இல்லா ததால் அதை ஏழாவது கொலையாகச் சேர்த்துக் கொள்ளவில்லை. சௌந்தரத்தைக் கொன்று நீல வேணியைக் கடத்திச் சென்று கொலை செய் யும் நோக்கத்துடன் விக்டர் இருந்திருக்கலாம். நீல வேணியைச் சட்டப்படி சௌந்தரத்தின் மக ளாக ஆக்கிவிட்டாலும், எமானுவேலுக்கு நீல வேணி தன் மகள் என்பது தெரிந்து விட்டதால் அவர் அவளை அழைத்துச் சென்று திருமணம் செய்து கொடுத்து அவர் சொத்தை அவள் பெய ருக்கு எழுதி வைக்கலாம் அல்லவா? சௌந்தரத் திற்குப் பணம் அனுப்புமாறு சபேசனை ஏற்பாடு செய்திருந்தார் எமானுவேல் என்பதை அறிந்த விக்டர், அவர் மகள் உயிருடன் இருப்பதை அவர் அறிந்திருக்கிருர் என்று தெரிந்து கொண்டார்.

எனவேதான் நீலவேணியையும், எமானுவேலையும் கொன்று தீர்க்கத் திட்டம் இட்டிருக்கிறார்.... செளந்தரத்திடம் சிறு குழந்தையாக நீலவேணியைத் தன் ஆட்கள் சேர்த்த விவரத்தைச் செளந்தரம் வெளியிடக்கூடாது என்றெண்ணியே செளந்தரத்தை விக்டர் கொலை செய்திருக்க வேண்டும் அவனே அவன் ஆட்களோ என்று நினைக்கிறேன். செங்கற் பட்டில் தனியாக இருந்தால்தனக்கு ஆபத்து என்பதை எப்படியோ நீலவேணி அறிந்திருக்க வேண்டும். அதனால் செங்கற்பட்டை விட்டுச் செளந்தரம் இறந்த சிலநாட்களில் புறப்பட்டிருக்க வேண்டும். டானியலின் கடிதமும் அவளுக்குக் கிடைத்திருக்க வேண்டும். அதன் பிறகு ஏறத்தாழ ஒன்றரை மாதங்கள் அவள் வெளியூரில் எங்கேயோ, யாரிடமோ வேலை பார்த்திருக்க வேண்டும். அதை அவள் டானியலுக்கு எழுதியுள்ள கடிதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம், செங்கற்பட்டில் தனக்கு எதிரிகள் இருக்கிறார்கள் என்ற அளவில் மட்டுமாவது நீலவேணி அறிந்திருந்ததாலேயே வெளியூர் புறப்பட்டிருக்கிறாள். அதன் பிறகு டானியலிடம் வரத் தீர்மானித்துத்தான் புறப்பட்டு வரும் ரயிலையும், நேரத்தையும் தெரிவித்து டானியலுக்குக் கடிதம் எழுதி யிருக்கிறாள். அதைத்தான் மானேஜர் கைப்பற்றி யிருக்கிறான்!

இப்போது விக்டருக்கும், மானேஜருக்கும் உள்ள தொடர்பை நான் விளக்க வேண்டும். மானேஜர் நாகராஜ் சாதாரணமானவன் இல்லை. அவன் ஒரு பெரிய கூட்டத்தின் தலைவன். பார்ப்பதற்கு எதுவுமே தெரியாத ஏமாளி போன்று தோற்றமளிக்கும் இவன் கூட்டம் திருச்சியிலும்,

சென்னையிலும் இருப்பது தெரிகிறது. விக்டர் போன்ற பேராசைக் காரர்களுக்காக அநியாயம் எல்லாம் செய்து முடிப்பதற்காக ஒரு கம்பெனி போலத் தன் தொழிலை நடத்துகிறான் அவன். விக்டருக்காக அவனிடம் பணம் பெற்றுக் கொண்டு இந்த அநீதியைச் செய்திருக்கிறான் அவன். இப்போது பிடிபட்டிருக்கிறான். இதற்கு முன் அவன் யாருக்காக என்னென்ன செய்திருக்கிறானோ தெரியவில்லை!

தபாற்காரர் ஒருவரைக் கைக்குள் போட்டுக் கொண்டு டானியல் பெயருக்கு வரும் கடிதங்களைத் தன்னிடம் கொண்டு வந்து கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருக்கிறான். செளந்தரம்மாள் இறந்ததும் நீலவேணி வேறு எங்கோ போய்விட்டதும், அவள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்ள முயன்றிருக்கிறான் நாகராஜ். எப்படியும் நீலவேணி டானியலுக்குக் கடிதம் எழுதுவாள், அதைக் கைப்பற்ற வேண்டும் என்பதே நாகராஜின் திட்டம். நீலவேணி டானியலுக்கு எழுதிய கடிதத்தைக் கைப்பற்றி, அவள் திருச்சிக்கு வந்திறங்கியதும் அந்தக் கடிதத்தைக் காட்டி ஏமாற்றி, அவளைத் தன் ஆட்களை விட்டுக் கீரனூருக்குக் கடத்திச் சென்றிருக்கிறான். இடையில் டாக்ஸி டிரைவர் ஏதோ தகராறு செய்திருக்க வேண்டும். அதனால் டிரைவரைக் கொலை செய்து சாலையோரத்தில் அவன் உடலை மறைத்து விட்டு நீலவேணியைக்கீரனூரில் சேர்த்துவிட்டு, டாக்ஸியை திருச்சி ஜங்ஷனில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறான் இவன் ஆள்.

நீலவேணி டானியலுக்கு எழுதிய கடிதம்தனை எப்படி மறைந்தது என்று அறியநான் ஒரு சோ

நடத்தினேன். டானியலுக்கு ஒரே சமயத்தில் நான்கு கடிதங்கள் தபாலில் சேர்த்தேன். ஒன்று திருச்சியிலேயே உள்ளூர்த்தபால். இரண்டாவது செங்கற்பட்டில் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் தபால் வண்டியில். மூன்ருவது செங்கற்பட்டு ஜங்ஷன் தபால் பெட்டியில். நான்காவது செங்கற்பட்டுத் தலைமைத் தபால் நிலயத்தில். செங்கற்பட்டுக்கு நானே சென்றேன். இன்னொரு காரணத்திற்காகவும், கடிதம் எங்கே திருடப்படுகிறது என்பதை அறியவே இப்படிச்செய்தேன். உள்ளூர்த் தபால் மட்டும் டானியலுக்குக் கிடைத்தால், மற்றவை கிடைக்கவில்லை என்ருல், கடிதம் வருகிற வழியில் மறைகிறது என்று பொருள். உள்ளூர்த் தபாலும் மறைகிறது என்ருல் திருச்சியில்தான் திருட்டு நடக்கிறது என்று பொருள். நீலவேணி எந்த ஊரிலிருந்து டானியலுக்குக் கடிதம் எழுதினுள் என்பது தெரியாது. ஆதலால் நான் செங்கற்பட்டுத் தபாலில் சேர்த்தேன். நான் எதிர்பார்த்தவாறே நான்கு கடிதங்களும் டானியலுக்குக் கிடைக்கவில்லை. திருச்சி தபாற்காரர் தானே ஜருக்கு உள்கையா யிருந்திருக்கிருர்!

செங்கற்பட்டில் சௌந்தரம்தங்கியிருந்த வீட்டில் விசாரித்துச் சபேசனைப் பற்றி யறிந்து கொண்டு, சபேசனிடமும் விசாரித்து சபேசனை வேவு பார்த்து, விக்டர் கடையை வண்ணாரப்பேட்டையில் கண்டு விக்டர் ஊரில் இல்லை யென்றும் அறிந்துகொண்டேன். இன்னொருவர் சௌந்தரத்தைப் பற்றி விசாரித்ததாக அந்த வீட்டுக்காரர் சொன்னதும், விக்டர்தான் சபேசன் மூலம் சௌந்தரத்திற்குப் பணம் அனுப்பியவர் என்றும் அவர் திருச்சிக்குச் சென்றிருக்க வேண்டும் என்

றும் நினைத்தேன். மூன்னவை யிரண்டும் தவறு என்ருலும், விக்டர் நான் நினைத்தபடியே திருச்சிக்கு வந்திருக்கிருன்.

சென்னையில் செளந்தரத்தைப் பற்றி விசாரித்தவர் என்னைச் சந்திக்கலாம்என்று பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தேன். அதைப் பார்த்து எதிரி அங்கு இருந்தால் என்னை மடக்க முயலுவான். அவனையறிந்து கொள்ளலாம் என்று துணிந்து முன்னெச்சரிக்கையுடன் இருந்தேன். என் ஆட்கள் ஏசி ஏடி ஆகியோரின் துணிச்சலாலும், சென்னை பி. எல். போலீஸ்நிலையத்து இன்ஸ்பெக்டரின் உதவியாலும் சென்னைக் கூட்டத்தை பிடித்தேன். தலைவன்தான் ஆற்றில் குதித்து இறந்து விட்டான்! அப்போதுதான் அவர்கள் சிவப்பு நாகத்தின் உருவம் பின்னப்பட்ட பனியனை அணிந்து கொள்ளும் அடையாளத்தை அறிந்து கொண்டேன்.

பின்னர் நான் திருச்சிக்குத் திரும்பியதும் தபால் திருடனைக் கையும் களவுமாகப் பிடிக்க ஏற்பாடுசெய்தேன், ஏடி தந்திரமாக அன்று தபாலில் டானியலுக்குச் சேர்ந்த உள்ளூர்த் தபாலைத் தபாற்காரரிடமிருந்து, நாகக் கூட்டத்தைச் சேர்ந்தவனுக நடித்து வாங்கி வந்தான். செங்கற்பட்டிலிருந்து டானியலுக்கு எழுதிய கடிதத்தைப்பற்றி நீலவேணியின் அடுத்த வீட்டு அம்மாள் பங்கஜம் என்பவள் டானியலுக்கு எழுதுவது போலக் கிரேஸியை எழுதும்படி கூறினேன் மூன்று கடிதங்கள். சென்ற செவ்வாயன்று மாலை 6 மணிக்குத் திருச்சி வரும் திருவனந்தபுரம் பகல் எக்ஸ்பிரஸில் திருச்சிவந்து சேருவதாகவும், தன்னை ஜங்ஷனுக்கு வந்து டானியல் அழைத்துச்செல்ல வேண்

டும் என்றும் பங்கஜம் எழுதியதுபோல. நீலவேணி யிடமிருந்து திருச்சிக்குச் செல்வதாகத் தனக்குக் கடிதம் வந்ததாகவும், அதன் பிறகு அவளிட மிருந்து கடிதமே இல்லை என்றும், எனவே அவ ளைப் பற்றிய கவலையாக இருப்பதால் அவளைப் பார்க்கப் பங்கஜம் திருச்சிக்குப் புறப்படுவதாக, நாசூக்காக அக் கடிதத்தில் நீலவேணி எந்த ஊரி லிருந்து பங்கஜத்திற்கு எழுதினாள் என்பதை நான் சொல்லவில்லை... ஏனென்றால் எனக்கே தெரி யாதே.

ஒரேசமயத்தில் டானியலுக்குமூன்றுகடிதங்கள் எழுதியதற்கு ஒவ்வொரு கடிதத்திலும் ஒரே கார ணம் பங்கஜம் கூறுவதாக, பங்கஜம் எழுதும் கடி தம் டானியலுக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ என்று அவள் பயப்படுவதால் ஏதாவது ஒன்று கிடைக்காதா என்று மூன்று கடிதங்கள் எழுதுவ தாக! கடிதத்தைக் கைப்பற்றியதும் நீலவேணி யைக் கடத்தி சென்றவன் நிச்சயம் பங்கஜத்தை யும் கடத்திச் செல்ல ஜங்ஷனுக்கு வருவான். பங் கஜம் உருவத்தில் கிரேஸிமை விருத்தாசலத்தி லிருந்து இரயிலில் திருச்சி ஜங்ஷனில் இறங்கச் செய்து அதன் பின்னர் நாம் கீரனூரில் இவர் களைப் பிடித்து மேரியை மீட்டது தெரிந்ததே.

அடுத்து மேரிமைப் பற்றி மேரி விக்டர் தன் னைப் பயமுறுத்துவதை என்னிடம்கூறாமல் பராங் குசமே நேரில் அடிக்கடி வந்து பயமுறுத்தியதா தக் கூறினாள். டானியலை விசாரித்ததில் அப்படி எந்த ஆளும் ஒருபொழுதும் அவர்கள் வீட்டுக்கு வந்து தான் பார்த்ததில்லைஎன்று கூறினான். பின் னால் விக்டர் கைது ஆனதும் எனக்கு அந்தச் சிக் கல் விடுபட்டது. விக்டர் பயமுறுத்துவதால் பராங்

குசத்திடமிருந்து தன் கடிதங்களை பெற விரும்பி மேரி பராங்குசத்தைத் திருச்சிக்கு வரும்படி கூறி எழுதியிருக்கிறாள்.

பிரேமா லாட்ஜின் மானேஜர் தன் எதிரி என்பதை அறியாதமேரி பராங்குசத்தைக் குறிப்பிட்ட நாளில் பிரேமா லாட்ஜில் வந்து தங்கச் சொல்லியிருக்கிறாள். மேரியுடன் அவர் பேசுவது யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்காகவே பக்கத்து இரண்டு அறைகளுக்கும் அவரே வாடகை கொடுத்திருக்கிறார். பக்கத்து அறைகளில் யாரும் தங்கக் கூடாது என்பது மேரியின் விருப்பம். மேரியே அப்படி எழுதியிருக்கிறாள். இதையெல்லாம் மேரி பின்னால் என்னிடம் ஒப்புக்கொண்டாள். விக்டர் பத்து நாட்களுக்கு மேலாக இங்கு தானே தங்கியிருக்கிறான்? அவன் பராங்குசத்தைக் கண்டு அவன் அங்கு வந்த நோக்கத்தை அறிந்திருக்க வேண்டும். பராங்குசத்தைக் கண்காணிக்க லாட்ஜிலேயே தங்கி யிருந்திருக்கவேண்டும். மேரியைச் சந்திக்கத்தான் அவர் அங்கு வந்திருக்கவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பான் விக்டர். அதுவும் சௌந்தரம்மாள் இறந்த இரண்டு மாதங்களில் பராங்குசம் அங்கு வந்திருக்கிறான் என்றால், சௌந்தரம் இறந்து நீலவேணி செங்கற்பட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற விபரம் மேரிக்குத்தெரிந்து, நீலவேணியைத் தேடி கண்டு பிடிக்க முயற்சி செய்கிறாளோ என்னவோ போலீஸில் புகார் கொடுக்கத் துணிந்து விட்டாள் போலிருக்கிறது. தன் பயமுறுத்தலுக்குப் பயப்படாமல் இருக்க, பராங்குசத்திடம் பேரம் பேசிக் கடிதங்களைப் பெறத்திட்டமிட்டிருக்கிறாள்போலும் என்று விக்டர் எண்ணியிருக்க வேண்டும். உண்

மையில் சௌந்தரம் இறந்ததும், நீலவேணி புறப் பட்டுச்சென்றதும் மேரிக்குத்தெரியாது. மானேஜ ரிடம் மேரியைப் பராங்குசம் சந்திக்கு முன்பு பராங்குசத்திடமிருந்து கடிதங்களைக் கைப்பற்ற விக்டர் சொல்லியிருக்க வேண்டும். பராங்குசம் வெளியே செல்லும் சமயம் கடிதங்களை அவர் அறையிலிருந்து திருட எண்ணியிருக்க வேண்டும் மானேஜர்! ஆனால் அன்று அதிகாலையில் மேரி பராங்குசத்தின் அறைக்குச் சென்றதைக் கண்ட மானேஜர் சிற்றுண்டிச் சாலைப் படிக்கட்டு வழி யாக எட்டாம் நம்பர் அறைக்கு வெளியே நின்று அவர்கள் பேச்சைக் கேட்டிருக்கிறான். முன் கூட் டியே வாட்ச்மேனை வெளியே நிறுத்தி வைத்து மேரி வெளியே செல்லும்போது கையில் ஏதாவது கொண்டு சென்றால் அவளைத் தடுத்து நிறுத்தி வைக்குமாறு கூறியிருந்தான். மேரி பராங்குசத் தின் அறையிலிருந்து வெளியேறிச்சென்றபோது ஒன்பதாம் நம்பர் அறையில் மறைந்து, பிறகு பராங்குசம் அறைக்குள் நுழைந்த மானேஜர், அங்கே அவர்முன்னே மேஜையில் சிலகடிதங்களை கண்டதும, அவர் அவற்றை மேரியிடம் காட்டிவிட்டு எடுத்து வைத்திருக்கவேண்டும் என்று தெரிந்து கொண்டு அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் துணிந்து பராங்குசத்தின் வாயை அடைத்துக் கத்தியால் விலாவில் குத்திக் கடிதங் களை எடுத்துக்கொண்ட சமயத்தில் ஜார்ஜ் வரும் சப்தம் கேட்டு மானேஜர் ஒளிந்திருக்க வேண்டும்.

அந்த அறையில் ஒளிவதற்கு இடம் இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது! அப்படி மறைந்துகொள்ள எதுவும் இல்லாவிட்டாலும் கட்டிலுக்கு அடியிலோ, கதவுக்குப் பின்புறமோ ஒளிந்து கொண்டிருந்து விட்டு, ஜார்ஜ் இறந்த பராங்குசத்தைக் கண்டு அதிர்ச்சி யடைந்து ஜன்னல் வழியாக வெளியேறியதும் மானேஜர் அறையிலிருந்து வெளியேறித் தன் அறையில் சென்று படுத்திருக்க வேண்டும். பராங்குசத்துடன் கடைசியாகப் பேசிச் சென்றது மேரி என்று வாட்ச்மேனைச் சாட்சியாக ஏற்பாடு செய்த மானேஜருக்கு, அவனே எதிர்பாராத விதமாக, மேரியின் கணவனே மேரி சென்றதும் வந்து பராங்குசத்தைப் பார்த்துவிட்டுச் சென்றது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆகிவிட்டது. அச்சமயத்தில் தான் தூங்கிக் கொண்டிருந்ததாகவும், மேரி வந்தது தனக்குத் தெரியாது என்றும் மானேஜர் என்னிடமும், போலீஸிடமும் கூறிவிட்டான். அதே சமயத்தில் வாட்ச்மேனிடம் மேரி கையில் ஏதாவது கொண்டு போனால் தடுத்து நிறுத்தும்படியும் இல்லையென்றால் அவளைத் தடுக்கவேண்டாம் என்று கூறினானே தவிர, மானேஜர் பராங்குசம் அறைக்குச் சென்றதும், பராங்குசத்தைக் கொலை செய்ததும் வாட்மேனுக்குத் தெரியாது. மானேஜர் சிற்றுண்டிச் சாலைப் படிக்கட்டு வழியாக மாடிக்கு வந்திருக்கிறார். மறுநாள் காலை பராங்குசம் கொல்லப்பட்ட செய்தியறிந்த வாட்ச்

மேனையும் உண்மையிலேயே மேரிதான் பராங்கு சத்தைக் கொன்றவள் என்று எண்ணுமாறு செய்திருக்கிருன் மானேஜர் முன்னெச்சரிக்கை யுடன்!

மறுநாள் மேரியைச் சந்தித்து இருபதாயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு கடிதங்களைக் கொடுப்ப தாகப் பராங்குசம் கூறியதைக் கேட்டுக்கொண் டிருந்த மானேஜர் தன் ஆளை அனுப்பி மேரியை ஏமாற்றிப் பராங்குசம் அழைப்பதாகக் கூறிப் பணத்துடன் அழைத்துவரச் செய்து கிரனூரில் அடைத்து விட்டான். இருபதாயிரம் ரூபாய் மொத்தமாக அவனுக்குக் கிடைத்து விட்டதுடன், மேரி தலைமறைவாக இருக்கிருள் என்று போலீஸை நம்பச் செய்து, அவள்மீது போலீ ஸுக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை ஊர்ஜித மும் செய்துவிட்டான்.

மேரியைக் கிரனூர் வீட்டுக்குக் கொண்டு சென்றவுடன் நீலவேணியை அங்கிருந்து பிரேமா லாட்ஜில் ஒன்பதாம் நம்பர் அறைக்குக் கொண்டு வந்து விட்டான். அவன் ஆள் ஒருவனை அவளு டன் இருக்கச்செய்தான். பராங்குசத்திற்குப்பிறகு நீலவேணியைக் கொன்றுவிட விக்டர் விரும்பி மானேஜரிடம் கூறியிருக்க வேண்டும். நீலவே ணியை ஒன்பதாம் நம்பர் அறையில் கொலை செய்துவிட்டால், எட்டாம் நம்பர் அறையில் நடை பெற்ற பராங்குசத்தின் கொலைக்கும், நீலவேணி

யின் கொலைக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகப் போலீஸ் குழப்பிக் கொள்ளும். பின்னால் நீலவேணி யார் என்ற விபரம் வெளிவந்ததும், டானியல் கூறினாலும், போலீஸ் ஜார்ஜைச் சந்தேகப்படவேண்டும். காரணம் நீலவேணி செளந்தரம் மகள் என்பது ரிக்கார்டு. தன் ஆசை நாயகியாயிருந்த செளந்தரம் தனக்குப் பிறகு வேறு எவனுடனோ தொடர்பு கொண்டதால் பிறந்தவள் நீலவேணி என்ற ஆத்திரம், பொறாமையால் ஜார்ஜ் நீலவேணியைக் கொலை செய்துவிட்டதாகப் போலீஸ் நம்பவேண்டும். இரண்டு கொலைகள் செய்து, கணவனையும், மனைவியையும் சிறைக்கனுப்பத் திட்டமிட்டான் மானேஜர்.

ஜார்ஜை எப்படிச் சிக்க வைப்பது என்று மானேஜர் சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் அவனிடம் மந்திரவாதியாக எமானுவேல் வந்து சேர்ந்தார். உடனே ஜார்ஜுக்குத் தபாலில் பயமுறுத்தல் கடிதமும், அந்த மந்திரவாதியின் உடைபோன்ற உடையையும் அனுப்பினான். மறுநாள் இரவே ஏழாம் நம்பரில் எமானுவேலைக் கொலை செய்து கிரனூரில் அவர் உடலைப் புதைத்துவிட்டான். அந்த அறையில் மந்திரவாதி இருப்பதாக லாட்ஜியில் உள்ளவர்களை நம்பச் செய்வதற்காக அந்த அறைக் கதவைப் பூட்டாமல் அடைத்து வைத்திருந்திருக்கிறான். லாட்ஜில் இருப்பவர்களையும், போலீசையும் நம்பச் செய்வதற்காக, மானேஜரின் ஆள் மந்திரவாதிஉடையில்

பன்னிரண்டு மணிக்கு முன்பாக ஏழாம் நம்பரி லிருந்து ஒன்பதாம் நம்பரில் அலறல் சப் தம் கேட்பதாகப் போன் செய்து மானே ஜர் அங்கு வந்திருக்கிறான். பன்னிரண்டு மணியானதும் ஜார்ஜ் கடிதப்படி வந்திருப்பார் என்று அறிந்து, 'அந்த' மந்திரவாதியை ஒன்ப தாம் நம்பருக்குள் அனுப்பி நீலவேணியை கொலை செய்யச் செய்து விட்டு, அவனை ஜார்ஜின் மோட்டார் சைக்கிளில் தப்பச் செய்திருக்கிறான். அறை இருட்டாக இருந்ததால் உள்ளே அடிபட் டுக் கிடந்தவனை மானேஜர் பார்க்காமல் மந்திர வாதியைத் தொடர்ந்து ஓடி ஏமாந்து விட்டதாக நாடகமாடியிருக்கிறான். அடிபட்டு ஆஸ்பத்திரி யில் கிடந்த அவன் ஆள் நீலவேணியின் பெயரைச் சொல்லி விட்டதையறிந்து அவனையும் கான்ஸ் டபிளையும் ஆட்களை அனுப்பிக் கொலை செய்து விட்டான்.

பிடிபட்ட விக்டரிடம் சிவப்பு நாகப் பணியன் இல்லை யென்றறிந்து, விக்டருக் ம் மேரிக்கும் நடைபெற்ற உரையாடலையும் கேட்டபிறகு, விக்ட ருக்காக அந்தக் கூட்டம்வேலைசெய்ய வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். பிரேமாலாட் ஜில் பதிவுப்புத்தகத்தைப் பார்த்தபோது நாக ராஜ் என்ற மானேஜரின் கையெழுத்தைப் பார்த் தேன். அப்போதுதான் எனக்கு மானேஜரின் பெயர் தெரியும். ஏழாம் நம்பர் அறையில் நான் வஸந்தைச் சந்தித்து வெளியேறியதும் மானேஜர்

வஸந்துடன் அவன் அறையில் பேசிக்கொண்டிருந்தான் என்று அச்சமயத்தில் மானேஜர் அறையிலிருந்து ஏழாம்நம்பர் அறைக்குப் போன்செய்து மானேஜருடன் பேசி உறுதிப்படுத்திக் கொண்டேன். அன்றுஇரவு கிரஹாரில் மேரியிடம் விக்டர் நாகராஜ் பெயரைக் கூறியதும் என் சந்தேகம் தீர்ந்து மானேஜர்தான் கொலைகாரன் என்ற தீர்மானத்திற்கு வந்தேன். சென்னையில் கைப்பற்றப்பட்ட காரை இங்கு கொண்டு வரச்செய்து, அதை லாட்ஜுக்குக் கிரேஸியை எடுத்து வரச் செய்தேன். அதைப் பார்த்ததும் மானேஜர் முகத்தில் கலவரக்குறியையும் கண்டேன்.

முடிவாக, மானேஜர் நாகராஜ் பராங்குசத்தையும் எமானுவேலையும் கொலை செய்ததுடன், அவனுடைய ஆட்களை டாக்ஸி டிரைவர், நீலவேணி, ஆஸ்பத்திரியில் இருந்த அவனுடைய கூட்டத்தைச் சேர்ந்த ஆள், கான்ஸ்டபிள் ஆகியோரைக் கொலை செய்யத்தூண்டியிருக்கிறான் என்பவை உறுதி. எனவே மேரியும், ஜார்ஜும் விடுவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜார்ஜ் பிரேமாலாட்ஜில் பராங்குசம் இறந்துகிடப்பதைப் பார்த்த தகவலைப் போலீஸில் சொல்லவில்லை, மேரி பிரேமா லாட்ஜில் இருப்பதாக அவருக்குக் கடிதம் வந்ததைப் போலீஸில் சொல்லவில்லை. மந்திரவாதி உடையில் நீலவேணி கொலை செய்யப்பட்ட அன்று அவர் பிரேமாலாட்ஜுக்கு இரவில் சென்று திரும்பியதைப் போலீ

ஸில் சொல்லவில்லை என்பதற்காக வேண்டுமானால் ஜார்ஜின் மீது தனி வழக்குப் பதிவு செய்யலாம் இன்ஸ்பெக்டர்!''— இன்ஸ்பெக்டர் பேப்பரை மடித்தார்.

''சந்திரன் நீங்கள் மேல் நாடுகளில் இருக்க வேண்டியவர்!''—உணர்ச்சிப் பெருக்குடன் சந்திரனின் கரங்களைப் பற்றிக் கொண்டார் இன்ஸ்பெக்டர் தாமோதரன்.

முற்றும்

COMICS OF TIMES

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

மர்ம நாவல்கள்

ஒவ்வொன்றும் 50 காசுகள்

சைத்தான் கோட்டை — பி. டி. சாமி

புதிர் மனைவி — சத்தியவான் எம். ஏ.

பரபரப்பூட்டும் பாவை — கே. வி. கிருஷ்ணன்

ஐந்தாவது கொலையாளி — மனோகரன்

கல்லறையின் கூச்சல் — உடுமலை சந்திரன்

கொல்லாமல் விடமாட்டேன் — எம். கே. நாதன்

தபாலில் பெற விரும்புவோர் தனிப்பிரதிக்கு 70 காசுகளும், ஆறு பிரதிகளுக்கு ரூ. 4-00 ம் M. O. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீமகள் கம்பெனி

122, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.

கிளைகள்:- திருச்சி, மதுரை, கோயமுத்தூர், பெங்களூர்.